

கலைஞர்

திரை இசைப் பாடல்கள்

நெல்லை ஜெயந்தா





கலைஞர் மு.கருணாநிதி

காட்சிக்கு எழுதும் வசனங்களையே
ஆட்சிக்கு எழுதும் வசனங்களாய்
அமைத்து தமிழக அரசியலில்
திருப்பங்களை உருவாக்கிய
திரைமேதை!

தேக்கைச் சுருட்டி வீசும் களிறுகளையும்,
நாக்கைச் சுருட்டிப் பேசும் பேச்சால்
வீழ்த்திடலாம் என்று நாட்டிற்கே காட்டிய
நாவுக்கரசர்!

திரிகளுக்குள் சுருட்டி வைக்கப்படும்
கந்தகங்களாய் வரிகளுக்குள் சுருட்டி
வைக்கப்படும் வார்த்தைகளும்
வெடிக்குமென்று கவிதைகளால்
நிரூபித்த கவியரங்கத் திலகம்!

கடிதங்கள் என்பவை எழுத்துகளின்
தொகுப்பல்ல. எதிர்காலத்
தலைமுறைக்கு எடுக்கின்ற இனமான
வகுப்பென்று உடன்பிறப்புக்
கடிதங்களால் சமைத்துக் காட்டிய சமூக
விஞ்ஞானி!

திறமையை அடிக்கற்களாகவும்
உழைப்பை படிக்கற்களாகவும்
உருமாற்றி, இலக்கியம் - மேடைப்பேச்சு
- இதழியல் - அரசியல் - திரைத்துறை
எனும் ஐம்பெரும் துறைகளிலும் உச்சம்
தொட்ட ஒரே தனிமனித இராணுவம்!

கோடிக்கணக்கான தமிழர்களின்
நாடிக்கணக்காக இருந்து
ஐந்துமுறை ஆட்சிக்கு வந்த
அரசியல் சாணக்கியர்.

கலைஞர்
திரை இசைப் பாடல்கள்

தொகுப்பு

நெல்லை ஜெயந்தா

வெளியீடு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

(கலைஞர் நூற்றாண்டு சிறப்பு வெளியீடு)

கலைஞர் 100 1924 - 2023

கலைஞர் திரை இசைப் பாடல்கள்

தொகுப்பு : நெல்லை ஜெயந்தா ©

நூல் கிடைக்குமிடம் :

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
பொன்னி 31, குமாரசாமி ராஜா சாலை,
அடையாறு, சென்னை - 600 020
தொலைபேசி : 044 24937471

வாலி பதிப்பகம்
தாமிரபரணி
M 8, அழகாபுரி நகர்
இராமாபுரம், சென்னை 600 089
அலைபேசி : 99405 08595

KALAIGNAR THIRAI ISAI PADALGAL

Compiled by : **Nellai Jayantha**

First Edition : June 2024
No of pages : 192
ISBN : 978-81-961205-2-8


Price : Rs. 300/-

Published by
TAMILNADU IEYAL ISAI NADAGA MANDRAM
Ponni 31, Kumarasami Salai,
Adayar, Chennai - 600 028

Cover Painting : **Arasu Arts**
Book Layout by : **R.C.Mathiraj**
Typeset by : **P. Anandhan**


Printed at
Jothy Enterprises
Chennai - 600 005

அலைகடல்தான்
முத்தைத் தரும்!
நீங்களோ –
ஒரு
தமிழ்க்கடலையே
தந்த முத்து!



ஐயா முத்துவேலர்
அவர்களுக்கு
சமர்ப்பணம்!





காவிரிநாடன் தாம்பூலம்

- கலாப்ரியா -

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்னும் நன்னூல் சூத்திரத்திற்கேற்பக் காலம் தோறும் கவிதைகளில் புதுமை தோன்றி வந்திருக்கிறது. பாரதியின் வசன கவிதைகள் துவங்கி நவீன கவிதைகளும் தமிழில் வலுப்பெற்று விட்ட காலமிது. இந்த மாறுதலுக்கு கலைஞரின் கவிதைகள் ஒரு உந்துசக்தி என்பதை திராவிட இயக்க ஒவ்வாமையுள்ளவர்கள் ஒத்துக் கொள்ளத் தயங்குவார்கள். ஆனால் கலைஞர் எப்போதுமே காலங்களுக்கிடையே பாலங்கள் அமைத்தவர். அண்ணாவின் சொல்லோவியங்கள் கலைஞரின் கவிதைகளால் கவரப்பெற்றுக் கவிஞனானவன் நான் என்பதைச் சொல்வதில் எனக்குத் தயக்கமே இருந்ததில்லை. அண்ணா தன் எழுத்துக்களில் சொல்லியே நானெல்லாம் வால்ட் விட்மனும் ராகுல்ஜியும் படிக்க ஆரம்பித்தேன்.

1960-70களில் கலைஞரின் கவியரங்க மேடை மிகப் பிரபலமானது, அதில் அவர் பலருக்கும் முன்னோனடியானவர். இதெல்லாம் பலரும் அறிந்ததே. அவர் ஒரு சிறந்த பாடலாசிரியர் என்பதைச் சிலரே அறிவார்கள். அவர் திரைப்பாடல்களிலும் தனிச் சிறப்புப் பெற்றவர் என்பதைத் திரு நெல்லை ஜெயந்தா அவர்கள் இதில் திறம்பட நிறுவியுள்ளார்.

என்னிடம் சிலர் கேட்பதுண்டு நீங்கள் ஏன் திரைப்படங்களுக்குப் பாடல் எழுதக்கூடாது என்று. செய்யலாம் என்று நானும் நினைத்ததுண்டு, சொல்லியும் இருக்கிறேன். ஆனால் நா. முத்துக்குமார் மூலம் அறிமுகமான பிரபல இசையமைப்பாளர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது 'நீங்க எப்படி எழுதினாலும்.. மியூசிக் போடலாங்க ஆனா, மீட்டர்ல வந்து பாட்டு உக்காரணும்' அப்பத்தான் எங்களைப்போல இசையமைப்பாளர்களுக்கு வசதி என்று கூறினார்.

அது ஒரு முக்கியமான விஷயம். அதிலும் கலைஞர் விற்பன்னர் என்று பல செய்திகள் உண்டு. கலைஞர் எழுதிய பிரபலாமான 'காகித ஓடம் கடலலை மீது போவது போலே' பாடல் பிறந்தவிதம் பற்றி ஒரு சுவையான கதை உண்டு.

அந்தப் பாடலை எழுதுவதற்கு பாடலாசிரியர் மாயவனாதன் இசையமைப்பாளர் டி.கே.ராமமூர்த்தி ஆகியோர் அமர்ந்துள்ளனர். எதனாலோ டியூன் போடத் தாமதமாகிறது. மாயவனாதன், 'சட்டுப் புட்டுன்னு டியூனைச் சொல்லுங்க' என்று எரிச்சலுடன் கேட்டிருக்கிறார். ''என்னய்யா பெரிய டியூன், 'மாயவனாதா.. மாயவனாதா..' இதுதான் சந்தம், பாட்டை எழுதுய்யா'' என்று தானும் சற்று சூடாகப் பதிலளித்திருக்கிறார் ராமமூர்த்தி. கவிஞரும் கோபப்பட்டு எழுந்து சென்று விட்டார். அந்த நேரம் கலைஞர் அங்கே வந்து என்ன நடந்தது என்று கேட்க விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ''அவ்வளவுதானே, அதே சந்தத்திற்கு இந்த வரிகள் சரியா பாருங்கள்..'' என்று 'காகித ஓடம்... கடலலை மீது' என்று சொன்னாராம். அவர் சொன்ன அழகான டியூனில் அப்படியே வந்து 'கிளையமரும் பறவை' போல உட்கார்ந்திருக்கிறது அற்புதமான பாடல்.

இதே போல ஒரு சந்தர்ப்பத்தை பாசக்கிளிகள் படம் பற்றி அந்தப் படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய கவிஞர் இளையபாரதி கூறுவதாக இந்த நூலில் உள்ளது: "தென்பாண்டி சிங்கம்" கதையை கொஞ்சம் சமூக அக்கறைகொண்ட கதையாக மாற்றி பாசக்கிளிகள் திரைப்படம் வெளிவந்தது. கலைஞர் கதை வசனம் எழுத அமிர்தம் இயக்கினார். ஒருமுறை பாடல் எழுதுவதற்கு அவரிடம் டியூன் கொடுத்துவிட்டு பேசிக் கொண்டிருந்தேன். உனக்கு லேட்டாயிடுச்சு, வீட்டுக்கு கிளம்பு என்றார். அவரின் வீட்டுக்குப் பின்புறமுள்ள ஹோட்டலில் ஆர்டர் பண்ணிட்டு சாப்பிட உட்காருகிறேன். கலைஞரிடமிருந்து அழைப்பு. "ஒரு இருபது நிமிடத்தில் திரும்பி வர முடியுமா, டியூனுக்கு ரெண்டு லைன் எழுதியிருக்கேன். அப்படியே சொல்கிறேன். எழுதிக்கிறியா" என்றார். கல்லாவிலிருந்து டிஷ்யூ பேப்பரை எடுத்து அவர் சொன்ன ரெண்டு வரிகளையும் எழுதிக் கொண்டேன். ஆர்டர் பண்ணிய சாப்பாட்டை அப்படியே விட்டுவிட்டு அவரின் வீட்டுக்குச் சென்றேன். குழந்தை மாதிரி, "நீ சொன்ன டியூனுக்கு நான்கு வரி எழுதிட்டேன்யா... இது டியூனுக்கு வருகிறதா பாடிக்காட்டு" என்றார். ''பாடினேன்.'' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்

''தென்றல் என்னும் தேர் ஏறி - தமிழ்
மன்றம் வந்த முல்லை மலரே ''

- என்கிற பல்லவியோடு ஆரம்பிக்கிற பாடல்தான் அது என்று கேட்ட நினைவு. அதில்-

“நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூஷணி நான் பாடும் ராகம்”

என்று ஒரு வரி. நாசிகாபூஷணி என்ற ராகத்தில் அமைந்த பாடல் இது. அதையே நாசூக்காக பாடல் வரிகளிலும் கொண்டு வந்து விட்டார் கலைஞர்.

இந்தப் பாடலை முழுவதும் படித்துப் பாருங்கள், அத்தோடு ‘யூ டியூபில்’ கேட்டும் பாருங்கள். அப்போது தெளிவாகும் கலைஞரின் இசைஞானமும் ‘கவிதா விலாச’மும்.

பராசக்தி படத்தில் வரும் ‘பூமாலை நீயே... புழுதி மண் மேலே’ பாடலில் வரும் ‘‘பாராயோ என் பன்னீர்செல்வமே சீரோடு வாழ்ந்தோம் வேரோடு சாய்ந்தோம்” என்று எழுதியிருக்கிறார். படத்தில் அந்தக் குழந்தை பிறந்ததுமே ‘பேரன் பன்னீர் செல்வம் பிறந்திருக்கிறான்’ என்று மருத்துவச்சி சொல்வார். பன்னீர் செல்வம் பெரியாருக்கு முன் நீதிக்கட்சியின் தலைவராய் இருந்தவர், இந்தி எதிர்ப்புப் போராளி என்பதெல்லாம் புதிய வாசகர்களுக்குத் தெரியாத செய்தி. ஆனால் அவரையெல்லாம் காலகாலத்திற்கும் நினைவு படுத்த, கலைஞர் அவரைத் தன் பாடலில் வைத்திருக்கிறார். நெல்லை ஜெயந்தா அதைப் பகிர்ந்தும் அளிக்கிறார்.

பாகப்பிரிவினை படத்தில் வருகிற, ‘‘ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ” பாடலுக்கு இது ஒரு முன்னோடி. இதில் வருகிற ‘‘பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும் பசி நீங்கவே உணவும் பறந்தோடி வந்திடும்” என்று எங்கள் பதின் பருவத்தில் பேசிப்பேசி மகிழ்ந்த வரிகளையெல்லாம் நினைவு படுத்தி வாசிக்க வாசிக்க இந்த நூல் மிகவும் நிறைவு தந்த ஒன்றாய் அமைந்திருப்பதை உணர்கிறேன்.

‘நாம்’ படத்தின் சிதைந்த பிரதிகளே அபூர்வமாகப் பார்க்கக் கிடைக்கையில் அதன் பாடல்களைத் தொகுத்திருப்பது ஒரு மகத்தான காரியம். அதன் அரசியல் வாடையற்ற வசனத்தைப் பாடல்கள் மூலம் தீர்த்து வைத்திருக்கிறார் கலைஞர்.

‘‘சிலசில இடங்களில் பணத்தோட்டம் - அது
செல்வக் குமரி... கோட்டம்! இப்படிப்
பலபல கருத்துக்கள் சொல்லும் தேனாறு
பகுத்தறிவூட்டும் லட்சிய வரலாறு -
அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே.”

படத்தின் கதநாயகனான குமரனை அவனது தோழர்கள் வாழ்த்திப் பாடுவதாக அமைந்த பாடலில் அண்ணாவின் நூல்களான ‘பணத் தோட்டம்’ ‘குமரிக்கோட்டம்’ எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார். (இவற்றையெல்லாம் எம்.ஜி.ஆர். தன் படங்களுக்குத் தலைப்பாக வைத்தார்)

நீ... இராவிடம் இருள் சூழும்
என்ற நிலை தந்த
திராவிடப் பொன்னழகி...
வாழ்ந்திடுவாய் விண்ண முதே -

என்ற அம்மையப்பன் படப்பாடல் வரிகளை எல்லாம் படித்துப் பாடித்து ரசிக்கத் 'தோது' வாய்த் தொகுத்துள்ளார் 'நெல்லை' ஜெயந்தா.

இந்த நூலில் பாடல்கள் இடம் பெற்ற படங்கள் பற்றிய குறிப்புகளையும், அது சார்ந்த பல சுவாரசியாமான தகவல்களையும் தந்திருப்பது குறிப்பிடத் தகுந்தது. 'பூம்புகார்' படம் பற்றிய செய்திகள் எல்லாம் ஒரு தமிழ்த் திரை வரலாற்று ஆவணம் எனச் சொல்லலாம்.

நான் ஏதோ 1950களில் வந்த படப் பாடல்களாகக் குறிப்பிடுகிறேன் என்று எண்ண வேண்டாம்.

2005 இல் வெளிவந்த 'மதுரை மீனாட்சி' படத்தில் வரும் வரிகள் ''நீதிமன்றத் துலாக்கோலே சாயலாமா நிரபராதி நியாயமின்றிச் சாகலாமா" என்று எழுதியிருக்கிறார்.

அதே போல மண்ணின் மைந்தன் படத்தில்

கண்ணை காக்கும் கடமைதான்
இமைக்குப் பெரிய தொல்லையா
கடமை தவறி நடப்பதற்கு
காவல் எதற்கு சொல்லையா

என்று கண்ணுக்கு மை தீட்டும் கச்சிதத்தோடு எழுதியுள்ளார் கலைஞர்.

நான் இங்கே பறித்துத் தந்திருப்பதெல்லாம் கை கொள்ளுமளவுக்கான மலர்கள்தான். தம்பி நெல்லை ஜெயந்தா தொகுத்தளித்துள்ள கலைஞரின் இந்த ஐம்பது பாடல்களின் வரிகள் தமிழ்த்தேன் மாந்த விரும்பும் அஞ்சிறைத் தும்பிகளுக்கு ஒரு மலர்க்காடு. அந்தக் காலத்தை அசை போட நினைப்பவர்களுக்கு காவிரிநாடன் தரும் தாம்பூலம். அதன் வண்ணம் முகர்ந்து அதிசயிப்பவர்களுக்கு எந்த நாளும் இது ஒரு வாசனைக் கருவூலம்.

வாழ்த்துகளுடன்

கலாப்ரியா



தமிழ் எழுத்துகளின் கூட்டுத்தொகை கலைஞர்

- நெல்லை ஜெயந்தா -

நெல்லைச் சீமையில் குறிஞ்சியும் மருதமும் கூட்டணி வைத்திருக்கும் குட்டிக்கிராமம் தேவநல்லூர் என் தந்தை நிலம்.

எங்கள் தென்கரை தெற்குத் தெருவிலிருக்கும் அண்ணன் முத்துவும் வடக்குத் தெருவிலிருக்கும் அத்தான் ராசாவும் கலைஞரின் பரம ரசிகர்கள்.

எழுபதுகளின் மையப் பகுதியில் தமிழின் மீதான ஆவலை என் ஆறாம் வகுப்புத் தமிழாசிரியர் ஐயா நம்பி எனக்குள் விதையாய் ஊன்றிக் கொண்டிருந்த வேளை. அப்படிப்பட்ட ஒரு நாளில்தான் அண்ணன் முத்து வசனப் புத்தகமொன்றை வாசித்துக் காட்டினார். அது... பூம்புகார்.

அன்று அவர் இதழ்களிலிருந்து தெறித்து என் இதயத்தில் விழுந்து இமயமாகிவிட்டது ஒரு பெயர். அது... கலைஞர்.

அரசியல் கூட்டங்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் பின்நின்று அவரை எட்டி எட்டிப் பார்த்த நான் என்றுமே நினைத்ததில்லை தன்னைப் பார்க்க வருமாறு என்னை அழைப்பாரென்று.

அது மட்டுமா...?

எழுபதுகளின் மையப்பகுதியில் எனக்குள் மையமிட்டிருந்த கலைஞர் பெருமானே என் கவித்திறனைப் பாராட்டி முழுப்பக்க அளவு முரசொலியில் (11.12.2003) எழுதியதும் -

தனக்கு வந்தக் கடிதங்களில் தனக்குப் பிடித்தக் கடிதங்கள் என்று அவர் முரசொலியில் (24.12.2003) குறிப்பிட்ட ஏழு கடிதங்களுள் ஒன்றாய் என் கடிதமும் இடம் பிடித்ததும் -

"சிவிகையில் வைத்து சிறப்புச் செய்யவேண்டியக் கவிஞராக இவரை ஆக்கிடும் காலமொன்று வரும்" என்று என்னை அவர் புகழ்ந்து எழுதியதும்

என் மகள் மணவிழாவிற்கு நேரில் வந்து வாழ்த்தியதும்

அன்னைத் தமிழே எனக்குத் தந்த ஆசிகளன்றி வேறென்ன...?

இன்று கலைஞர் பெருமான் தமிழ்த் திரைப்படங்களுக்கு எழுதிய பாடல்களைத் தொகுக்க வைத்து கலைத்தமிழின் கருணையும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு திரு சிலோன் விஜயேந்திரன் ஒரு தொகுப்பை வெளியிட்டிருந்தாரென்றும் அது முழுமை பெறாத தொகுப்பென்றும் பார்த்த சிலர் பகிர்ந்திருக்கிறார்கள்.

இத்தொகுப்பு உருவாவதற்கு மூல முதற்காரணம் தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத்தின் உறுப்பினர் - செயலரும் நாடறிந்த அரசியல் பிரமுகருமான சகோதரி விஜயா தாயன்பன் அவர்கள்தான் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் திரை இசைப் பாடல்களை வைத்து மெல்லிசை நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்றும், அவருடைய பாடல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் வருத்தப்பட்ட அவர்கள் "தம்பி நீங்கள் ஏன் தொகுக்கக்கூடாது" என்று கேட்ட ஒரு கேள்விக்கான விடைதான் இத்தொகுப்பு.

தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத் தலைவரும், சிவாஜிக்கும் எஸ்.எஸ். இராஜேந்திரனுக்கும் பிறகு, நம்மை வசன உச்சரிப்பில் வசப்படுத்திய திரு வாகை சந்திரசேகர் அவர்களும் வாழ்த்தி வரவேற்றதோடு, கலைஞர் வசனத்தில் தான் பங்கேற்ற சில படங்களின் செய்திகள் சிலவற்றையும் பகிர்ந்து கொண்டார்கள்.

சகோதரி விஜயா தாயன்பன் அவர்கள் பாடல்கள் தொகுக்கப்படும் செய்தியை சொன்னதும் திருமிகு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் "பணி சிறக்கட்டும்" என்று ஆனந்தித்து அனுமதித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு செயலாளர் திரு.சண்முகம், இ.ஆ.ப. அவர்களும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

தொகுப்பு தயாராவதைப் பார்த்த பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் "இது கலைஞருக்கு நீ வடிக்கும் கல்வெட்டு" என்று சொன்னதை மறக்க முடியாது என்னால்.

இவர்களுக்கான நன்றிக்கசிவு சின்னக் குற்றாலமாகவே சேர்ந்து விட்டது என்னுள்.

முகப்பு அட்டையில் என் பெயரிருந்தாலும் தொகுப்பு உருவாக நான் மட்டுமே காரணமல்ல.

உழைத்தது நானாக இருந்தாலும் உதவியவர்கள் பலர். முக்கியமாக திரைத்தகவல் திலகம் திருநின்றவூர் தி.சந்தானகிருஷ்ணன் அவர்கள். இத்தொகுப்பில் எந்தத் தவறும் வந்துவிடக்கூடாதென்று களத்தில்

நின்ற என்னை கவனப்படுத்திக் கொண்டே இருந்தார். தகவல்களை கேட்ட பொழுதெல்லாம் தாயுள்ளத்தோடு தந்துதவினார். 22 படங்களின் நிழற்படங்களை எடுத்தனுப்பினார். கோபுரத்தையே உள்ளமாய் வைத்திருக்கும் அவருக்கு கோடி நன்றிகள்.

தொழில்நுட்ப வளர்ச்சி தொடாத ஒரு கிராமத்திலிருந்து கொண்டே திரைப்படப்பாடல்களின் ஆய்வாளராக தன்னை நிலைநிறுத்தியிருக்கும் திரு.பொன்.செல்லமுத்து அவர்கள் ஒரு சில பாட்டுப் புத்தகங்களை தந்துதவினார். அவருக்கும் என் நன்றி.

மிகச் சிறந்த கலை விமர்சகராக தன்னை வெளிப்படுத்தியிருக்கிற சகோதரர் கவிஞர் கலாப்பிரியாதான் இத்தொகுப்பை அணிந்துரைக்கப் பொருத்தமானவர் என்று நினைத்தேன். என் அன்பினும் பன்மடங்கு அவசரத்தோடு அணிந்துரையை ஆராய்ச்சி உரையாகவே தந்துதவிய கவிஞருக்கு நன்றி.

சில படங்களின் பாட்டுப்புத்தகம் கிடைக்காத நிலையில் படங்களைப் பார்த்து எழுதிக் கொடுத்த என் மனைவி உமாவிற்கும் –

நிழற் படங்கள் சேகரித்து கொடுத்த மகன் பாரதி சங்கர் (எ) பிரேம் சங்கர் மகள் லெட்சுமிப்ரியா ஆகியோருக்கு நன்றி.

தகுந்த நேரம் இது என்று எண்ணாமல் பாடலை நான் தந்த நேரத்தில் எல்லாம் தட்டச்சு கொடுத்த நண்பர் ப.ஆனந்தன், மனம் மயக்கும் கலை நயத்தோடு வடிவமைத்த நண்பர் ஆர்.சி.மதிராஜ், இருவருக்கும் நன்றி.

கலைஞர்...

தமிழ்நாட்டில் சாதாரண ஒரு குக்கிராமத்தில் –

பொருளாதாரத்தில் எளிய நிலையிலிருந்த குடும்பத்தில் –

சாதிய அமைப்பு வேரூன்றி இருந்த காலத்தில், பெரும்பான்மையற்ற ஒரு பின்தங்கிய சமூகத்தில்

பிறந்தவர் என்பதும்,

உயர்நிலைக் கல்வி வரை மட்டுமே கற்றவர் என்பதும்,

கலைஞருக்கு சமூகத்திலிருந்த இரும்புத் தடைகள்,

இளம் வயதில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து 75 ஆண்டுகளுக்கும் மேலாக அதற்கு ஆசிரியராக இருந்ததும் –

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாய் புகழ்பெற்ற ஒரு கட்சியின் தலைவராக இருந்ததும் –

போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களில் ஜெயிப்பதற்காக உழைத்ததும் – ஜெயித்ததும் –

ஐந்து முறை ஆட்சியைப் பிடித்து தமிழகத்தின் முதல்வராக பதவி

வகித்ததும் -

நாட்டின் பிரதமரையே தெரிவு செய்யும் தலைவர்களுள் ஒருவராக இந்திய அரசியலில் இடம் பெற்றதும் -

அவர் தனக்குத்தானே செய்து கொண்ட தங்க கூண்டுகள்

ஆக அப்படிப்பட்ட இரும்புத் தடைகளையும், இப்படிப்பட்ட தங்கக் கூண்டுகளையும் தகர்த்து விட்டுத்தான் அவர் 80 படங்கள் (பிறமொழிப் படங்கள் உட்பட) பணியாற்றி இருக்கிறார்.

சினிமாவையே முழு நேரத் தொழிலாக வைத்திருப்பவர்கள் கூட 80 படங்களில் இடம் பெறுவது என்பது எளிதான காரியமல்ல, உழைப்பிலும் திறமையிலும் கலைஞருக்கு நிகரான இன்னொருவர் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

கலைஞரின் கலை உலகம் பற்றி நான் சொல்வது இருக்கட்டும் அதில் ஆழங்கால் பட்டவர்கள் என்ன சொல்கிறார்கள் பாருங்கள்.

"எழுத்துத் துறையில் அண்ணா, கலைஞர், சிற்றரசு, ஆசைத்தம்பி, ஏ.கே.வேலன், பாரதிதாசன், கண்ணதாசன், ப.கண்ணன் போன்ற எழுத்தாளர்கள் வெற்றி நடைபோட்டுக் கொண்டு வந்தார்கள். எஸ்.எஸ். ஆர். 'இந்த காலகட்டத்தில் சினிமா உலகின் திறவுகோல் (சாவி) எங்களிடம் இருக்கிறது' என்று மிரட்டினார்...

எனக்குத் தெரிந்தவரை நாவலரையும் பேராசிரியரையும் தவிர மற்ற தி.மு.க. முக்கியஸ்தர்கள் பெரும்பாலோர், சினிமாத் துறையினுள் வந்து சேர்ந்திருந்த காலம் அது. இவர்கள் அனைவரிலும் முக்கியமாகக் கருதப்பட்ட திரை எழுத்தாளர் கலைஞர்தான்... இன்றும் என் கருத்து இதுதான். "அண்ணாவின் திரைப்படப் படைப்புகளில் அறிவு, அழகு, ஆழம் உண்டு. அதோடு கலைஞர் படைப்பில் வேகம் இருந்தது. திராவிடப் பாரம்பரிய எழுத்தாளர்களில் கலைஞர்தான் மேலோங்கி நின்றார்."

தனது "தமிழ்த் திரைப்பட வரலாறு" நூலில் இப்படிப் பதிவு செய்திருப்பவர் திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான திரு. முக்தா வி.சீனிவாசன். அதிலும் அவர் காங்கிரஸ் பிரமுகர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

மாடர்ன் தியேட்டர்ஸிற்கும் கலைஞருக்கும் இருந்த உறவு எப்படிப்பட்டது என்பதை மந்திரிகுமாரி பாடல் செய்தியில் பதிவு செய்துள்ளேன்.

திரு டி.ஆர்.சுந்தரம் அவர்கள் பற்றி திரு. ரா.வேங்கடசாமி எழுதிய 'முதலாளி' எனும் நூலில் ஒவ்வொருவருக்கும் அங்கு தரப்பட்ட மரியாதை என்னவென்பதை தெளிவாகத் தந்திருக்கிறார். அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படம் சம்பந்தமான செய்திகளெல்லாம் ஆச்சரியமூட்டுகின்றன நமக்கு.

"டி.ஆர்.எஸ். ரிகர்சர் ஹாலில் உள்ள பரந்த வெளியில் தனியாக ஒரு

நாற்காலியில் அமர்ந்திருப்பார். மாலை வேளையில் அவர் இராஜாங்கம் நடத்தும் இடமும் அதுதான். யார் வந்தாலும் அவர் எதிரில் நின்று கொண்டுதான் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும். இதில் விதிவிலக்குப் பெற்றவர் கலைஞர் ஒருவர் மட்டுமே."

இப்படிப் பதிவு செய்திருக்கிறார் திரு.ரா.வேங்கடசாமி.

கட்சியில் எந்த ஒரு பெரிய பதவியிலும் இல்லாத நேரத்தில் ஏன்... தி.மு.க.வின் முக்கியத் தலைவர்களுள் ஒருவராக உருவாகாத காலத்தில்... தமிழ்நாட்டில் மு.கருணாநிதி என்றால் யாரென்றே தெரியாத நேரத்தில்... இருபத்து நான்கு வயது இளைஞராக வந்து சேர்ந்த நேரத்தில் கலைஞருக்கு கிடைத்த மரியாதை என்பது அவரின் எழுத்தாற்றலை மட்டுமே பார்த்து வியந்து தரப்பட்ட மரியாதை.

1942இல் 'பேசும்படம்' சினிமா மாத இதழைத் தொடங்கி அதை தமிழகத்தின் இணையில்லாத சினிமா பத்திரிகையாக வளர்த்துக் காட்டிய திரு.டி.வி.ராம்நாத், 27 படங்களின் வசனங்கள் அடங்கிய "திரை வளர்த்த தமிழ்" என்று நூலை 1987இல் வெளியிட்டுள்ளார். அதில் கலைஞரைப் பற்றி இப்படிப் பதிவு செய்கிறார்.

"... திரைப்பட ரசிகர்கள் இவரது எழுத்தில் பெறும் ஈடுபாட்டையும், லயிப்பையும் கொண்டனர். தயாரிப்பாளர் - டைரக்டர் பெயர்களுக்கு இணையாக, சுவரொட்டிகளில் வசனகர்த்தாவின் பெயரும் இடம்பெற முன்னோடியாக இருந்தவர் கருணாநிதி. கதை வசனம் மு.கருணாநிதி என்று ஒரு படத்தின் விளம்பரம் வந்தாலே அதன் வெற்றிக்கு உத்திரவாத முத்திரை குத்தப்பட்டது."

கலைஞரின் திரைப்பயணம் பற்றி திரு. சோ.இராமசாமி என்ற சொல்கிறார் பாருங்கள்...

"அவருடைய எழுத்திலோ அவருடைய தமிழ் பற்றும் தமிழைக் கையாள்வதில் அவர் பெற்றுள்ள லாவகமும், வரிக்குவரி காணக் கிடைக்கும். அவருடைய இயல்பான நகைச்சுவை உணர்வு, அவர் பெற்றுள்ள வாதத் திறமை, அவருடைய தமிழ் நடையிலுள்ள வேகம், எல்லாமாகச் சேர்ந்து திரைக்கதை வசனகர்த்தாக்களில் முதன்மை இடத்தை அவருக்குப் பெற்றுத் தந்தது. திரைக்கதை அமைப்பதிலும் அவர் வல்லவர் என்பதை சில டைரக்டர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்."

கலைஞரோடு நிறைய விஷயங்களில் முரண்பட்டு நின்ற திரு. சோ. அவர்கள் கூட திரை உலகில் கலைஞர் முதன்மை இடத்திலிருந்தார் என்று பதிவு செய்கிறார் என்றால் கலைஞரின் எழுத்தாற்றலுக்கு வேறென்ன சாட்சி வேண்டும்.

வரலாற்று புத்தகங்களை எப்படி எழுத வேண்டும் என்பதற்கு வாழும்

உதாரணமாக இருக்கின்ற க.திருநாவுக்கரசு அவர்கள் தனது "திராவிட இயக்கமும் திரைப்பட உலகமும்" என்கிற நூலில் கலைஞரின் திரைஉலக படைப்புகள் குறித்து எழுதியதையே இந்த என் தொகுப்புரையின் முத்தாய்ப்பாக பதிக்க விரும்புகிறேன்.

"ஓர் எழுத்தாளன் என்பவன் எவ்வளவு வயதானாலும் எல்லாக் காலத்தோடும் தன் எழுத்து வன்மையைக் காட்டக் கூடியவனாக இருக்க வேண்டும். சமூக வயப்பட்ட எப்பிரச்சினையையும் எடுத்துச் சொல்லுகின்ற ஆற்றல் எக்காலத்தும் எழுத்தாளனுக்கு கைவந்ததாக இருக்க வேண்டும். எழுத்தாளனுக்கு முதுமையில்லை. அதனை எப்போதும் அவன் எண்ணத்தில் ஏந்திக் கொள்பவனும் அல்ல. அவன் இயற்கையால் வளர்க்கப்பட்டு இயல்பாகவே இளமையாய் இருப்பவன் என்பதை கலைஞர் தம் வாழ்நாளில் மெய்ப்பித்துக் காட்டினார். கலைஞர் திரைப்படத் துறையோடு தொடர்பு கொண்ட ஓர் எழுத்தாளனாக மட்டுமல்ல, பல்வேறு சிந்தனைப் பரிமாணங்களை கொண்டவராக அவர் பணியாற்றினார்."

இப்படி எல்லோரும் கொண்டாடுகின்ற எழுத்துக்குச் சொந்தக்காரர் கலைஞர். சுருக்கமாய்ச் சொன்னால் எழுத்துக்களின் கூட்டுத்தொகை கலைஞர்.

இதோ, கலைத்தாயை வாழ்வித்த கலைஞர், படங்களுக்கு எழுதிய பாடல்களின் தொகுப்பை உங்கள் பார்வைக்குத் தந்திருக்கிறேன். படியுங்கள். ரசியுங்கள்.

நெகிழ்வுடன்

நெல்லை ஜெயந்தா

பட்டியல் 1

கலைஞர் பங்கேற்ற திரைப்படங்கள்

படவரிசை	வருடம்	படப் பெயர்	கலைஞரின் பங்கு	வெளியான தேதி
1	1947	ராஜகுமாரி	உதவி ஆசிரியர்	11.04.1947
2	1948	அபிமன்யூ	உதவி ஆசிரியர்	06.05.1948
3	1950	மருதநாட்டு இளவரசி	கதை வசனம்	02.04.1950
4	1950	மந்திரிகுமாரி	கதை வசனம் பாடல்	24.06.1950
5	1951	தேவகி	வசனம்	21.06.1951
6	1951	மணமகள்	திரைக்கதை வசனம்	15.08.1951
7	1952	பராசக்தி	திரைக்கதை வசனம் பாடல்	17.01.1952
8	1952	பணம்	திரைக்கதை வசனம்	27.12.1952
9	1953	நாம்	கதை வசனம் பாடல்	05.03.1953
10	1953	திரும்பிப் பார்	கதை வசனம்	10.07.1953
11	1954	மனோகரா	திரைக்கதை வசனம்	03.03.1954
12	1954	மலைக்கள்ளன்	வசனம்	22.07.1954
13	1954	அம்மையப்பன்	கதை வசனம் பாடல்	24.09.1954
14	1956	ராஜா ராணி	கதை வசனம் பாடல்	25.02.1956
15	1956	ரங்கோன் ராதா	வசனம் பாடல்	01.11.1956
16	1957	புதையல்	கதை வசனம்	10.05.1957
17	1957	புதுமைப்பித்தன்	கதை வசனம்	02.08.1957
18	1960	குறவஞ்சி	கதை வசனம் பாடல்	04.03.1960
19	1960	எல்லோரும் இந்நாட்டு மன்னர்	திரைக்கதை வசனம்	01.07.1960
20	1961	அரசிளங்குமரி	கதை வசனம்	01.01.1961
21	1961	தாயில்லாப் பிள்ளை	திரைக்கதை வசனம்	18.08.1961
22	1963	இருவர் உள்ளம்	திரைக்கதை வசனம்	29.03.1963
23	1963	காஞ்சித் தலைவன்	கதை வசனம் பாடல்	26.10.1963

24	1964	பூம்புகார்	திரைக்கதை வசனம் பாடல்	18.09.1964
25	1965	பூமாலை	திரைக்கதை வசனம் பாடல்	26.10.1965
26	1965	அவன் பித்தனா?	திரைக்கதை வசனம்	29.04.1965
27	1966	மறக்க முடியுமா?	திரைகதை வசனம் பாடல்	12.08.1966
28	1966	மணிமகுடம்	கதை வசனம்	09.12.1966
29	1967	தங்கதம்பி	கதை வசனம்	09.01.1967
30	1967	வாலிப விருந்து	கதை வசனம்	02.06.1967
31	1970	எங்கள் தங்கம்	கதை	09.10.1970
32	1972	பிள்ளையோ பிள்ளை	கதை திரைக்கதை வசனம்	23.06.1972
33	1973	பூக்காரி	தயாரிப்பு	25.10.1973
34	1975	அணையா விளக்கு	கதை	15.08.1975
35	1978	வண்டிக்காரன் மகன்	திரைக்கதை வசனம்	30.10.1978
36	1979	நெஞ்சுக்கு நீதி	கதை, திரைக்கதை வசனம், பாடல்	27.04.1979
37	1979	ஆடு பாம்பே	கதை வசனம்	30.06.1979
38	1980	காலம் பதில் சொல்லும்	வசனம்	30.06.1980
39	1981	குலக்கொழுந்து	திரைக்கதை வசனம்	23.01.1981
40	1981	மாடிவீட்டு ஏழை	திரைக்கதை வசனம்	22.08.1981
41	1982	தூக்கு மேடை	கதை வசனம் பாடல்	28.05.1982
42	1983	இது எங்க நாடு	தயாரிப்பில் பங்கேற்பு	25.02.1983
43	1984	திருட்டு ராஜாக்கள்	தயாரிப்பில் பங்கேற்பு	02.03.1984
44	1984	காவல் கைதிகள்	தயாரிப்பில் பங்கேற்பு	23.10.1984
45	1985	குற்றவாளிகள்	தயாரிப்பில் பங்கேற்பு	07.06.1985
46	1986	காகித ஓடம்	தயாரிப்பில் பங்கேற்பு	14.01.1986
47	1986	பாலைவன ரோஜாக்கள்	திரைக்கதை வசனம்	01.11.1986
48	1987	நீதிக்கு தண்டனை	கதை திரைக்கதை வசனம்	01.05.1987
49	1987	ஒரே ரத்தம்	கதை வசனம் பாடல்	08.05.1987
50	1987	வீரன் வேலுத்தம்பி	கதை வசனம் பாடல்	03.06.1987
51	1987	சட்டம் ஒரு விளையாட்டு	திரைக்கதை வசனம்	21.10.1987
52	1987	புயல் பாடும் பாட்டு	கதை வசனம்	21.10.1987

53	1988	மக்கள் ஆணையிட்டால்	திரைக்கதை வசனம் பாடல்	29.01.1988
54	1988	பாசப் பறவைகள்	திரைக்கதை வசனம்	29.04.1988
55	1988	இது எங்கள் நீதி	திரைக்கதை வசனம்	08.11.1988
56	1988	பாடாத தேனீக்கள்	திரைக்கதை வசனம்	08.11.1988
57	1989	தென்றல் சுடும்	திரைக்கதை வசனம்	10.03.1989
58	1989	பொறுத்தது போதும்	திரைக்கதை வசனம்	15.07.1989
59	1989	நியாயத்தராசு	திரைக்கதை வசனம்	11.08.1989
60	1989	பாசமழை	கதை வசனம்	28.10.1989
61	1990	காவலுக்குக் கெட்டிக்காரன்	திரைக்கதை வசனம் பாடல்	14.01.1990
62	1993	மதுரை மீனாட்சி	பாடல்கள் திரைக்கதை வசனம்	24.02.1993
63	1995	தொண்டன்	நடிப்பு	10.03.1995
64	1996	புதிய பராசக்தி	திரைக்கதை வசனம்	22.03.1996
65	2005	கண்ணம்மா	திரைக்கதை வசனம் பாடல்	04.02.2005
66	2005	மண்ணின் மைந்தன்	திரைக்கதை வசனம் பாடல்	05.03.2005
67	2005	பாசக்கிளிகள்	கதை வசனம் பாடல்	15.01.2006
68	2008	உளியின் ஓசை	கதை வசனம் பாடல்	04.07.2008
69	2010	பெண் சிங்கம் (நீயின்றி நானில்லை)	கதை திரைக்கதை வசனம் பாடல்	03.06.2010
70	2011	இளைஞன் (தாய் காவியம்)	கதை திரைக்கதை வசனம்	15.01.2011
71	2011	பொன்னர்சங்கர்	கதை திரைக்கதை வசனம்	09.04.2011

பட்டியல் 2

கலைஞர் பங்கேற்ற பிறமொழி திரைப்படங்கள்

பட வரிசை	வருடம்	படப் பெயர்	மொழி	வெளியான தேதி
1	1951	ஆடஜென்மா	தெலுங்கு	24.11.1951
2	1954	மனோகர்	இந்தி	22.05.1954
3	1954	மனோகரா	தெலுங்கு	03.06.1954
4	1957	பராசக்தி	தெலுங்கு	11.01.1957
5	1957	வீரகங்கணம்	தெலுங்கு	16.05.1957
6	1960	கொப்ப இன்டி அம்மாயி	தெலுங்கு	1960
7	1960	ஆயே பிர்ஸை பஹார்	இந்தி	1960
8	1967	ஸ்த்ரி ஜென்மா	தெலுங்கு	31.08.1967
9	1980	அம்மாயிக்கு மொகுடு மாமகு யமுடு	தெலுங்கு	20.11.1980


பொருளடக்கம்

வரிசை எண்	படம்	ஆண்டு	பக்கம்
1.	மந்திரிகுமாரி	1950	24–26
		1. ஊருக்கு உழைப்பவன்டி	
2.	பராசக்தி	1952	27–30
		1. இல்வாழ்வினிலே ஒளிஏற்றும்	
		2. பூமாலை நீயே புழுதிமண் மேலே	
3.	நாம்	1953	31–41
		1. மாரி மகமாயி மாரி	
		2. பேசும் யாழே பெண்மானே	
		3. மணமில்லா மலர் நானம்மா	
		4. பேசும் யாழே பெண்மானே	
		5. வருவாய் வருவாய் வைபோக	
		6. புதியதோர் பாதை வகுப்போம்	
		7. வாழ்க வாழ்க வாழ்கவே	
		8. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்	
4.	அம்மையப்பன்	1954	42–50
		1. அம்மையப்பா	
		2. நீலக்கடல்	
		3. காதல் துரையே	
		4. காதல் துரையே (சோகம்)	
		5. சின்னப் புதுமலரே	
		6. சிதைந்ததே என் காதல்	
		7. காதல் புறா	
5.	ராஜா ராணி	1956	51–59
		1. வாங்க வாங்க எல்லோரும்	
		2. வேலையில்லாத தொல்லை	
		3. ஆதிசூழ் உலகம்	
		4. மணிப்புறா புது மணிப்புறா	
		5. கண்ணற்ற தகப்பனுக்கு	

6.	ரங்கோன் ராதா	1956 1. பொது நலம் என்றும் 2. ஆயர்பாடி கண்ணா 3. வான்மலர்ச் சோலையில் 4. ஓடையிலே ஒரு நாள் 5. தமிழே தேனே கண்ணே	60–67
7.	குறவஞ்சி	1960 1. அலையிருக்குது கடலிலே	68–70
8.	காஞ்சித் தலைவன்	1963 1. நீர்மேல் நடக்கலாம் 2. வெல்க நாடு	71–74
9.	பூம்புகார்	1964 1. ஒருவனுக்கு ஒருத்தி	75–77
10.	பூமாலை	1965 1. கன்னம் கன்னம்	78–80
11.	மறக்க முடியுமா	1966 1. காகித ஓடம் கடல் அலை மீது 2. ஒண்ணு கொடுத்தா ஒன்பது	81–84
12.	நெஞ்சுக்கு நீதி	1979 1. நெஞ்சுக்கு நீதி	85–87
13.	தூக்கு மேடை	1982 1. (வாடிய பயிரை) குடி உயர 2. ஆயிரம் பிறைகள் 3. குறிஞ்சி மலரொன்று 4. ஏய் கனவிலே மயங்காதே	88–94
14.	ஒரே ரத்தம்	1987 1. ஒரு போராளியின் பயணமிது	95–97
15.	வீரன் வேலுத்தம்பி	1987 1. சுருளுமீசைக் காரனடி வேலுத்தம்பி	98–100

16.	மக்கள் ஆணையிட்டால்	1988 1. ஆற அமர கொஞ்சம் யோசிக்க	101–103
17.	காவலுக்கு கெட்டிக்காரன்	1990 1. காவலுக்கு கெட்டிக்காரன்	104–106
18.	மதுரை மீனாட்சி	1993 1. தங்க குணம் படைத்த 2. நீதிமன்ற துலாக் கோலே	107–110
19.	மண்ணின் மைந்தன்	2005 1. கண்ணின் மணிபோல	111–113
20.	கண்ணம்மா	2005 1. இளைஞனே இளைஞனே 2. என் இருவிழி	114–117
21.	பாசக் கிளிகள்	2006 1. தென்றல் என்னும் தேர் ஏறி 2. கருத்தமச்சான் ஒனக்குத்தான் 3. தங்கை என்ற பாசக்கிளி	118–124
22.	உளியின் ஓசை	2008 1. அலையெல்லாம் நடனமாடும்	125–127
23.	பெண் சிங்கம்	2010 1. வீணையில் எழுவது வேணுகானமா	128–130
	பிறமொழித் திரைப்படங்கள் விவரம்		131–139
	\	140–181	
	கலைஞருக்கு கலை உலகக் கதவைத் திறந்தவர்கள்		182–188
	துணை நூற்பட்டியல்		189

1. மந்திரிகுமாரி



வெளியான தேதி	: 24.6.1950
கதை, வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: ஜி.ராமநாதன்
இயக்கம்	: எல்லீஸ் ஆர்.டங்கன்– டி.ஆர்.சுந்தரம்
நட்சத்திரங்கள்	: எம்.ஜி.ஆர்., மாதுரிதேவி, எஸ்.ஏ.நடராஜன், ஜி.சகுந்தலா
தயாரிப்பு	: மாடர்ன் தியேட்டர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

ஊருக்கு உழைப்பவன்டி — கலைஞர்
ஆதவன் உதித்தான்
ஆஹா ஆஹா வாழ்விலே
இசைக்கலையே இனிதாமே
பெண்களினால் உயர்வாகிடுமே
உலவும் தென்றல் காற்றினிலே
கண்ணடிச்சுயாரை நீயும்
அந்திச்சாயிர நேரம்
பொறக்கப்போகுது
எண்ணும்பொழுதில் இன்பம்
மனம்போலே வாழ்வு பெறுவோமே
வாராய் நீ வராய்
உபகாரம் செய்தவற்கே (அன்னமிட்ட வீட்டிலே)
காதல் பலியாகி நீயும்

இந்தப் படத்திற்காக மொத்தம் 15 பாடல்கள் தயாராகின.
கலைஞர்,
1. ஆளப்பிறந்தவன் தமிழன் அவனிதனிலே
2. ஊருக்கு உழைப்பவன்டி (எரும கன்னுக்குட்டி)
என்ற இரண்டு பாடல்களை எழுதினார்.
முதல் பாடல் சென்சாரால் தடைசெய்யப்பட்டுவிட்டது. டைட்டிலில் தன் பெயர் போடவேண்டாம் என்று கலைஞர் சொல்லிவிட்டதால் பட டைட்டிலிலும் இசைத்தட்டிலும் பாடல்கள் கா.மு.ஷெரீப், மருதகாசி என்றே உள்ளது. மீதமுள்ள பதின்மூன்று பாடல்கள் யார் எந்தப் பாடலை எழுதியது என்று தெரியவில்லை. ஆனால் பொன் செல்லமுத்து தொகுத்துள்ள மருதகாசி திரையிசைப் பாடல்கள் தொகுப்பில் இப்படத்திலுள்ள 5 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 13 பாடல்களில் பெரும்பாலானவற்றை தனது சகோதரர்தான் எழுதினார் என்று மருதகாசியின் சகோதரர் பேராசிரியர் முத்தையன் தனது மருதகாசியின் திரையுலக் சாதனைகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

மந்திரி குமாரி

001

இசை : ஜி.ராமநாதன்

குரல் : பி.எஸ்.சுப்பையா

மாட்டுக்காரப் பையன்

(தொகையறா)

ஊருக்கு உழைப்பவன்டி
ஒரு குற்றம் அறியானடி
உதை பட்டு சாவானடி - எருமைக் கன்னுக்குட்டி

(பாட்டு)

நல்லதுக்குக் காலமில்லே
நடப்பதெல்லாம் வெளிப்பகட்டு
சொல்லப்போனால் வெட்கக்கேடு - எருமைக் கன்னுக்குட்டி

(தொகையறா)

ஏய்ச்சுப் பொழைக்கிறவன்
ஏழடுக்கு மாளிகையில்
எகத்தாளம் போடுறானே
அவன் - பேச்சை மறுக்கிறவன்
பிச்சை எடுக்கிறானே - எருமைக் கன்னுக்குட்டி

(பாட்டு)

நாட்டுக்குத் தலைவனென்று நம்பும்படி பேசிவிட்டு
வேணசெல்வம் வாரியே போவாரடி
நாடு செழிக்க யெண்ணி நாளெல்லாம் பாடுபடும்
ஏழைக்கிக் காலமில்லே எவனெவனோ வாழுகின்றான் -
எருமைக் கன்னுக்குட்டி

2. பராசக்தி



வெளியான தேதி	:	17.10.1952
கதை	:	எம்.எஸ்.பாலசுந்தரம்
திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	ஆர்.சுதர்சனம்
இயக்கம்	:	கிருஷ்ணன்-பஞ்சு
நட்சத்திரங்கள்	:	சிவாஜி, பண்டரிபாய், எஸ்.எஸ்.ராஜேந்திரன், சகஸ்ரநாமம், ஸ்ரீரஞ்சனி
தயாரிப்பு	:	நேஷனல் பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

இல் வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்	கலைஞர்
பூமாலை நீயே	கலைஞர்
வாழ்க வாழ்கவே	பாரதிதாசன்
ஓ ரசிக்கும் சீமானே வா	கே.பி.காமாட்சி
தேகம் ஞானம்கல்வி	உடுமலை நாராயணகவி
கொஞ்சும் மொழி சொல்லும் கிளியே	கே.பி.காமாட்சி
கா... கா... கா...	உடுமலை நாராயணகவி
பொருளே இல்லார்க்குத் தொல்லையா	கே.பி.காமாட்சி
புதுப்பெண்ணின் மனதைத் தொட்டுப்	கே.பி.காமாட்சி
நெஞ்சுபொறுக்குதில்லையே	பாரதியார்
எல்லோரும் வாழவேண்டும்	அண்ணல் தாங்கோ

பராசக்தி

002

இசை : ஆர்.சுதர்சனம்

குரல் : டி.எஸ்.பகவதி, உசேன்

தங் : இல் வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
என் இதயராணி ரூபம்

கல் : இந்த தீபத்திலே சுடராய் திகழ்வதென்
தீரனின் ரூபம்

தங் : இளமாமயில் ரூபம்

கல் : இல் வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
நம் காதல் தீபம்

தங் : கனியே! கன்னல் தமிழே! அமுதே!
பனி தூங்கும் மலரே! நிலவே!

கல் : கனிவான மொழியால் எனையே
கவர்ந்தீரே காந்தச் சிலையே

தங் : உனைக் காணும் போது நெஞ்சில்
ஊறிடும் உணர்ச்சி தனையே எழுதவோர்
எழுத்தும் இல்லையே

தங்,கல் : திருநாளிது போல்தினம் ஆடிப்பாடியே
தேன் போல் வாழ்வோம்
(இல்)

பராசக்தி

003

இசை : ஆர்.சுதர்சனம்

குரல் : பகவதி - ஹுசைன்

பூமாலை நீயே...
புழுதி மண்மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய்?

(பூமாலை)

பாராயோ என் பன்னீர்செல்வமே
சீரோடு வாழ்ந்தோம்
வேரோடு சாய்ந்தோம்
ராஜாங்கம் போல வாழ்ந்த வாழ்வும் வீழ்ந்தே
பாழான எந்தன் வயிற்றில் பிறந்தாய் ராஜா!
நீயேன் பிறந்தாய்?

(பூமாலை)

பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும்
கோடாணுகோடி ஏழை மாந்தர் வாடும்
சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்தாய்-ராஜா!
நீயேன் பிறந்தாய்?

(பூமாலை)

3. நாம்



வெளியான தேதி	:	5.3.1953
கதை, திரைக்கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இயக்கம்	:	ஏ.காசிலிங்கம்
நட்சத்திரங்கள்	:	எம்.ஜி.ஆர், வி.என்.ஜானகி, எம்.என்.நம்பியார் பி.எஸ்.வீரப்பா, எம்.ஜி.சக்கரபாணி
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ் & ஜூபிடர் பிக்சர்ஸ்
இசை	:	சிதம்பரம் எஸ்.ஜெயராமன்
பாடியோர்	:	சிதம்பரம் ஜெயராமன், கே.ஆர்.செல்லமுத்து, ஏ.எம்.ராஜா, ஜிக்கி, நாகூர் அனீபா, எம்.எல்.வசந்தகுமாரி, ஏ.பி.கோமளா, டி.ஆர்.கெஜலட்சுமி

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

மாரி மகமாயி மாரி மகமாயி	கலைஞர்
பேசும் யாழே பெண் மானே	கலைஞர்
மணமில்லா மலர் நானம்மா!	கலைஞர்
பேசும் யாழே பெண் மானே	கலைஞர்
வருவாய் வருவாய்...	கலைஞர்
புதியதோர் பாதை வகுப்போம்	கலைஞர்
வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே	கலைஞர்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்	கலைஞர்
ஆயிரம் தெய்வங்கள்	பாரதியார்

நாம்

004

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : செல்லமுத்து, ஏ.பி.கோமளா

கோரஸ்

மாரி மகமாயி மாரி மகமாயி
ஆயி எங்கள் காளியம்மா
மாரி மகமாயி மாரி மகமாயி
ஏழை நாங்கள் எல்லோரும் வாழ
மாத மும்மாரி பொழியணும் தாயே.

ஆண்

சூரியனால் கடல் நீரும் - மேகமாகவே
மாறியதால் லோகத்திலே
மழையும் பொழியுமா

பெண்

சொல்றேன் கேளு
விஞ்ஞானம் புதிதாக மாறுது பாராய்
கொடும்பாவி அருளாலே பேயுமாம் ஜோராய்
மானம் காஞ்சா நாமெல்லோரும் வாடிடுவோம்

தல்லாலே லா.... ....

எல்லோரும்

திரி சூலி நீலி எங்கள் மாரி மகமாயி
வரி கொடுக்க முடியாமல்
வாடுறோம் தாயே...
ஓங்கார ரூபிணி மாரி மகமாயி
எங்கள் குறை தீர்த்து விடு மாரி மகமாயி

(மாரி)

நாம்

005

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : ஏ.எம்.ராஜா, ஜிக்கி

குமரன் : பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீ தானே

மீனா : நீல வானே தன்னை மறந்து
நிலவினைப் புகழ்ந்திடலாமோ

குமரன் : எழிலே! தமிழ்க் காவியமே
எழுதாத ஓவியமே –

மீனா : இன்ப மொழி பேசி பேசி
அன்புப் பார்வை வீசி வீசி

குமரன் : பேசும் யாழே பெண் மானே –

மீனா : யாழே நானென்றால் நாதம் நீர்தானே

குமரன் : நாதத்தில் பேதம் உண்டு
நமக்கது வேண்டாமே

இருவரும் : காதல் வாழ்கவே கனி ரசமே
மாதர் மறவர் உல்லாசமே.

நாம்

006

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

மீனா: மணமில்லா மலர் நானம்மா!
மாதர் உலகில் வாழ்வே அறியா
மணமில்லா மலர் நானம்மா!

ஒடிந்தது வீணை நாதமே இனியேது
இடியிதோ வீழ்ந்தே பூங்கா அழிந்ததே
மணமில்லா மலர் நானம்மா!
வாழ்விலே விஷமே வீசியே மறைந்ததால்
மணமில்லா மலர் நானம்மா!

வாடிடும் கொடியானேன்
சூறாவளிக் காற்றாலே
மகரந்த இதழ்மீது மாசு தோய்ந்து மூடிய
மணமில்லா மலர் நானம்மா!

இன்பச் சுடர் காணேனே
இருள் வீட்டில் தனியானேன்
துன்பப் புயல் அலை மோதி
சோக வாழ்வுச் சோலையில்
மணமில்லா மலர் நானம்மா!

நாம்

001

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : ஜிக்கி (சோகம்)

மீனா: பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீதானே
கேளேனோ இனிமேல் இதுபோல் கீதம்...

(பேசும்)

தாளா தீச்சுழலில்
தனியாய் வீழ்ந்தீரோ
மீளா சோகம் மீட்டிடும் யாழானேன்
மாளா காதலினால் வாழ்ந்தோமே காதல்...

(பேசும்)

பாழும் பேயாக பாரினில் அலைவீரோ
தீரா துன்பம் தீட்டிய ஏடானேன்
மாறா பாசம்தனை மறந்தீரோ நேசம்

(பேசும்)

நாம்

008

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : செல்லமுத்து குழு

கிராமவாசிகள்:

ஆஹா ஆஹா!
வருவாய் வருவாய்...
வைபோக சுந்தரியே...
சைபோக சௌந்தரியே!
சைரந்திரியே... கண்ணே... வருவாய்...
கீசகன் ஆசை கொண்ட கிச்சிலிப் பழமடி நீ...
காச நோய்போல வந்த காதலுக்கு மருந்தடி நீ...

ஆணழகா மம்முதா ஆசைகொண்ட கீசகா!
கீசகா! கீசகா!

கீசகா!... டேய்...
கிறுக்குத்தனமாய் வந்து மீசையை
முறுக்கி விட்ட குரங்கே! பெரிய குரங்கே!
எட்டுத் திக்கும் நடுநடுங்க

முரசு கொட்டும் பீமசேனனிடம்
வாலாட்டமா....?
வாலாட்டமா...?

நாம்

009

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குமரன் & கிராமவாசிகள்

புதியதோர் பாதை வகுப்போம் - நாம் - கெட்ட
போரிடும் பாதையை சாய்ப்போம் நாம்...
நித்தம் உழைத்தே உயர்வோம் நாம் -
நெறி தவறாமல் வாழ்வோம் நாம் -

அஞ்ஞானப் பாழ் வெளியையே - நல்
அறிவாகும் ஏர் முனையினால்...
அஞ்ஞானப் பாழ் வெளியையே - நல்
அறிவாகும் ஏர் முனையினால்...
அறிவாகும் ஏர் முனையினால்...

விஞ்ஞானப் பேரறிவினால் - உழுதே
மெய்ஞானம் காண்பவர்கள் நாம்!
விஞ்ஞானப் பேரறிவினால் - உழுதே
மெய்ஞானம் காண்பவர்கள் நாம்!

ஏற்றங்கொண்டு வாழுவோம் நாம் - கால
மாற்றத்தோடு மாறுவோம் நாம்
மாற்றத்தோடு மாறுவோம் நாம்

ஊற்றெடுக்கும் அறிவினாலே - புதிய
கருவிகொண்டு ஆளுவோம் - நாம்
ஊற்றெடுக்கும் அறிவினாலே - புதிய
கருவிகொண்டு ஆளுவோம் - நாம்!

நாத்து நடுவோம் - களை
பேத்து எறிவோம்!
நாத்து நடுவோம் - களை
பேத்து எறிவோம்!
காத்து வளர்ப்போம் - கதிர்
கண்டு மகிழ்வோம் - கதிர்
கண்டு மகிழ்வோம்...

(தொகைறா)

சொப்பனத்தில் வந்த கடவுளின் அருளால்
பயிர் வளர்த்தாராம் நந்தனார்...
எப்பொழுதும்போல் கைகால்களுதவியால்
பயிர் வளர்த்தோமே இந்நாள்...
வளைந்த கதிரில் விளைந்து வந்தாய் தங்கராணியே...
வாழ்வில் இன்பம் பொங்கிட வந்தாய் எங்கள் தோழியே...
“பொதுக் களஞ்சியம் கண்டோம் நாம்
புதியதோர் பாதை வகுத்தோம்”...

நாம்

010

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
அருமை மிகுந்த எங்கள் அறிஞர்
அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே
பெருமை பேசும் மனிதரெல்லாம்
எதற்கெடுத்தாலும் எருமை போல
தலையசைப்பதை உரிமைக்காக
எதிர்த்து நிற்கும்
அண்ணா வாழ்கவே
எங்கள் அண்ணா வாழ்கவே
புழுவாகத் துடிக்கின்ற ஏழை
கழுகாகப் பறக்கின்ற சீமான் - இந்தப்
பொல்லாத பேதங்கள் எல்லாம்
இல்லாத பொன்னாடாய்ச் செய்தார் - அந்த
அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே
எலியாக வாழ்கின்ற விதவை
பலியாக தருகின்ற இளமை
புலியாக பாய்கின்ற பழமை
மலிவாகப் போன இக்கொடுமை
மாற்றிடும் அண்ணா வாழ்கவே!
குமர அண்ணா வாழ்கவே.
சிலசில இடங்களில் பணத்தோட்டம் - அது
செல்வக் குமரி... கோட்டம்! இப்படிப்
பலபல கருத்துக்கள் சொல்லும் தேனாறு
பகுத்தறிவூட்டும் லட்சிய வரலாறு -
அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே.

நாம்

011

இசை : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

குரல் : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
பகையும் பழியும் பாம்பெனத் தீண்டும் - உலகில்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
சிறையா வதையா இன்னும்...

(எதையும்)

சாக்ரட்டீஸ் வாழ்வினைப் பார்
சாகாத காந்தி முடிவையுமே பார்
வேதனையாலே வீழாதே
சோதனையாலே வாடாதே - நீ வாடாதே
சோதனையாலே வாடாதே - வரும்...

(எதையும்)

தேனெனும் வாழ்வே தேளாய் மாறும்
போர்முனைச் சாவே பொதுவாழ்வில் இன்பம்
ஆணவம் சீறலாம், ராணுவம் பாயலாம்
சீற்றத்தைக் கண்டு சிதறாதே - உளம் சிதறாதே
தூற்றலைக் கேட்டுத் துவளாதே - பகை...

(எதையும்)

4. அம்மையப்பன்



வெளியான தேதி	: 24.9.1954
கதை, வசனம், பாடல்	: கலைஞர் மு.கருணாநிதி
இயக்கம்	: ஏ.பீம்சிங்
நட்சத்திரங்கள்	: எஸ்.எஸ்.ஆர்., ஜி.சகுந்தலா, டி.வி.நாராயணசாமி
தயாரிப்பு	: நேஷனல் புரொடக்சன்ஸ்
இசை	: டி.ஆர். பாப்பா
பாடியோர்	: எம்.எல்.வசந்தகுமாரி, திருச்சி லோகநாதன், முத்துக்கூத்தன், நாகூர் அனீபா, சீர்காழி கோவிந்தராசன்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

அம்மையப்பா அருள்புரிவாய்
காதல் புறா காதிலே பேசுவதேனோ
காதல் துறையே புதுமைக் கனவே
சின்னப் புது மலரே
சிதைந்ததே என் காதல்
அலைமோதும் ஆசையாலே
புள்ளையாரே
காதல் துறையே புதுமைக் கனவே (சோகம்)
நீலக்கடல் பாரு பாப்பா...

பாடலாசிரியர்கள் :
கலைஞர்,
சுரதா,
எம்.கே. ஆத்மநாதன்,
முத்துக்கூத்தன்

இசைத்தட்டே இல்லை

"இப்படத்தின் பாட்டுப்புத்தகம் மட்டுமே கைவசம் உள்ளது. படமும் இல்லை. இசைத்தட்டும் இல்லை" என்கிற திரை ஆய்வாளர் திருநின்றவூர் சந்தானகிருஷ்ணன், படத்தின் இசை அமைப்பாளர் திரு. டி.ஆர். பாப்பா அவர்களிடம் தான் நேரில் விசாரித்தபோது "இசைத்தட்டே வெளியாகவில்லை" என்று சொன்னதாகவும் குறிப்பிடுகிறார்.

தனது 'திரைக்களஞ்சியம் – தொகுதி 1' என்ற நூலில் திரை ஆய்வாளர் திரு. கோ.நீலமேகம் அவர்களும் "படமும் இசைத்தட்டும் கிடைக்கப்பெறவில்லை" என்கிறார்.

படத்திலுள்ள அனைத்துப் பாடல்களையும் இங்கே நாம் இணைத்திருக்கிறோம். ஆனால், அதில் எது கலைஞர் எழுதிய பாடல் என்று உறுதிசெய்ய முடியவில்லை.

அம்மையப்பன்

012

இசை : டி.ஆர்.பாப்பா

தொகையறா
அம்மையப்பா அருள்புரிவாய் எல்லாம் உன் செயல்

அம்மையப்பா

எல்லாம் உன் செயல் அம்மையப்பா

பாட்டு
அம்மையப்பா அருள்புரிவாய் எல்லாம் உன் செயல்

அம்மையப்பா

எல்லாம் உன் செயல் அம்மையப்பா

இம்மை மறுமை இன்பம் துன்பம்
உண்மை பொய்மை உலக பந்தம்
எல்லாம் உன் செயல் அம்மையப்பா

தேளின் விஷம் தெள்ளமுது தேனருவி தீக்காடு
ஏரிகுளம் எரிமலைகள் எல்லாம் உன்செயல் அம்மையப்பா
அரசன் முதல் ஆண்டிகளும் ஐயன் சிருஷ்டி உண்மையப்பா
இது ஐயன் சிருஷ்டி உண்மையப்பா

பல்லக்கு தூக்கிகளும் அதில் பவனி வருகின்ற மனிதர்களும்
அம்மையப்பா உந்தன்
எல்லைக்குள் வாழ்வோர் உண்மையப்பா
கல்லுக்குள் தேரையும் எள்ளுக்குள் எண்ணெயும்
பாம்பின் பல்லுக்குள் கொடு நஞ்சும்
அம்மையப்பா தொல்லுலகம் உந்தன்
செயல்தானென்று சொல்லுதப்பா.

அம்மையப்பன்

013

இசை : டி.ஆர்.பாப்பா

முத்தாயி
நீலக்கடல் பாரு பாப்பா...

அதில் நீந்தி விளையாடு பாப்பா...

வெள்ளி மணல் படுக்கையிலே பாப்பா
துள்ளி விளையாடு பாப்பா...

ஓடி விளையாடு பாப்பா... நீ
ஓயிலாக நடமாடு பாப்பா...

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சந்தனக் கிளியே சாய்ந்தாடு
அழகு மயிலே சாய்ந்தாடு
அமுதப் புறாவே சாய்ந்தாடு

(சா)

அம்மையப்பன்

இசை : டி.ஆர்.பாப்பா

014

முத்தாயி : காதல் துரையே புதுமைக் கனவே - மன
மேவும் இன்ப ஜோதியே ஓடிவா

(கா)

முத்தன் : வானில் உலாவும் மாமுகில் காணும்போதிலே
சோலைக் கலாபம் ஆடுதே...

(கா)

முத்தன் : அன்பில் விளைந்த மாமணி...
முத்தாயி : ஆனந்த வாழ்வின் செல்வம் நீ
முத்தன் : கண்ணில் நின்றாடும் பாவையே
முத்தாயி : இன்பத்தின் எல்லை காணுவோம்...
முத்தன் : இதய வீணையே....

இருவரும் : ஈடில்லாத வாழ்விதே
இருவரும்: காதல் நிலவே புதுமைக் கனவே-மன
மேவும் இன்ப ஜோதியே - ஓடிவா

அம்மையப்பன்

015

இசை : டி.ஆர்.பாப்பா

முத்தாயி சோக கீதம்

காதல் துரையே புதுமைக் கனவே - மன
மேவும் இன்ப ஜோதியே ஓடிவா

(கா)

வானில் உலாவும் மாமுகில் காணும்போதிலே...
சோலைக் கலாபம் ஆடுதே...

(கா)

அன்பில் விளைந்த மாமணி...
ஆனந்த வாழ்வின் செல்வம் நீ
தென்றலில் வீசும் கானமே
தேன்மழையே என் ஜீவனே
இன்பத்தின் எல்லை காணவே
துன்பத்தில் மடியில் தூங்குவோம்

அம்மையப்பன்

இசை : டி.ஆர்.பாப்பா

16

முத்தாயி:

சின்னப் புது மலரே
சிங்கார அகல் விளக்கே...
கன்னற் தனிச்சுவையே
கற்கண்டே கனிரசமே...

(சின்)

செந்நெல் மணிக் கதிரே
தித்திக்கும் செங்கரும்பே...
செந்தமி ழாள் ஈன்றெடுத்த
செல்வக் களஞ்சியமே...

(சின்)

காவிரியின் தென் பாங்கே
கற்பூரப் பெட்டகமே...
பூவிரித்த சோலையிலே
பொங்கும் புதுமணமே...

(சின்)

நீ... இராவிடம் இருள் சூழும்
என்ற நிலை தந்த
திராவிடப் பொன்னழகி...
வாழ்ந்திடுவாய் விண்ண முதே -

(சின்)

அம்மையப்பன்

017

இசை : டி.ஆர்.பாப்பா

முத்தாயி பூங்காவனம் சோக கீதம்

தொகையறா

சிதைந்ததே என் காதல் உயிரோவியம்
அழிந்ததே என் வாழ்வின் சுவைக் காவியம்.

பாட்டு

மனமோகன ஜீவன் வாழ்வின் ஜோதி மறைந்தோடுதே...
புயல் வீசுதே... பூங்காவிலே...

(மன)

அருள்மேவும் காதல் தெய்வச்சிலை வீழ்ந்ததே...
வெறுங் கோவிலானதே என் வாழ்வுதான்
வீணானதே...

(மன)

அம்மையப்பன்

இசை : டி.ஆர்.பாப்பா

018

பூங்காவனம்:

காதல் புறா காதிலே பேசுவதேனோ –
அதன் ரகசியம் ஏதோ...

பாசம் கொண்டதும் வீணோ?...
பாவை ஏன் பிறந்தேனோ?...

தளிர்மேனி சோர்ந்தாள் இளையராணி
தாவும் தென்றலே வா... வா...
சோகம் தீர்க்கவே... நீ... வா...

மான் தோல் வேங்கை வாழ்ந்திடும் காட்டில்
மாங்குயில் தான் கூவிடலாமோ...

பாசம் கொண்டதும் வீணோ?...
பாவை ஏன் பிறந்தேனோ?...

துயர் மேவும் இருளில் வீழ்ந்தாள் ராணி
தூங்கும் வெண்ணிசை பெண்ணே – ஒளி
தூவ வந்திடு கண்ணே...

நேசத்தினாலே மோசம் போனேன்
ஆசைக் கனவெல்லாம் பலிக்காதோ
பாசம் கொண்டதும் வீணோ
பாவை ஏன் பிறந்தேனோ...

(கா)

5. ராஜா ராணி



வெளியான தேதி	: 25.2.1956
கதை, வசனம், பாடல்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: டி.ஆர்.பாப்பா
இயக்கம்	: ஏ.பீம்சிங்
நட்சத்திரங்கள்	: சிவாஜி, பத்மினி, எஸ்.எஸ்.ஆர்.
தயாரிப்பு	: நேஷனல் புரொடக்சன்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

வாங்க... வாங்க... வாங்க...	கலைஞர்
வேலை யில்லாத தொல்லை	கலைஞர்
ஆழிசூழ் உலகம் விடிந்த தென்று	கலைஞர்
மணிப் புறா, புது மணிப் புறா	கலைஞர்
பூனை கண்ணை மூடிக்கொண்டால்	கலைஞர்
ஆனந்த நிலைபெறுவோம்	ஆத்மநாதன்
காணாத இன்பம்	வில்லிபுத்தன்
சிரிப்பு இதன் சிறப்பை	மருதகாசி
திருமணம் ஆகாத பெண்ணே	விவேகன்
சொல்லாலே வீணானதே	மருதகாசி
திரைபோட்டு நாமே மறைத்தாலும்	மருதகாசி

ராஜா ராணி

019

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : எம்.எல்.வசந்தகுமாரி

ராணி : வாங்க... வாங்க... வாங்க...
எல்லோரும் இங்கே வாங்க
டிக்கெட்டு வாங்க... வாங்க...
இன்றிரவு மிக நன்றிரவு
இணையில்லாத இன்ப இரவு...

நபர் 1 : தரை ஒண்ணு!

ராணி : அரை ரூபா!

அவன் : கொடு கொடு இந்தா!

ராணி : தரை அரை ரூபா!-கறை படிந்த தரை அரை ரூபா
ரத்த கறை படிந்த தரை அரை ரூபா
வெற்றிலை பாக்கு கறை படிந்த தரை அரை ரூபா
(இன்றிரவு) (இன்றிரவு)

நபர் 2 : ஏம்மா இன்னிக்கு என்னா ட்ராமா?

பெண் : அட வெங்கட்ராமா க்யூவிலே நில்லு!

அவன் : எப்படித் தெரியும் என் பேரு?
செப்படி வித்தை கற்றவளோ?

ராணி : தரை அரை ரூபா... பெஞ்சு ஒண்ணு
பேக் பெஞ்சு மூணு!..
ஏ... காலி...
காலி! காலி!...
நாற்காலி... அஞ்சு ரூபா...

நபர் 3 : கொஞ்ச ரூபா சொல்லு

ராணி : ஆ!...

அவன் : கொஞ்ச ரூபா சொல்லம்மா... கோகில வாணி
அம்மா கோகில வாணி
அம்மா கோகில வாணி

ராணி : வஞ்சகனே போடா!... ஏடா... மூடா...
வீணே சாகாதேடா...

அவன் : ஆ!

ராணி : எங்க நாடகத்தில் இந்த வசனங்களை கேட்க
கொஞ்ச ரூபாயா? அஞ்சு ரூபா தான்
அழகான நாடகம் எழிலான காட்சிகள்
அனல் வீசும் பேச்சுகள் –
ஆடல்... பாடல் ஊடல்... கூடல் எல்லாம் காண
இங்கே வாங்க... வாங்க
டிக்கெட்டு வாங்க வாங்க

ராணி : மூணு வயதுக்கு மேல் முழு சார்ஜு
இடம்மாறி உட்கார்ந்தால் டபுள் சார்ஜு
டர்னிங் சீனில் அடிக்கக் கூடாது டார்ச்சு

(மூணு)

கிழவன் : ஐம்பது மூணுக்கு?

ராணி : ஈஸிசேர்!...

ஒரு பெண்: ஏம்மா! பெண்களுக்குத் தனி இடம் உண்டா?

ரா : பிள்ளைகள் போட ஏணையும் உண்டு!
பீடா சிகரெட் பாக்கு வெத்திலை
சோடா கலர் ஆரஞ்சு!

குள்ளன் : ப்ரீயா?

ராணி : அட ட்ரீயோ!
ட்ரீயோ டேயன்னா டேயன்னா!
முட்டன்னா டாவன்னா ள்ளன்னா போய்யா

(மூணு)

நபர் 4 : ஏம்மா அரை டிக்கட் உண்டா?

ராணி : யப்பா... உமக்கு முழு டிக்கட்டும் இல்லே!

அவன் : ஏனாம்?

ராணி : ஹவுஸ் புல்!

ராஜா ராணி

020

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : எம்.எல்.வசந்தகுமாரி

வேலை யில்லாத தொல்லை
காலை பனி போலே நீங்கி போனதே...

நான் எண்ணாத நல் வாழ்வுதான்
தன்னால் வந்து சேர்ந்ததே

இன்ப நன்னாளிதே
செல்வ பொன்னாளிதே...
ஆஹா ஆனந்தம் ஆனந்தமே...
முன்பின் அறியாதார் உறவாள் எனமனம்போலவே
நலமே நானடைந்தேன்
அன்பின் உருவாகவே
எந்தன் துயர் நீங்கவே
நன்மை தந்திட வந்தார் இன்றே

என்னை சீமாட்டி என்றெண்ணி ஏமாந்தாரே
ஆஹா விந்தையிதே...

ராஜா ராணி

021

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : எம்.எல்.வசந்தகுமாரி

ஆழிசூழ் உலகம் விடிந்த தென்று என்
ஆருயிர் மணவாளரை எழுப்பிவிட்டு
கோழிபோல் கொக்கரித்து என் கற்பையும்
கொத்திவிட்டாய் கொடியவனே! படுபாவி!
ஊழிபோல் வந்திங்கு ஆடிவிட்டாய் உடைந்த
தாழிபோல் ஆகிவிட்டேன் - இனி
ஒரு கணம் இந்த உயிர் நில்லுமோ
கற்புக்கு இலக்கணம் சொல்லுமோ... சொல்லுமோ...
எந்தன் உயிர் நில்லுமோ...

ராஜா ராணி

022

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : எம்.எல்.வசந்தகுமாரி

மணிப் புறா!...
புது மணிப் புறா!... புத்தம்
புது மணிப் புறா!... நானேதான்

மேவிடும் அன்பால்
தாவிடும் உன்பால் நெஞ்சம்
பூ விரித்து அழைக்குது மஞ்சம்

பூமானே வாராய் கொஞ்சம்
ரோஜாக் கொல்லை முல்லைத் தோட்டம்
எந்தன் முகந்தானே
ராஜா உமக்கு நான்தான் ராணி
தருவேன் சுகந்தானே

ராஜா ராணி

023

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : எஸ்.சி.கிருஷ்ணன்

லீலா!...

லாலீ!...

அது போலி!...

கண்ணற்ற தகப்பனுக்கு பெண்ணாகப் பிறந்தவளே!
எண்ணற்ற பொய் சொல்லி என்னையே மாற்றிய என் தங்கமே!
பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு
போகுமோ? மியாவ் மியாவ்
வானை நோக்கித் திரையைப் போட்டால் வட்ட நிலாவும்
மறைந்து போகுமோ?

(கண்)

கெட்டிக்காரன் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு - இந்தக்
கட்டிக் கரும்பின் பொய்யும் புரட்டும் எத்தனை நாளைக்கு? ஆ!

(கண்)

வசனம் : ராணி

நான் ஒண்ணும் பொய் சொல்லலே
எல்லாம் உண்மைதான்...

பாட்டு: ராஜா

அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுப் பெண்ணே!
அநியாயமாய் உண்மை சொல்வதிலே உனக்கு
அவனியிலே நிகர்யாரு கண்ணே!

வசனம்:

ராணி : ராஜா!


ராஜா : ராணி!

ராணி : ஆ!... (வியப்பு)

பாட்டு: ராஜா

சீட்டுக் கட்டு ராணி போலே
சிக்கிவிட்டாய் பெண்மயிலே
வாட்டமே இல்லாமலே வாழலாம்
பூங்குயிலே!
கிளாவர் ராணி! உனக்கு என்ன வேணுமின்னு கேளு!...
ஆட்டின் ராணி போல ஆடு
டைமன் ராணி போல பாடு
அட இஸ்பெட் ராணி!
ஏனிந்த சோகமோ?
என்மேல் என்ன கோபமோ?
உண்மை சொன்ன பாபமோ?
உன் மனதில் என்ன தாபமோ?

6. ரங்கோன் ராதா



வெளியான தேதி	:	1. 11. 1956
கதை	:	அறிஞர் சி.என்.அண்ணாதுரை
திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	டி.ஆர். பாப்பா
இயக்கம்	:	ஏ.காசிலிங்கம்
நட்சத்திரங்கள்	:	சிவாஜி, பானுமதி, எம்.என்.ராஜம், எஸ்.எஸ்.ஆர். ராஜசுலோசனா, என்.எஸ்.கிருஷ்ணன்-டி.ஏ.மதுரம்
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

பொதுநலம் என்றும் பொதுநலம்	கலைஞர்
ஆயர்பாடி கண்ணா	கலைஞர்
வான் மலர் சோலையில்	கலைஞர்
ஓடையிலே ஒருநாள் எந்தன்	கலைஞர்
தமிழே தேனே கண்ணே தாலேலோ	கலைஞர்
நாட்டுக்கு ஒருவீரன்	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
ஊரடங்கும் வேளையிலே	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
சங்கரியே காளியம்மா	என்.எஸ்.கிருஷ்ணன்
பெண்ணாக இருந்த என்னை	ஆத்மநாதன்
என்றுதான் திருந்துவதோ	உடுமலை நாராயணகவி
ஒளிபடைத்த கண்ணினாய்	பாரதியார்

ரங்கோன் ராதா

024

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : சி.எஸ்.ஜெயராமன்

பொதுநலம் என்றும் பொதுநலம்
புகழ் உடலைக் காக்கும் மிகபுனிதமான செயல்
பொது நலம் என்றும் பொதுநலம்
வீடுவாசல் மாடு மனை மக்கள் சுற்றம் போனாலும்
நாடு நம்நாடு நம்நாடு நாடென்று
நாமெல்லோரும் கூடிச் செய்யும் தியாகமே

(பொதுநலம்)

நாட்டிலே எதுக்கும் லாயக்கில்லாமல்
வீட்டிலே எதுவும் வேலை செய்யாமல் - உடல்
கூட்டிலே தீனியை அடைத்து வாழும்
உருப்படா மனிதனுக்குயிர் கொடுக்கும் மருந்து - நல்ல மருந்து

திண்ணைத் தூங்கிப் பண்டாரம்
திருவோடேந்தும் பரதேசி
தெருவிலே உருளும் திருப்பதி கோவிந்தா - கோவிந்தா
இந்த சோம்பேறி நடைபிணத்துக்குயிர் கொடுக்கும் மருந்து

(பொதுநலம்)

நெற்றியிலே விழுகின்ற கோடுகளை
முதுமைக் கோடுகளை
புத்தியிலே விளைகின்ற கேடுகளை
கச்சிதமாய் அகற்றிவிடும் கைகண்ட மருந்து - நல்ல மருந்து
அறிவுக்கோயில் வழிபாடு
உழைக்கும் தோழர் பண்பாடு
அறநெறியோடு அன்புடன் வாழ்வோமே வாழ்வோமே
இந்த மேலான கடமைகளுக்கொளி கொடுக்கும் மருந்து

(பொதுநலம்)

ரங்கோன் ராதா

025

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : டி.வி. ரத்னம்

ஆயர்பாடி கண்ணா நீ
ஆடவாராய் என்னோடு - மாயக்காரா வா வா வா - ஜாலக்காரா
ஓஹோஹோ - ஏ பகவானே - பகவானே பகவானே

பாமாவைப் போலவே அழகான ராணி நான்
தாளாத காதலே தணலாக வீசுதே
காணக்கிடைக்கா தங்கம் பார்
காதல் தெளிக்கும் அங்கம் பார்
மாயக்காரா-ஜாலக்காரா-ஏ பகவானே பகவானே-(பகவானே)
வானோடும் மின்னலே இடையாக ஆனதே
தேனூறும் கன்னமே தெய்வீக பானமே
வேலைப் பழிக்கும் விழியைப் பார்
ஆளை மயக்கும் மொழியைப் பார்
மாயக்காரா-ஜாலக்காரா-ஏ பகவானே பகவானே-(பகவானே)

ரங்கோன் ராதா

026

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : பி.பானுமதி

வான் மலர் சோலையில்
தேன் மதி காணவே
மாமுகில் ஓடுதே

காற்றில் ஆடும் முல்லைக் கொடியே
துணைதான் இணைந்த நம் வாழ்வில்
ஆனந்தம் காண்போமே இன்றே

ஆசைத்துரையே அழகான ராணி
அணைமீறும் அன்பால் அலைமோதுகின்றாள்
அருகே நீ வாராய்
தீயும் அணைந்தது தென்றல் வீசுது
தெவிட்டாத அமுதாய் தேமாங்கனியாய்
புதுவாழ்வு கண்டேன்.

ரங்கோன் ராதா

இசை : டி.ஆர்.பாப்பா

027

ஓடையிலே ஒருநாள் எந்தன்
இதழ் பறித்து முத்தமிட்டான்
இன்பசுகம் என் சொல்வேன்
வாடைக்குளிரில் இந்த தேகம் அணைத்த செல்வன்
வருகிறேன் என்று சொல்லிபோய்விட்டானடி தோழி
ஏடுபடிக்க அமர்ந்தேன் - எந்தன்
எண்ணத்தில் வந்து கலந்தான்
பண்ணிசைக்க யாழெடுத்தேன்
கண்ணெதிரே அவன் நின்றான்
பாய்ந்து தழுவச் சென்றேன்
மின்னல் போல் மறைந்து விட்டான்.

ரங்கோன் ராதா

028

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : பி.பானுமதி

தமிழே தேனே கண்ணே தாலேலோ
தங்க ஜோதி வீசும் தீபமே தாலேல தாலல தாலலோ

அலை மோதிடும் கடல் போலவே
உனை ஈன்ற தாயின் உள்ளமே
நிலை மாறி வாடும் போதிலே
நீதான் வந்தாய் நிலவாகவே

முகில் காணுமோர் மயில் போலவே
உன் கோல முகமும் காணவே
துயர் நீங்கி நானும் ஆடுவேன்
தூங்காத கண்ணே தூங்கய்யா

7. குறவஞ்சி



வெளியான தேதி	:	4.3.1960
கதை, திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	டி.ஆர். பாப்பா
இயக்கம்	:	ஏ. காசிலிங்கம்
நட்சத்திரங்கள்	:	சிவாஜி, சாவித்திரி, மைனாவதி, பண்டரிபாய், ஓ.ஏ.கே.தேவர்
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

அலையிருக்குது கடலிலே	கலைஞர்
காதல் பொல்லாதது	தஞ்சை ராமய்யாதாஸ்
செங்கையில் வண்டு	திரிகூட ராசப்பக் கவிராயர்
எந்நாளும் தண்ணியிலே	தஞ்சை ராமய்யாதாஸ்
தண்ணீரில் மீனிருக்கும்	கவிஞர் கண்ணதாசன்
நடையா நடையழகி	தஞ்சை ராமய்யாதாஸ்
காதல் கடல் கரையோரமே	தஞ்சை ராமய்யாதாஸ்
படியளப்பேனென்று பாராள வந்தவன்	கவிஞர் கண்ணதாசன்
நீ சொல்லாவிடில் யார் சொல்லுவா	நா.கிருட்டிணமூர்த்தி
ஆலையிட்ட கரும்பா ஆக்கி வைத்த	கவிஞர் கண்ணதாசன்

குறவஞ்சி

029

இசை : டி.ஆர்.பாப்பா

குரல் : ஜமுனா ராணி அண்ட் குழுவினர்

அலையிருக்குது கடலிலே
அசைவிருக்குது உடலிலே
கலையிருக்குது நெளிவிலே
விலையிருக்குதா உலகிலே - எனக்கு
விலையிருக்குதா உலகிலே?

(அலை)

வலையிருக்குது விழியிலே - பழக்
குலையிருக்குது மொழியிலே
சிலையிருக்குது எதிரிலே
விலையிருக்குதா உலகிலே - எனக்கு
விலையிருக்குதா உலகிலே?

(அலை)

தளுக்கு நடையில் மினுக்கும் இடையில்
துடிக்கும் இளமை தொடுக்கும் கணையில்
ஜொலிக்கும் வாழ்வில் இனிமை தவழப்
படிக்கும் இன்பக் கவிதைகள் நாம்!

(அலை)

8. காஞ்சித் தலைவன்



வெளியான தேதி	:	26.10.1963
கதை, திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	கே.வி.மகாதேவன்
இயக்கம்	:	ஏ.காசிலிங்கம்
நட்சத்திரங்கள்	:	எம்.ஜி.ஆர்., பானுமதி, எஸ்.எஸ்.ஆர்., எம்.ஆர்.ராதா, எஸ்.ஏ.அசோகன், விஜயகுமாரி, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், மனோரமா
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

நீர்மேல் நடக்கலாம்	கலைஞர்
வெல்க நாடு வெல்க நாடு வெல்க	கலைஞர்
அவனியெல்லாம் புகழ் மணக்கும்	ஆலங்கு சோமு
கண்கவரும் சிலையே	கே.டி.சந்தானம்
மயங்காதமனம் யாவும்	ஆலங்குடி சோமு
வானத்தில் வருவது ஒரு நிலவு	ஆலங்குடி சோமு
மக்களொரு தவறு செய்தால்	ஆலங்குடி சோமு
ஒரு கொடியில் இருமலர்கள் மலர்ந்ததம்மா	ஆலங்குடி சோமு
உயிரைத் தருகின்றேன் தாயே	ஆலங்குடி சோமு

காஞ்சித் தலைவன்

030

இசை : கே.வி.மகாதேவன்

குரல் : ஏ.எல்.இராகவன், எல்.ஆர்.ஈஸ்வரி குழு

மதனன் : நீர்மேல் நடக்கலாம்
நெருப்பிலே படுக்கலாம்
நிலை தடுமாறினால் நினைத்ததைப் பேசலாம்

மதனன் : உலகம் சுத்துது எதனாலே? நம்
உடம்பு சுத்துது அதனாலே
உலகம் சுத்துது எதனாலே?

வீரர்கள் : நம்ப உடம்பு சுத்துது அதனாலே

மதனன் : கலகம் வருவது எதனாலே?
கலயம் பொங்குது அதனாலே
கலகம் வருவது எதனாலே?
கலயம் பொங்குது அதனாலே

மதனன் : சொர்க்கம் தெரியுது எதனாலே?
மயக்கம் வருகுது அதனாலே
சொர்க்கம் தெரியுது எதனாலே

கோரஸ் : மயக்கம் வருகுது அதனாலே

(உலகம்)

மதனன் : கண்ணைக் கவருது எதனாலே? - இவ
கன்னிப் பொண்ணு அதனாலே
கண்ணைக் கவருது எதனாலே?

கோரஸ் : இவ கன்னிப் பொண்ணு அதனாலே

மதனன் : கன்னிப் பொண்ணு .....ம் .....ம்.....
கன்னத்தில் ஒண்ணு

சிங்காரி : உலகம் சுத்துது எதனாலே?

கோரஸ் : நம்ப உடம்பு சுத்துது அதனாலே

(உலகம்)

காஞ்சித் தலைவன்

031

இசை : கே.வி.மகாதேவன்

குரல் : சிதம்பரம் எஸ்.ஜெயராமன்

வெல்க நாடு வெல்க நாடு வெல்க வெல்கவே
வீர சங்க நாதம் கேட்டு செல்க செல்கவே
படைகள் செல்கவே - படைகள் செல்கவே...

(வெல்க நாடு)

தாயின் ஆணை கேட்பதற்கு தலை வணங்கும் தங்கமே
தலைகொடுத்து தாயின் மானம் காத்திடுவாய் சிங்கமே
சென்று வா - வென்று வா....

(வெல்க நாடு)

குழலைப் போல மழலை பேசும்
குழந்தைகளின் முத்தமும்
கொஞ்சுகின்ற அஞ்சுகத்தின்
கோலமொழிச் சத்தமும்
உன் குன்று தோளில் புது பலத்தை வழங்குமடா நித்தமும் சென்று வா -
வென்று வா...

(வெல்க நாடு)

மகிமை கொண்ட மண்ணின் மீது எதிரிகளின் கால்கள்
எதிரிகளின் கால்கள்
மலர் பறிப்பதில்லையடா வீரர்களின் கைகள்
மாவீரர்களின் கைகள்
சென்று வா - வென்று வா...

(வெல்க நாடு)

ஓங்கிய வாள் போன்ற வடிவமடா - அவர்
ஒளி விழிகள் உலகத்தின் படிவமடா
வேங்கைப் புலி மன்னனடா
வீரர்களின் தலைவனடா - அவர்
கட்டளைக்குக் காத்திருந்த நல்லவனே
களம் நோக்கிப் புறப்படடா வல்லவனே..

(வெல்க நாடு)

9. பூம்புகார்



வெளியான தேதி	:	18.9.1964
கதை, திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	ஆர்.சுதர்சனம்
இயக்கம்	:	ப.நீலகண்டன்
நட்சத்திரங்கள்	:	எஸ்எஸ்ஆர், விஜயகுமாரி, டி.வி.நாராயணசாமி, நாகேஷ், ஓ.ஏ.கே.தேவர், கே.பி.சுந்தராம்பாள், சி.டி.ராஜகாந்தம், மனோரமா, குமுதினி, ராதாபாய்
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

ஒருவனுக்கு ஒருத்தி என்ற	கலைஞர்
பொன்னாள் இது போலே	உடுமலை நாராயணகவி
தமிழ் எங்கள் உயிரானது	மாயவநாதன்
இறைவா, இறைவா	ஆலங்குடி சோமு
தொட்டவுடன் மலரொன்று	மாயவநாதன்
என்னை முதன் முதலாக பார்த்தபோது	இராதா மாணிக்கம்
பொட்டிருந்து பூவிருந்தும்	ஆலங்குடி சோமு
துன்பமெல்லாம் நம் மனதை சுத்தம்	மாயவநாதன்
காவிரிப் பெண்ணே வாழ்க	மாயவநாதன்
பவளமணி மாளிகையில் (தப்பித்து)	மாயவநாதன்
நீதியே நீ இன்றும் இருக்கின்றாயா?	மாயவநாதன்

பூம்புகார்

032

இசை : ஆர்.சுதர்சனம்

குரல் : கே.பி. சுந்தராம்பாள்

ஒருவனுக்கு ஒருத்தி என்ற
உயிர்மூச்சை உள்ளடக்கி
அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயன் நன்று - எனும்
திருக்குறளை மறவாதே
திசை தவறிப்போகாதே

வாழ்க்கை எனும் ஓடம்
வழங்குகின்ற பாடம்
மானிடரின் மனதினிலே
மறக்க வொண்ணா வேதம்

(வாழ்க்கை)

வாலிபம் என்பது கலைகின்ற வேடம் - அதில்
வந்தது வரட்டும் என்பவன் முழு மூடம்
வருமுன் காப்பன் தான் அறிவாளி - புயல்
வருமுன் காப்பவன் தான் அறிவாளி
வந்தபின்னே தவிப்பவன்தான் ஏமாளி

(வாழ்க்கை)

துடுப்புகள் இல்லாப் படகு - அலைகள்
அழைக்கின்ற திசையெல்லாம் போகும் - தீமையைத்
தடுப்பவன் இல்லாத வாழ்வும் - அந்தப்
படகின் நிலைபோலே ஆகும்.

10. பூமாலை



வெளியான தேதி	:	23.10.1965
கதை, திரைக்கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	ஆர்.சுதர்சனம்
இயக்கம்	:	ப. நீலகண்டன்
நட்சத்திரங்கள்	:	எஸ்.எஸ்.ஆர்., விஜயகுமாரி, அஞ்சலிதேவி, நாகேஷ், மனோரமா
தயாரிப்பு	:	மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

கன்னம் கன்னம் கன்னம்	
– சந்தனக் கிண்ணம்	கலைஞர்
பியூட்டி... பியூட்டி... பியூட்டி...	சீதாராமன்
கற்பூரக் காட்டினிலே	மாயவநாதன்
பாதாம்கீர் நதிக்கரையிலே	சீதாராமன்
கட்டைவிரல் வெல்லக்கட்டி	குமாரதேவன்
உன் எண்ணத்தை	கவி.ராஜகோபால்
உலகமே எதிர்த்தாலும்	மாயவநாதன்

பூமாலை

033

இசை : ஆர்.சுதர்சனம்

குரல் : எல்.ஆர்.ஈஸ்வரி

கன்னம் கன்னம் கன்னம் - சந்தனக்
கிண்ணம் கிண்ணம் கிண்ணம் - என்
வண்ணம் வண்ணம் வண்ணம் - காதல்
சின்னம் சின்னம் சின்னம்

(கன்னம்)


வாலிப விருந்து வழங்குவேன் அருந்து
ஆயிரம் சாகசம் இருக்குது கைவசம்
வலிய வருகுது பறவை
வளர்க்கப் போகுது உறவை
நிலவு எரிக்குது நெருப்பாய்
நீயும் தழுவி அணைப்பாய்

(கன்னம்)

பார்வையில் மயக்கம் பாவையென் பழக்கம்
பழம்போல் மேனி பார்த்தும் ஏன் தயக்கம்
மீன் இரண்டு உருளுது - இதழ்த்
தேன் திரண்டு பெருகுது
மான் மிரண்டு துள்ளுது
வான் இருண்டு அழைக்குது

(கன்னம்)

11. மறக்க முடியுமா



வெளியான தேதி	: 12.8.1966
திரைக்கதை, வசனம், பாடல்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: டி.கே.ராமமூர்த்தி
இயக்கம்	: முரசொலி மாறன்
நட்சத்திரங்கள்	: எஸ்.எஸ்.ஆர்., தேவிகா, முத்துராமன், காஞ்சனா, எஸ்.வி.சகஸ்ரநாமம், கருணாநிதி, சோ.,
தயாரிப்பு	: மேகலா பிக்சர்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

காகித ஓடம் கடலலை மீது	கலைஞர்
ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்	கலைஞர்
வானும் நிலவும் வீடு	மாயவநாதன்
எட்டி எட்டி ஓடும்போது	திருச்சி தியாகராஜன்
வசந்த காலம் வருமோ	சுரதா

மறக்க முடியுமா

034

இசை : டி.கே.இராமமூர்த்தி

குரல் : பி.சுசீலா

காகித ஓடம் கடலலை மீது
போவது போலே மூவரும் போவோம்
ஆதரவின்றி ஆழ்ந்திடும் ஓடம்
அது போல் ஒன்றாய் மூழ்குதல் நன்றாம்

கோலமும் போட்டு கொடிகளும் ஏற்றி
தேரையும் ஓட்டி தீயையும் வைத்தான்
காலமும் பார்த்து நேரமும் பார்த்து
வாழ்வையும் ஈந்து வதைக்கவும் செய்தான்

அழுவதை கேட்க ஆட்களும் இல்லை
ஆறுதல் வழங்க யாருமே இல்லை
ஏழைகள் வாழ இடமே இல்லை
ஆலயம் எதிலும் ஆண்டவன் இல்லை

தாயின் மடியும் நிலைத்திட வில்லை
தந்தையின் நிழலும் காத்திட வில்லை
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
அம்மா எங்களை அழைத்திடு தாயே

மறக்க முடியுமா

035

இசை : டி.கே.இராமமூர்த்தி

குரல் : டி.எம்.சௌந்திரராஜன், பி.சுசீலா

ஆண் : ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்
உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?

பெண் : ஒன்பதுக்கு வட்டி உடனே கொடுக்க
என்னால் முடியுமா? என்னால் முடியுமா?

ஆண் : பெண்ணுக்குச் சலுகை வட்டியில் உண்டு
அசலைப்போடம்மா அசலைப்போடம்மா
கண்ணுக்குள் ஆடும் கனியேமலரே -
கன்னம் இதுதாம்மா கன்னம் இதுதாம்மா

பெண் : கன்னத்தில் சித்திரம் கனியிதழ் முத்திரை
எண்ணிக்கொள் தருகிறேன் திருமணம்
பண்ணிக்கொள் தருகிறேன்
(இப்ப)

ஆண் : ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்
உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?

பெண் : ஒன்பதுக்கு வட்டி உடனே கொடுக்க
என்னால் முடியுமா? என்னால் முடியுமா?

ஆண் : குளிப்பதில் சுகமோ? நினைவில் களிப்பதில்
சுகமோ? காதல் துளிர்ப்பதில் சுகமோ?
கேட்டதை அளிப்பதில் சுகமோ

பெண் : இருப்பது வீடு... வீணே பறப்பது ஏனோ?
எனக்கும் துடிக்குது பருவம்... ஆனால்
தடுக்குது இதயம்...

12. நெஞ்சுக்கு நீதி



வெளியான தேதி	:	23.10.1979
கதை, திரைக்கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	சங்கர் - கணேஷ்
இயக்கம்	:	கிருஷ்ணன் - பஞ்சு
நட்சத்திரங்கள்	:	ஜெய்சங்கர், சங்கீதா, ஸ்ரீகாந்த், அசோகன், வி.கே.ராமசாமி, வெண்ணிற ஆடை மூர்த்தி, சுகுமாரி,
தயாரிப்பு	:	சிவலீலா சினி ஆர்ட்ஸ்

நெஞ்சுக்கு நீதி

036

இசை : சங்கர் கணேஷ்

குரல் : டி.எம்.சௌந்தரராஜன்

நெஞ்சுக்கு நீதியும்
தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணி

பூண் பஞ்சிக்கு நேர்
பல துன்பங்களெல்லாம்
உன் பார்வைக்கு நேர் பெரும் தீ

வஞ்சனையின்றி பகையின்றி சூதின்றி
வையக மாந்தரெல்லாம் வாழ்வதற்கே
கவி பாரதி பாடிய நீதி
வாய்மைசேர் நெஞ்சுக்கு நீதி

ஒருவரைப் பற்றி குறை கூறும் முன்னாலே
உன் முதுகை கொஞ்சம் திரும்பி பாரு பின்னாலே
உத்தமர்கள் அறிவுரையை
உதட்டளவில் நிறுத்தாமல்
உள்ளத்தில் பதித்திடுவாய் அண்ணே
சிந்தனை செம்மல்கள் காட்டிய நெறிகளை
செயல்களாய் குவித்திடு அண்ணே

(ஒருவர்)

சாதி மதங்களை சாய்ப்போம் என்று
புத்தர் காந்தி போதனை புரிந்தார்
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண
அறிஞர் அண்ணா இங்கே பிறந்தார்
கடமையை செய்வோம் உரிமையை பெறுவோம்
மடமையை மாய்த்திடுவோம்
மனிதராய் வாழ்ந்திடுவோம்

(ஒருவர்)

ஊழல் ஊழல் என்று தினம் பாடினாயே பாட்டு
உன் முகத்தை நீயே ஒரு கண்ணாடியில் காட்டு
வீண் பழிபோடும் வேலை உனக்கு
ஆகாதுடாங்கப்பா
பெரும் தூண் என்று உன் தலையில் வீழுமப்பா

(ஒருவர்)

13. தூக்குமேடை



வெளியான தேதி	:	26.5.1982
கதை, திரைக்கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	சங்கர் - கணேஷ்
இயக்கம்	:	பி. அமிர்தம்
நட்சத்திரங்கள்	:	சந்திரசேகர், மேகனா
தயாரிப்பு	:	ஸ்ரீஅப்பன் பிலிம்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

குடி உயர கோல் உயரும்	கலைஞர்
ஆயிரம் பிறைகள் காணும் வரை	கலைஞர்
குறிஞ்சி மலரொன்று...	கலைஞர்
ஏய் கனவிலே மயங்காதே	கலைஞர்
இனியொரு தொல்லையும் இல்லை	பாரதியார்

தூக்கு மேடை

031

இசை : எம்.எஸ்.விசுவநாதன்

குரல் : மலேசியா வாசுதேவன்

பல்லவி:

ஆண் : குடி உயர கோல் உயரும்
கோல் உயர குடி உயரும்
உயரம் எத்தனை அழகாய் எத்தனை விதமாய்
எங்கள் மக்கள் சாகிறார்
எரியும் நெருப்பில் வேகிறார்

சரணம்:

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்றார் பாட்டுல
எங்கள் மன்னர் வாழுகின்றார் மண்ணாங்கட்டி வீட்டுல
இடி இடித்தால் மழை பொழிந்தால்
மன்னரெல்லாம் ரோட்டுல
சிறகொடிந்த பறவை கூட இருக்குதய்யா கூட்டில

(குடி உயர)

எங்களுக்கும் உணர்ச்சி உண்டு
எங்கள் பங்களாவில் மெத்தை உண்டு
புளிச்சக்காடி மதுவை உண்டு
புருஷன் மனைவி சேர்வதுண்டு
வெளிச்சம் போட்ட காரும் வந்தா
விலகி விலகி படுப்பதுண்டு ....

(குடி உயர)

முத்தெல்லாம் மூக்குச் சளி
ரத்தக் காயம் ரத்தினமாம்
வைரங்கள் நட்சத்திரம்
வானவில்லே வைடூரியம்... எப்படி.....

முத்தெல்லாம் மூக்குச் சளி
ரத்தக் காயம் ரத்தினமாம்
வைரங்கள் நட்சத்திரம்
வானவில்லே வைடூரியம்..

குத்துக் கல்லு சிம்மாசனம்
குப்பத் தொட்டி ராஜாங்கம்
செத்துப் பிழைக்கும் மக்களுக்கு
ஜெகத்தை அழிக்கும் சக்தி உண்டு

(குடி உயர)

தூக்கு மேடை

இசை : எம்.எஸ்.விசுவநாதன்

குரல் : வாணி ஜெயராம்

038

ஆயிரம் பிறைகள் காணும் வரை
அலைகடல் ஓசை அடங்கும் வரை
தமிழே உனக்காக நீ தனியே எனக்காக
காத்திருப்பேன் நான் காத்திருப்பேன்.....

கதிரவன் ஊர்வலம் நிற்கும் வரை
கனி வளம் உலகில் வற்றும் வரை
பொதிகைத் தென்றல் தூங்கும் வரை
பொன்னி நதியான் செழிக்கும் வரை
தமிழே உனக்காக – நீ
தனியே எனக்காக..

(ஆயிரம்)

இயற்கை வளங்கள் நிலைக்கும் வரை
இலக்கிய செல்வம் வாழும் வரை
இளமை அழகு தீரும் வரை
முதுமை உடலில் பாயும் வரை
தமிழே உனக்காக – நீ
தனியே எனக்காக

(ஆயிரம்)

தூக்கு மேடை

039

இசை : எம்.எஸ்.விசுவநாதன்

குரல் : ஜெயச்சந்திரன், வாணி ஜெயராம்

பெண் : ஆஆ.....ஆஆ.....லாலலலாலா...
குறிஞ்சி மலரொன்று குலுங்கி அழைக்குது
குலவிட வருவாய் குளிர் தென்றலே
தென்றலின் சுகத்தில் தேனிடைக் கலந்து
தளிராய் வாழ்வோம் இன்பத்தில் மிதந்து

ஆண் : கற்கண்டு தோட்டத்தில் பால் பாய்ந்து
கரும்பு கலப்பையாய் ஏர்ஓட்டி
அற்புதமாய் விளைந்த கதிர்மணியே
அற்புதமாய் விளைந்த கதிர்மணியே
அணைத்து மகிழ்வோம் கண்மணியே!

(குறிஞ்சி)

ஆண் : இன்ப நூலுக்கு முன்னுரை எழுதிட வருக
இயல் இசை கூத்தென முத்தமிழ் சுவையை தருக
முத்தமிழ் கயல்விழி முக்கனி உன் மொழி
முக்திக்கு ஒரு வழி நீ
முத்துமாரி பொழி நீ

பெண் : அணைத்தால் விளக்கும் இருண்டு விடும்
அஞ்சும் தேகம் துவண்டு விடும்
இணைத்தாள் நம்மை தமிழன்னை
இனி பிரிவதில்லை என்றும் நானுன்னை

(குறிஞ்சி)

தூக்கு மேடை

040

இசை : எம்.எஸ்.விசுவநாதன்


குரல் : வாணி ஜெயராம்

ஏய் கனவிலே மயங்காதே
நான்தானே குறுமுல்லை
என்றே நினை ஒரு நாள் அணை
நீ வாராய் ராஜா... நீ வாராய் ராஜா...

கண்ணிரண்டும் சின்ன சின்ன பூதானே
பெண்ணின் மேனி கைகள் தேடும் மான்தானே
நீ வெட்கம் கொண்டாயே
சொல்லுக்கு செய்தாயே
ஏதோ பாட்டுப்பாட
அல்லிப் பூவை தேடி வந்த பருவமே
என்றே நினை ஒரு நாள் அணை
நீ வாராய் ராஜா நீ வாராய்

வந்தபேர்க்கு வாரி இவர் தருவாரே
வள்ளல் நேரில் வந்தது போல வந்தாரே
ரம்மை போல கண்ணு ஜின்னை போல கண்ணும்
ஜாடை ஒன்று காட்டி நாடி வரும் நாட்டி
நானே உன்னை தேடி வந்து நின்றேனே
என்றே நினை ஒரு நாள் அணை
நீ வாராய் ராஜா நீ வாராய்

14. ஒரே ரத்தம்



வெளியான தேதி	:	8.5.1987
கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	தேவேந்திரன்
இயக்கம்	:	சொர்ணம்
நட்சத்திரங்கள்	:	கார்த்திக், மு.க.ஸ்டாலின், சீதா
தயாரிப்பு	:	முரசு மூவிஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

ஒரு போராளியின் பயணமிது	கலைஞர்
யார் வீட்டு ரோஜா	வாலி
தங்கமே இங்கே வா	வைரமுத்து
பொண்ணே பூங்கொடி	பூவை செங்குட்டுவன்

ஒரே ரத்தம்

04

இசை : தேவேந்திரன்

குரல் : தேவேந்திரன்

ஒரு போராளியின் பயணமிது - அவன்
போராடி பெற்ற பரிசு இது
ஓய்வில்லாமல் உழைத்தவனே - இனி
ஓய்வு கொள்ள போறியா
ஓய்வில்லாமல் உழைத்தவனே - இனி
ஓய்வு கொள்ளப் போறியா
தாயின் மடியில் தவழ்ந்தவனே நீ
தரைக்குள் தூங்கப் போறியா

இளைஞர்களை எழுப்ப வந்த குட்டிசிங்கமே
இளஞ்சூரியனாய் ஒளிவீசிய சுட்டித்தங்கமே
கொலைவெறி ஜாதபேத ஆயுதங்கள் தூக்கினாரே
கொள்கைக்காக வாழ்ந்த உந்தன் உயிரை போக்கினாரே
ஓய்வில்லாமல் உழைத்தவனே - இனி
ஓய்வு கொள்ள போறியா

இயேசு புத்தர் நபிகள் காந்தி காட்டும் வழியிலே
பேசும் புயல் பெரியார் அண்ணா அம்பேத்கர் மொழியிலே
குன்றம் போல முழங்கி நடந்த குலவிளக்கு நீயடா
உன் கொடி நிழலில் என்றும் நாங்கள் கூடுவோம் பாரடா

15. வீரன் வேலுத்தம்பி



வெளியான தேதி	: 12.6.1987
கதை, வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: எஸ்.ஏ. ராஜ்குமார்
இயக்கம்	: இராம. நாராயணன்
நட்சத்திரங்கள்	: விஜயகாந்த், கார்த்திக், விஜி
தயாரிப்பு	: ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

சுருளு மீசைகாரனடி வேலுதம்பி	கலைஞர்
அடி கட்டழகு மானே	எஸ்.ஏ.ராஜ்குமார்
பாய விரிச்சேன்	எஸ்.ஏ.ராஜ்குமார்
வெச்ச குறி	எஸ்.ஏ.ராஜ்குமார்
வெட்டவெளி	எஸ்.ஏ.ராஜ்குமார்

வீரன் வேலுத்தம்பி

042

இசை : எஸ்.ஏ.ராஜ்குமார்

குரல் : எஸ்.ஏ.ராஜ்குமார்

சுருளு மீசைக்காரனடி வேலுத்தம்பி
சூராதி சூரனடி வேலுத்தம்பி
சூரியனில் நெருப்பெடுப்பான், சூழ்ச்சிகளை கொளுத்திடுவான்
சுருளு மீசைக்காரனடி வேலுத்தம்பி
சூராதி சூரனடி வேலுத்தம்பி

எரிமலையில் அடுப்பெரிப்பான், ஏழையற்கு உணவளிப்பான்
எங்கள் குல தெய்வமாவான் அவன் தங்ககுல சிங்கமாவான்
பூகம்ப மேடையிலே புரட்சி கீதம் பாடிடுவான்
பொல்லாதோர் படையெல்லாம் பொடிப்பொடியா ஆக்கிடுவான்
(சுருளு மீசைகாரனடி)

குழு:
கும்மியடிப் பெண்ணே கும்மியடி குலவைப் போட்டுக் கும்மியடி
கும்மியடிப் பெண்ணே கும்மியடி குலவைப் போட்டுக் கும்மியடி

கடமைக்குத்தான் உயிர் கொடுப்பான்
கண்ணியத்தைக் காத்து நிப்பான்
இந்த தம்பியிருந்தா படைக்கு பயமில்லே
இந்த தத்துவத்தைத்தான் மறந்து போனதில்லே
தனிவுடமைக்கு தடைவிதித்து பொதுவுடைமைக்கு போர்தொடுத்து
தும்பியைப் போல் பறந்து வந்து துன்பங்களை தீர்த்துவைப்பான்

16. மக்கள் ஆணையிட்டால்



வெளியான தேதி	:	19.1.1988
திரைக்கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	எஸ்.ஏ.ராஜ்குமார்
இயக்கம்	:	இராம. நாராயணன்
நட்சத்திரங்கள்	:	விஜயகாந்த், ஸ்டாலின்
தயாரிப்பு	:	ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

உங்கள் ஓட்டு கதிரவனுக்கா,	கலைஞர்
இது எந்தன் ராஜ்ஜியந்தான்	எஸ்.ஏ.ராஜ்குமார்
ராஜ்ஜியந்தான் ஏதுமில்லே	எஸ்.ஏ.ராஜ்குமார்
நா கும்பகோணம்	எஸ்.ஏ.ராஜ்குமார்
டேய் டேய் பயலே	எஸ்.ஏ.ராஜ்குமார்

மக்கள் ஆணையிட்டால்

043

இசை : சங்கர் கணேஷ்

குரல் : மலேசியா வாசுதேவன் குழு

"உங்கள் ஓட்டு கதிரவனுக்கா, எங்கள் ஓட்டு கதிரவனுக்கே
நாட்டு நடப்ப பார்த்து போடுங்கம்மா ஓட்டு"

ஆற, அமர கொஞ்சம் யோசிச்சுப் பாரு
நீ அடுத்துவரும் தலைமுறையே சிந்தித்துப் பாரு
ஏற, இறங்க பாத்து எடைகளைப் போடு
நீ எத்தனுக்கும் பித்தனுக்கும் தடைகளைப் போடு

(ஆற, அமர)

ஓட்டுக்கு உன்னிடத்தில் வருபவன் யாரு
உழைப்பவனா, ஊரை ஏய்ப்பவனா
தேர்தல் களத்தினிலே நிற்பவன் யாரு
தியாகம் செஞ்ச வரை மோசம் செஞ்சவரு
ஓட்டுக்கு பணம் கொடுக்கும் உலுத்தர்களை நம்பாதேப்பா
நாட்டுக்கு உயிர் கொடுக்கும் நல்லவரை தள்ளாதேப்பா
லஞ்சப் பேய்களை வெறுக்கணுமே
ஏழை துன்பம் தீர்ப்பவரே ஜெயிக்கணுமே... அதுக்கு

(ஆற அமர)

என்ன விலை கேட்டு, போடுங்கம்மா ஓட்டு
அரிசி விலையை பாத்து போடுங்கம்மா ஓட்டு
இந்த படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா
கொள்கையே இல்லாத கொடியவன் யாரு
கொடுமைக்குப் பணியா வீரனும் யாரு
ஊழல் புரிஞ்சி வாழும் மனுஷன் யாரு
அதை ஊருக்குச் சொல்லும் உயர்ந்தவன் யாரு
உறவுக்கு கரம் கொடுப்பான் எங்க வீட்டு தம்பியப்பா
உரிமைக்கு குரல் கொடுப்பான் தென்பாண்டி சிங்கமப்பா
உதயக் கதிருதான் உதிக்குது பாரு உடன் பிறப்பே நீ ஒன்றாக சேரு

(ஆற, அமர)

17. காவலுக்கு கெட்டிக்காரன்



வெளியான தேதி	: 14.1.1990
திரைக்கதை, வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: இளையராஜா
இயக்கம்	: இளையபாரதி
நட்சத்திரங்கள்	: பிரபு, நிரோஷா
தயாரிப்பு	: திரைக்கூடம்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

காவலுக்கு கெட்டிக்காரன்	கலைஞர்
இதழென்னும்	இளையபாரதி
அம்மம்மா	இளையபாரதி
சோலை இளங்குயிலே	இளையபாரதி
கருவறை	இளையபாரதி

காவலுக்கு கெட்டிகாரன்

044

இசை : இளையராஜா

குரல் : இளையராஜா

காவலுக்கு கெட்டிக்காரன் இந்த காக்கிச்சட்டைக்காரன்
தஞ்சாவூரு ஜில்லாக்காரன் அவன்
அஞ்சாநெஞ்சம் படச்ச வீரன்
சொன்னதை செய்வோமென்பான்
அப்படி செய்ததையே சொல்வோமென்பான்
நம்பிக்கையா நடந்துக்குவான்
நம்ப நாட்டுக்காக உழைச்சிடுவான்
மாமூலு வாங்கமாட்டான்
நல்ல மனுஷங்கள வெறுக்க மாட்டான்
மனசாட்சி கடவுளென்பான்
நம்ப மக்களுக்கு தொண்டு செய்வான்

(காவலுக்கு கெட்டிக்காரன்)

வேலியே பயிரை மேயும் - அந்த
வேதனையை பொறுக்க மாட்டான்
வெள்ளாட்டு மேலே பாயும் - ஒரு
வேங்கையாக இருக்க மாட்டான்
சாராயம் காய்ச்சும் கூட்டம் - இவன
சப்போர்ட்டு கேட்டுதுன்னா
சத்தியமா துடிச்சிடுவான்
சவுக்காலே அடிச்சுடுவான்
பதுக்கலையும் கடத்தலையும்
பஞ்சு பஞ்சா பிச்சிடுவான்

(காவலுக்கு கெட்டிக்காரன்)

18. மதுரை மீனாட்சி



வெளியான தேதி	: 24.2.1993
வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: தேவா
இயக்கம்	: பி.அமிர்தம்
நட்சத்திரங்கள்	: செல்வா, ரஞ்சிதா
தயாரிப்பு	: பூமாலை புரொடக்சன்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

தங்கக்குணம் படைத்த எங்கள்	கலைஞர்
நீதிமன்றத் துலாக்கோலே சாயலாமா	கலைஞர்
மாலை மாலை பூமாலை சூடவா	வைரமுத்து
ஐலவ்யூ மீனா	வைரமுத்து

மதுரை மீனாட்சி

045

இசை : தேவா

குரல் : சித்ரா

பெண் : தங்கக்குணம் படைத்த எங்கள் தந்தையே
பொங்கும் எங்கள் கண்ணீரால்
உங்கள் பாதங்களைக் குளிப்பாட்டுகின்றோமே

எங்கள் கைவிரல்களையே விழிகளாக்கி
கல்வி வெளிச்சம் தந்தவரே!

குழு : கருணைக்கடலே! பொறுமையின் இமயமே!
கருணைக்கடலே! பொறுமையின் இமயமே...

எமது இதயங்களை மலர்களாக்கி
தொடுத்த மாலையை உமது புகழ் சிகரத்தின்
கழுத்தில் அணிவிக்கின்றோம்
உம்மைக் காப்பாற்றி வைத்துக் கொள்ள
முடியாத எங்களை மன்னித்துவிடும்
எங்கள் தந்தையே!

மதுரை மீனாட்சி

046

இசை : தேவா

குரல் : மலேசியா வாசுதேவன்

நீதிமன்றத் துலாக்கோலே சாயலாமா
நிரபராதி நியாயமின்றிச் சாகலாமா சாகலாமா

பாவமோரிடம் பழியோரிடம் என்பது இதுதானா
ஆதவன் ஒளியை அமாவாசை என்பதும் சரிதானா

இது நல்லோர் வாழ்ந்திடும் திருநாடா
இல்லை பொல்லா விலங்குகள் இருள் காடா

அராஜகம் என்பதற்கோ அளவே இல்லையா
ஆண்டவா நீ இருந்தால் பதில் சொல்லையய்யா (பாவ)

வேங்கையின் பிடியில் வெள்ளாடு
சிக்கிய வேதனை பாரய்யா

வேலியே பயிரை மேய்ந்திடும்
கொடிய சாதனை கேளய்யா

அநியாயமாக ஒரு தமிழ் மகன் சாவது நன்றோ
அன்னைத் தமிழகம் அமைதியைக் காண்பது என்றோ

துரோகிகள் கூட்டம் பிடிபடவே
தூயவர் துயரம் பொடிபடவே

தூக்கிடு கொடியை உன் தோளுக்கு மேலே
தோழா இனிதான் நம் அறப்போர் வாளுக்குவேலை
நம் அறப்போர் வாளுக்கு வேலை.

19. மண்ணின் மைந்தன்



வெளியான தேதி	: 4.3.2005
திரைக்கதை, வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: பரத்வாஜ்
இயக்கம்	: இராம. நாராயணன்
நட்சத்திரங்கள்	: சத்யராஜ், சிபிராஜ், சுதா
தயாரிப்பு	: அழகர் பிலிம்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

கண்ணின் மணிபோல	கலைஞர்
கிழக்கு கிழக்கு திசை வெளுக்கும் வரை	வைரமுத்து
ஆந்திரா கோங் குரா எப்படி	வாலி
இது லேடீஸ் ஹாஸ்டல்	நா.முத்துகுமார்
ஏம்மா ஏம்மா விக்கிக்கிச்சா	சிநேகன்

மண்ணின் மைந்தன்

047

இசை : பரத்வாஜ்

குரல் : ஜெயலட்சுமி, சித்ரா, மாஸ்டர் சத்யா

லல்லல லலல்லலா
கண்ணின் மணிபோல
கனியின் விதைபோல
மண்ணின் மைந்தர் நமக்குள்ளே
கசப்பும் வெறுப்பும் எதுக்காக
மண்ணின் மைந்தர் வாழ்வதற்கு - இந்த
மண்ணில் உரிமை இல்லையா
கண்ணை காக்கும் கடமைதான்
இமைக்கு பெரிய தொல்லையா
கடமை தவறி நடப்பதற்கு
காவல் எதற்கு சொல்லையா

(கண்ணின்)

விண்ணில் ஏறவும் கடலைச்சாடவும்
வீரம் வேண்டும் விவேகம் மிகவும் வேண்டும்
விண்ணில் ஏறவும் கடலைச்சாடவும்
வீரம் வேண்டும் விவேகம் மிகவும் வேண்டும்
வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்
விரோத உணர்வு வேரோடு சாய வேண்டும்
உறவுக்கு கைகொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம்
நாம் என்று சொல்லிப்பாருங்கள்
உதடுகள் ஒட்டும் உறவுகள் மலரும்
நான் என்று சொல்லிப்பாங்கள்
உதடுகள் இணையாது உறவும் பிறவாது

(கண்ணின்)

20. கண்ணம்மா



வெளியான தேதி	: 4.2.2005
கதை, வசனம்	: கலைஞர் மு.கருணாநிதி
இசை	: எஸ்.ஏ. ராஜ்குமார்
இயக்கம்	: பாபா விக்ரம்
நட்சத்திரங்கள்	: பிரேம், மீனா, வித்யா, போஸ் வெங்கட்
தயாரிப்பு	: பாபா சினி பிலிம்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

என் இரு விழி மழைதனை காணாதே	கலைஞர்
இளைஞனே இளைஞனே நீ விழித்தெழு	கலைஞர்
கை கொடு கை கொடு கண்ணம்மா	வைரமுத்து
என்ன எத்தன ராத்திரி நிலவு எரிச்சுது	வாலி
ஜீங்கு ஜீங்கு தாம்பாளம்	வாலி
இலமரக்கிளையினிலே அம்மாவின் சேலையிலே	பாபா விக்ரம்

கண்ணம்மா

048

இசை : எஸ்.ஏ.ராஜ்குமார்

குரல் : மாணிக்க வினாயகம்

இளைஞனே இளைஞனே நீ விழித்தெழு
கலைஞன் நான் அழைக்கின்றேன் விழித்தெழு
காற்றைப் போல விரைந்து வா
ஆற்றைப் போல பெருகி வா
உலகத்தைப் படித்து நீ உயர்ந்திடவே
உன்னை நீயே உணர்ந்திடவே
உழைப்பவர்க்கு துணை புரிந்திடவே
உடன்பிறப்பே என் உடன்பிறப்பே

(இளைஞனே)

யுவனும் யுவதியும் ஆர்த்தெழுந்தால்
யுகத்தையே மாற்றலாம்
ஜாதி மத பேத சரித்திரத்தை
சம்மட்டியால் அடித்து நொறுக்கலாம்
ஆதிமகனாம் வள்ளுவர் குறளை
ஓதி உணர்ந்து ஒலித்திடக் கேட்கலாம்

(இளைஞனே)

லட்சிய வேட்கை இடியாய் முழங்கிடவே
இடியோசை கேட்ட நாகமாய்
இனப்பகை மாய்ந்திடவே
அலட்சியம் வேண்டாம் அன்பு இளைஞனே
ஆன்றோர்க்கு தலைவணங்கி
அறிஞர் வழியில் நடந்திடவே

(இளைஞனே)

கண்ணம்மா

049

இசை : எஸ்.ஏ.ராஜ்குமார்

குரல் : வாணி ஜெயராம்

என் இரு விழி மழைதனை காணாதே
என் இதயம் மகிழ்வதை காண்பீரே
போர்வாள் ஏந்தி என் மகன் பொன்முடி
புல்லரை வீழ்த்தி உயிர்துறந்தான்
புல்லரை வீழ்த்தி உயிர் துறந்தான்

(என் இரு விழி)

காதலுக்கு தடைசொல்லக் கூடாதென்று - ஒரு
கட்டழகுப் பெட்டகத்தை துணைசேர்த்த - அவன்
கருத்துக்கு ஏற்றவொரு கன்னி இளமானை
களம் சென்று திரும்பியபின் மணமுடிக்க காத்திருந்தேன்

அவனோ களிறுகளை பந்தாடி
புரவிகளை பஞ்சாக்கி
கயவர்களின் வாள்முனையை நெஞ்சில் தாங்கி
காதலியை தவிக்கவிட்டு காலத்தை நகர்த்துகின்ற
இந்தக் கிழவியையும் கண்ணீரில் மிதக்கவிட்டு
கடமையினை முடித்து விட்டான்

களிப்பொரு பக்கம் கண்ணில் நீர் ஒரு பக்கம்
களப்புகழ் பெற்ற மகனை வாழ்த்துகின்றேன்
கருவில் சுமந்த தாயல்லவோ
அதனால் வாடுகிறேன்

(என் இரு விழி)

21. பாசக் கிளிகள்



வெளியான தேதி	:	15.1.2006
கதை, திரைக்கதை, வசனம்		
பாடல்கள்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	வித்யாசாகர்
இயக்கம்	:	பி.அமிர்தம்
நட்சத்திரங்கள்	:	பிரபு, நவ்யா நாயர்
தயாரிப்பு	:	அஞ்சுகம் கலைக்கூடம்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

தென்றல் என்னும் தேர் ஏறி	கலைஞர்
கருத்த மச்சான் ஒனக்குத்தான்	கலைஞர்
தங்கை என்ற பாசக்கிளி	கலைஞர்

பாசக்கிளிகள்

050

இசை : வித்யாசாகர்

குரல் : மதுபாலகிருஷ்ணா

ஆண் : ஆ... தென்றல் என்னும் தேர் ஏறி - தமிழ்
மன்றம் வந்த முல்லை மலரே
தென்றல் என்னும் தேர் ஏறி - தமிழ்
மன்றம் வந்த முல்லை மலரே
உனைப்போல் இல்லையோர் அழகே
உதிக்கும் ஞாயிறெனெ உருமாறி
உலகை எழுப்ப ஒளியாய் வா! வா!

(தென்றல்)

நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூசனி நான் பாடும் ராகம்
நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூசனி நான் பாடும் ராகம்
பாவமுடன் ஜதிசொல்லி பாடும்
தகுதியும் அதனுடன் கூடும்
நாலும் தெரிந்தவன் நான்தானே
பல நூலின் ஆழம் அறிவேனே

(தென்றல்)

தகத் தோம் தில்லானா
தகத் தோம் தில்லானா (ஜதி சொல்லல்)
தோம்... தோம்...
தண்ணிலவாய் குளிரும் உன்முகம்
தனலாய் கொதிக்கும் உன் அகம்
மாமதுரை தமிழ்ச்சங்கப் பாட்டு
தேன்மதுர இதழ்கள் பாடக் கேட்டு
செவியில் தேன்பாய வீணை மீட்டு
உலகிலே யார் காட்டு

பாசக்கிளிகள்

05

இசை : வித்யாசாகர்

குரல் : மாணிக்க விநாயகம், ஸ்ரீலேகா பார்த்தசாரதி

பெண் : கருத்த மச்சான் ஒனக்குத்தான் ஆ...
வறுத்த மீன வச்சிருக்கேன் ம்ம்... ம்...
வாயத்திறந்து வாங்கிக்க - நான்
பாய விரிச்சு படுத்துப்பேன் ம்... ம்...
நீ பாஞ்சு வந்து கட்டிக்கோ
ஒஞ்சு போயி நிக்காத ஓடிவந்து சாஞ்சுக்கோ

(ஏ கருத்த மச்சான்)

ஆண் : ஏ பச்சரிசி சிரிப்பே
என்ன பத்திக்கொண்ட நெருப்பே
நான் ஆண்டி என்ன தூண்டிப்போட்டு இழுக்காதே

பெண் : ஏ... ஆண்டிக்குத்தான் தேவ ஆறுகால பூஜ
நானழுத்த போற மெழுக பாக்காதே

ஆண் : அடங்காத பொம்பளையே அழகான பூதகியே

பெண் : ஏ... அடுப்பூதும் பொண்ணுன்னு
அலட்சியமா கேலிபண்ணும்
ஆம்பளைங்க திருந்தவேணும்
அடிமைத்தனம் போகவேணும்
தாலியத்தான் கட்டிப்புட்டு
தவசிவேஷம் போட்டுக்கிட்ட

(கருத்த)

ஆண் : ஏ... வறுத்த மீன தின்னா
சாமிகுத்தம் வந்து சேரும்
நான் சைவம் பெண்ணே
அசைவம் போட்டு கெடுக்காதே

பெண் : ஆணு பொண்ணு உறவே
அசைவம்தானே மாமா
அருகில் வரும் மீன வெறுக்காதே

ஆண் : அடங்காத பொம்பளையே
அழகான பூதகியே

பெண் : எட்டுக்கால் லட்சணமே
எமனேறும் வாகனமே
என்றுதான் நானும் மச்சான்
ஏளனமே செய்வேனய்யா
என்நிலம புரியலையா
உன்மனசும் ஏங்கலையா

(கருத்த)

பாசக்கிளிகள்

052

இசை : வித்யாசாகர்

குரல் : திப்பு, கார்த்திக், சுஜாதா, மனோரமா

ஆண் : தங்கை என்ற பாசக்கிளி கொஞ்சி விளையாட...
பொங்கும் எங்கள் நெஞ்சங்களில் புன்னகைப் பூத்தாட..
அண்ணன்மார்கள் சுற்றிநின்று ஆனந்தப் பண்பாட
குமரிப்பெண்ணின் கூந்தலுக்கு குறிஞ்சிப்பூக்கள் ஓட

நிலவும்தான் இவள் முன்னால் நின்றாடுமா
நிலமயில் இவள்போல அழகாகுமா
நிலவும்தான் இவள் முன்னால் நின்றாடுமா
நிலமயில் இவள்போல அழகாகுமா
ஆ... ஆ... லு... லு...

ஆண் : தங்கை என்ற பாசக்கிளி கொஞ்சி விளையாட

குழு : ஆட

ஆண் : பொங்கும் எங்கள் நெஞ்சங்களில் புன்னகைப் பூத்தாட..

குழு : ஆட

ஆண் : அண்ணன்மார்கள் சுற்றிநின்று ஆனந்தப் பண்பாட

குழு : ஆட...!

ஆண் : குமரிப்பெண்ணின் கூந்தலுக்கு குறிஞ்சிப்பூக்கள் ஓட

குழு : ஆட...!

ஆண் : பிறந்தாய் ஒரு பிள்ளைக்கனி அமுதாய் பிறந்தாய்
ஒரு வெள்ளிப் பிறைபோல வளர்ந்தாய்
துள்ளிடும் இளமானாய் திகழ்ந்தாய்
எங்கள் வீட்டில் விளக்காக ஒளிவீசப் பிறந்தாய்

மனோரமா: கண்ணகிதான் இங்கு வந்து தங்கையானால் பாரு
பெண்ணழகி பிறந்தநாளில் நல்வாழ்த்துக் கூறு

பெண் : இருவருமே என்வாழ்வில் இமையானீரே

ஆண் : சிறந்தாய் ஒரு செம்மொழித் தமிழாய் சிறந்தாய்
செழுஞ்சுடர்கதிர்போல உயர்ந்தாய்
சிவப்பு மல்லிகைப்பூவாய் மலர்ந்தாய்
சிறந்தாய் ஒரு செம்மொழித் தமிழாய் சிறந்தாய்
செழுஞ்சுடர்கதிர்போல உயர்ந்தாய்

சிவப்பு மல்லிகைப்பூவாய் மலர்ந்தாய்
எங்கள் வீட்டில் தங்கையாகப் பிறந்து
எங்கள் வீட்டில் தாயாய் திகழ்வாய்
எங்கள் வீட்டில் தங்கையாகப் பிறந்து
எங்கள் வீட்டில் தாயாய் திகழ்வாய்

மனோரமா: உன்னை ஒரு நல்ல வீட்டு மருமகளாய் காண
அன்னைமனம்போல் இந்த அண்ணன்மனம் ஏங்க

பெண் : அம்மா என் கண்கள் குளமாகுதே...

22. உளியின் ஓசை



வெளியான தேதி	:	4.7.2008
கதை, வசனம், பாடல்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	இளையராஜா
இயக்கம்	:	இளவேனில்
நட்சத்திரங்கள்	:	வினீத் - கீர்த்திசாவ்லா
தயாரிப்பு	:	ஜெ. நந்தினி ஆர்ட்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

அலையெல்லாம் நடனமாடும்	கலைஞர்
சோழ வள நாடு	காமகோடியான்
எத்தனை பாவம் இங்கு நடனத்திலே	முத்துலிங்கம்
புலர்கின்ற பொழுது	மு.மேத்தா
கல்லாய் இருந்தேன்	பழநிபாரதி
அழகி வர்றா	சினேகன்
காலத்தை வென்ற ஒருவன் இவன்	நா.முத்துக்குமார்

உளியின் ஓவை

053

இசை : இளையராஜா

குரல் : இளையராஜா

அலை யெலாம் நடனம் ஆடும்; தமிழர்
கலை யெலாம் தமது பண்பைப் பாடும்.
காடுகளில் ஓடி விளையாடுகின்ற
பீடு மிகு மானினமும்,

பாடும் இசை
ஜோடிக் குயில்
தாளமொடு
பாவ மிடு

கான மயில்
புள்ளினமும்
பட்டுக்கொடி,
கொற்றக் குடை

சுற்றிச் சுழல்
வெற்றித் திரு
முத்துத் தமிழ்
கற்றுச் சுடர்

பெற்றுக் குலச்
சோழ தேசப்
புகழ் பாடித்
தொழுதிடுவோம்

23. பெண் சிங்கம்



வெளியான தேதி	:	3.6.2010
கதை, திரைக்கதை, வசனம்	:	கலைஞர் மு.கருணாநிதி
இசை	:	தேவா
இயக்கம்	:	பாலி ஸ்ரீரங்கம்
நட்சத்திரங்கள்	:	உதய்கிரண், மீரா ஜாஸ்மின்
தயாரிப்பு	:	நந்தினி ஆர்ட்ஸ்

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள்

வீணையில் எழுவது வேணுகானமா	கலைஞர்
இயற்கையெனும் தாய்மடியில்	வைரமுத்து
நீ சொன்னால் தேய்பிறை வளரும்	வைரமுத்து
கல்யாணம் ஆகாத பெண்ணே	பாரதிதாசன்
சில் சில் சில்லா சிரிச்சா	வாலி
ஆடி ஆடும் இசை	பா.விஜய்

பெண் சிங்கம்

054

இசை : தேவா

குரல் : எஸ்.பி.பாலசுப்ரமணியம், சித்ரா

ஆஹா...

ஆண் : வீணையில் எழுவது வேணுகானமா
திருவாடுதுறையின் தோடி ராகமா
திருவெண்காட்டு மகுடி நாதமா
இசைவதனால் இணையும் ஈருயிர்கள்
இணைந்தபின்பு இரண்டும் ஓர் உயிர்தானே

ஆண் : காலை அரும்பி மாலை மலரும்
காதல் நோயால் நானும் உருகினேன்
பெண் : காலை அரும்பி மாலை மலரும்
காதல் நோயால் நானும் உருகினேன்
ஆண் : ஓவியமாகி நீயும் கொடுமுடி கோகிலம்தானே
கொள்ளை கொண்டாய்
நெஞ்சத்தினையே, கொடுத்துவிடு
எடுத்தபடியே
பெண் : தேனும் பாலும் கலந்த பின்னே
தனியே சுவையை பிரிக்கலாகுமா
ஆண் : இனிக்கும் தேனாய் நீயும்
துடிக்கும் ஆண்பாலாய் நானும்
திருமணம் ஆன பின்னால் தேனும் பாலுமாகலாம்
பெண் : ஆயிரம் இரவுகள் போதும்
பாயிரம் பாடல் போதும் இப்போது
ஆண் : செம்புலம் நீர்போல அன்புடை நெஞ்சமும்
நாம் கலந்தோமே

கலைஞர் பங்கேற்ற பிறமொழிப் படங்கள்



1. ஆடஜென்மா (தெலுங்கு - 24.11.1951)

இப்படத்தின் மூலத் தமிழ்ப்படம் 'தேவகி' என்ற பெயரில் 1951ஆம் ஆண்டு வெளிவந்தது. தேவகி படத்தில் எம்.என்.கண்ணப்பா, எஸ்.பாலச்சந்தர், மாதுரிதேவி, வி.என்.ஜானகி மற்றும் ந.பாலசுப்பிரமணியன் நடித்திருந்தனர். இசை ஜி.ராமநாதன், இயக்கம் ஆர்.என்.மணி படத்தை கணபதி பிக்சர்ஸ் தயாரித்திருந்தனர். படத்திற்கு கதை, வசனத்தை கலைஞர் எழுதியிருந்தார்.

இப்படத்தைத்தான் மாடர்ன் தியேட்டர்ஸ் தெலுங்கில் 'ஆடஜென்மா' என்ற பெயரில் தயாரித்து அதே ஆண்டே திரையிட்டனர். இப்படத்திற்கான தெலுங்கு வசனங்களை டொலேட்டி என்பவர் எழுதினார். படத்திற்கு இசை அமைப்பு சுசுர்லா தக்ஷிணாமூர்த்தி மற்றும் ஜி.ராமநாதன். படத்தில் சி.எச். நாராயணராவ், ராமசர்மா, லிங்கமூர்த்தி, பி.எஸ்.சரோஜா, கிரிஜா, லக்ஷ்மி பிரபா ஆகியோர் நடித்திருந்தனர். படத்தை ஜி.ஆர்.ராவ். இயக்கினார்.



2. மனோகர் (இந்தி - 22.05.1954)

'மனோகரா' என்ற பெயரில் வெளிவந்த தமிழ் படத்தை அதன் தயாரிப்பாளர்கள் இந்தியில் 'மனோகர்' என்ற பெயரில் மொழி மாற்றம் செய்து 1954ஆம் ஆண்டில் வெளியிட்டனர் மனோகர் பிக்சர்ஸ். படத்திற்கு எஸ்.வி.வெங்கட்ராமன் மற்றும் டி.ஆர்.ராம்நாத் இசையமைத்திருந்தார். படத்திற்கான பாடல்களை விஸ்வமித்ர ஆதில் மற்றும் ஜே.எஸ்.கஷ்யப் எழுதியிருந்தார்கள்.



3. மனோகரா (தெலுங்கு - 03.06.1954)

1954ஆம் ஆண்டில் மனோகர் பிக்சர்ஸ் தயாரிப்பில் 'மனோகரா' திரைப்படம் வெளிவந்து வெற்றி வாகை சூடியது. பிரசித்த பெற்ற இப்படத்தின் திரைக்கதை, வசனத்தை கலைஞர் அவர்கள் தீட்டியிருந்தார்கள்.

முக்கியப் பாத்திரத்தில் சிவாஜி கணேசன், கண்ணாம்பா, டி.ஆர்.ராஜகுமாரி, கிரிஜா, எஸ்.எஸ்.ராஜேந்திரன், எஸ்.ஏ.நடராஜன் மற்றும் சதாசிவராவ் நடித்திருந்தனர். எஸ்.வி.வெங்கட்ராமன் இசை அமைத்திருந்தார். கலைஞரின் வசன வீச்சுக்கள் மக்களைக் கவர்ந்திழுத்து படத்தை வெற்றிப்படமாக்கியது.

இதே ஆண்டிலேயே இப்படத்தை 'மனோகரா' என்ற பெயரிலேயே தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெற்றி கண்டார் தயாரிப்பாளர் எம்.சோமசுந்தரம். மொழி மாற்றுப் படமானதால் (டப்பிங்) பொதுவாக மூலத்தினின்றும் மாற்றமில்லை. தெலுங்கில் எஸ்.வி.வெங்கட்ராமனும் டி.ஆர்.ராம்நாத்தும் இசை அமைத்திருந்தனர்.

கலைஞரின் வசனத்தை அப்படியே தெலுங்கில் மொழி மாற்றம் செய்து கதாபாத்திரங்கள் பேசினார்கள். கலைஞரின் வசனத்தை தெலுங்கில் மொழிபெயர்த்தவர்கள் பலிஜேபல்லி லக்ஷ்மிகாந்தகவி மற்றும் ஆச்சாரியா ஆத்ரே ஆவார். தெலுங்கிலும் இப்படம் வெற்றி பெற்றது.



4. பராசக்தி (தெலுங்கு - 11.01.1957)

1952 கலைஞரின் திரைக்கதை, வசனம், பாடலில் கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில் வெளிவந்து தமிழ் சினிமாவின் வரலாற்றிலே திருப்பு முனையாக அமைந்த தமிழ்ப் படம்தான் 'பராசக்தி'.

சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம், எஸ்.எஸ்.ராஜேந்திரன், ஸ்ரீரஞ்சனி மற்றும் பண்டரிபாய் நடித்திருந்தனர். இசை ஆர்.சுதர்ஸனம். இதன் தயாரிப்பு நிறுவனமான நேஷனல் பிக்சர்ஸ் 1957ஆம் ஆண்டு இப்படத்தை தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டனர். படத்திற்கான பாடல்களை சமுத்ரலா (சீனியர்) எழுதியிருந்தார்.

தெலுங்கு மக்களை ஈர்க்கும் வகையில் இம்மொழி மாற்றுப் படத்தில் சில தெலுங்கு நடிகர்களை நடிக்க வைத்து ஆந்திரர்களை வசப்படுத்தும் வகையில் படத்தை எடுத்திருந்தனர். அந்த வகையில் திரைப்படத்தில் சிவாஜி கணேசன், பண்டரிபாய், ஸ்ரீரஞ்சனி ஆகியோருடன் நாகபூஷணம், லங்காசத்தியம், அல்லூரி ராமலிங்கய்யா இணைந்து நடித்தார்கள்.



5. வீரகங்கணம் (தெலுங்கு - 16.05.1957)


1950ம் ஆண்டு கலைஞரின் கதை, திரைக்கதை, வசனத்தில் வந்த 'மந்திரிகுமாரி' திரைப்படமே தெலுங்கில் 'வீரகங்கணம்' என்ற பெயரில் மறுபிறவி எடுத்து 1957இல் வெளிவந்தது. இதனை முற்றிலும் தெலுங்கு மொழிப் படமாகவே மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம் தயாரித்தார்.

தமிழ் படத்தில் எம்.ஜி.ஆர். ஏற்ற பாத்திரத்தை தெலுங்கில் என்.டி.ராமாராவும், எஸ்.ஏ.நடராஜன் ஏற்ற பாத்திரத்தை ஜக்கையாவும், எம்.என்.நம்பியார் ஏற்ற பாத்திரத்தை கும்மிடி வெங்கடேஸ்வரராவும், ஜி.சகுந்தலா ஏற்ற பாத்திரத்தை கிருஷ்ணகுமாரியும், மாதுரிதேவி ஏற்ற மையப் பாத்திரமான மந்திரிகுமாரியை ஜமுனாவும் ஏற்று நடித்தனர். தமிழில் ஜி.ராமநாதன் இசை அமைப்பு, தெலுங்கில் சுசர்லா தக்ஷிணாமூர்த்தி. பாட்டுகள், காட்சிகள் அனைத்தும் தமிழ் படத்தை ஒத்திருந்தது. இந்த தெலுங்குப் படத்தை டி.ஆர்.சுந்தரம், எல்லீஸ் ஆர்.டங்கனுக்குப் பதிலாக ஜி.ஆர்.ராவ் இயக்கியிருந்தார்.



6. கொப்ப இன்டி அம்மாயி (தெலுங்கு - 1960)

1956 ஆம் ஆண்டில் கலைஞர் எழுதிய கதைவசனத்தில் ராஜாராணி படம் வெளிவந்தது. அதனைத் தயாரித்த நேஷனல் புரொடக்ஷன்ஸ் 1960 இல் அப்படத்தை மொழிமாற்றம் செய்து தெலுங்கில் வெளியிட்டது. தெலுங்கு வசனத்தையும் பாடலையும் பைராஜி என்பவர் எழுதினார். இசை டி.வி.ராஜு.



7. ஆயே பிர்ஸே பஹார் (இந்தி - 1960)

கலைஞரின் கதை வசனம் பாடலோடு 1956 இல் வெளிவந்த ராஜாராணி திரைப்படத்தின் இந்தி மொழிமாற்றத்தை நேஷனல் புரொடக்ஷன்ஸ் வெளியிட்டது. பாடல்களை இந்திவார், வேதபால் வர்மா மற்றும் ஹாஜன் பிகாரே எழுத வேதபால்வர்மா இசையமைத்தார்.



8. ஸ்த்ரி ஜென்மா (தெலுங்கு - 31.08.1967)

1965 இல் கலைஞரின் கதையோடு வெளிவந்த பூமாலை படத்தின் தெலுங்கு பதிப்பு இது. படத்தில் என்.டி.ராமாராவ், கிருஷ்ணா, பத்மனாபம், வி.நாகய்யா, பிரபாகர ரெட்டி, அஞ்சலிதேவி, கிருஷ்ணகுமாரி, விஜயலட்சுமி, கீதாஞ்சலி, ரமாப்ரபா முதலியோர் நடித்திருந்தனர். படத்தின் வசனத்தை சமுத்ரலா (ஜூனியர்) எழுதினார். இசை கண்டசாலா. இயக்கம் கே.எஸ். பிரகாஷ்ராவ். படத்தை டி.ராமாநாயுடுவின் சுரேஷ் கம்பைன்ஸ் தயாரித்தது.



9. அம்மாயிக்கு மொகுடு மாமகு யமுடு
(தெலுங்கு - 20.11.1980)

1978ஆம் ஆண்டில் கலைஞரின் வசனத்தில் பூம்புகார் புரடெக்ஷன்ஸ் 'வண்டிக்காரன் மகன்' என்ற திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டது. இப்படத்தின் கதை பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியதாகும். இப்படத்தில் ஜெய்சங்கர், ஜெயசித்ரா முக்கிய பாத்திரத்தில் நடிக்க எம்.எஸ். விஸ்வநாதன் இசை அமைத்திருந்தார். பட இயக்கம் அமிர்தம்.

படத்தின் வெற்றியைத் தொடர்ந்து பூம்புகார் புரடெக்ஷன்ஸ் இதை தெலுங்கில் முழு நீளப் படமாக எடுத்தார்கள். இப்படத்தில் கிருஷ்ணா, ராஜானி சர்மா, கும்மிடி, சத்தியநாராயணா, புஷ்பலதா முதலியோர் நடித்தனர். திரைக்கதையை கலைஞர் எழுத, படத்தின் தெலுங்கு வசனத்தை திரிபுரனேனி மகாராதி எழுதினார். இத்தெலுங்கு படத்திற்கும் எம்.எஸ். விஸ்வநாதனே இசை அமைத்தார்; அமிர்தம் இயக்கினார்.

கலைஞரின் பட உலகப் பயணம்

1. ராஜகுமாரி

பெரியார், அண்ணா, அழகிரிசாமி காஞ்சி கலியாணசுந்தரம் முதலியோர் 22.7.1945இல் கலந்துகொண்ட திராவிடக் கழகத் துவக்க விழா மாநாடு பாண்டிச்சேரியில் நடைபெற்றபோது காங்கிரஸ் கட்சியினர் புகுந்து கலாட்டா செய்து கலைத்தனர்.



தந்தை பெரியார்

நாடகத்தின் மூலம் பிரபலமாயிருந்த கருணாநிதியைக் கூட்டத்தினர் அடித்து உதைத்து அவர் மயங்கியதும் இறந்து விட்டதாகக் கருதி சாக்கடை ஓரத்தில் தூக்கி எறிந்துவிட்டுப் போயினர். இரண்டு மணி நேரம் கழித்து கண் விழித்த கருணாநிதி எங்கேயோ ஒரு வீட்டுத் தாழ்வாரத்தில் படுக்க வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். ஒரு குடும்பம் அவரைக் காப்பாற்றியிருந்தது. பிறகு கருணாநிதியை முஸ்லீம் போல் மாறு வேடத்தில் ரிக்ஸாவில் ஏற்றி அனுப்பி வைத்தனர். கருணாநிதியைக் காணாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்த பெரியார் அவரைக் கண்டதும் ஆரத் தழுவி கருணாநிதியின் காயங்களுக்கு மருந்திட்டார்.

திருவாரூர் திரும்பிய கருணாநிதி திருவாரூரில் இருந்தபடியே வேலை தேடினார். ஈரோட்டிலிருந்த கருணானந்தத்துக்கு கருணாநிதியின் நண்பர் தென்னன் கடிதமெழுதி பெரியாரிடம் வேலை வாங்கித் தரக் கேட்டார். அவரும் திருச்சி மாநாட்டிற்கு கருணாநிதியை அழைத்து வரச் சொல்லி பதிலெழுதினார்.

அதன்படி 1945 செப்டம்பர் 29, திருச்சி மாநாட்டிற்குச் சென்று அப்படியே தவமணி இராசன், கருணானந்தம் ஆகியோருடன் ஈரோட்டுக்குச் சென்று குடிஅரசுப் பத்திரிகையில் துணை ஆசிரியராக சேர்ந்தார் கருணாநிதி.


கருணாநிதியின் சம்பளம் 40 ரூபாய். பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக 20 ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டி மாலை சிற்றுண்டிக்கு மாதம் 10 ரூபாய், இதரச் செலவுகள் 5 ரூபாய். மீதம் 5 ரூபாயை மனைவி பத்மாவிற்கு மணி ஆர்டர் செய்வார் கருணாநிதி.

ஓராண்டு காலம் ஈரோட்டில் பணிபுரிந்த கருணாநிதிக்கு ஏ.எஸ்.ஏ.சாமியிடமிருந்து அழைப்பு வந்தது. கருணாநிதியை பரிந்துரைத்தவர் அவர் மனைவியின் சகோதரர் பிரபல பாடகர் சி.எஸ்.செயராமன்.

கட்சி வேலைகளுக்கு இடையூறு இருக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் எம்.ஜி.ஆர். நடித்த இராஜகுமாரிக்கு வசனம் எழுத ஒத்துக்கொண்ட கருணாநிதி, கோவை பயணமானார். அது 1946.

கோவை - சிங்காநல்லூரில் 10 ரூபாய் வாடகைக்கு ஒரு வீடு பிடித்து கலைஞரும் அவர் மனைவி பத்மாவும் தங்கி இருந்தனர்.

அந்தக் குருவிக்கூட்டில் உட்கார்ந்து கொண்டு கலைஞர் எழுதிக் குவித்தவை ஏராளம்.



ஏ.எஸ்.ஏ. சாமி

கலைஞரின் கோவை வாழ்க்கையைப் பற்றி முக்தா சீனிவாசன் தனது 'தமிழ்த் திரைப்பட வரலாறு' நூலில் பின்வருமாறு எழுதுகிறார்:

"1945-ஆம் ஆண்டு வாக்கில், கோயம்புத்தூர் நகரிலிருந்த சென்ட்ரல் ஸ்டூடியோவை ஜுபிடர் பிக்சர்ஸ் என்கிற நிறுவனம் குத்தகைக்கு எடுத்துப் படம் தயாரித்து வந்தது. அந்த நிறுவனத்தின் தலைமை எழுத்தாளர் திரு. ஏ.எஸ்.ஏ. சாமி என்பவர். அவருடைய உதவி எழுத்தாளராக, கலைஞர் தன் திரைப்பட வாழ்க்கையைத் தொடங்கினார். ராஜகுமாரி, அபிமன்யு போன்ற படங்களில் கலைஞரின் பெயர் வசனம் உதவியாளர் என்று திரையில் காட்டப்பட்டது. 'உண்மையாக எழுதுவது அந்த இளைஞர்தான். ஆனால் உதவி என்று பெயரைப் போடுகிறார்கள்' என்று அந்தக்காலத்தில், அந்த நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் பேசிக் கொள்வார்கள். கலைஞர் அப்போது ஸ்டூடியோவுக்குக் கூட வரமாட்டார். சாமியை வீட்டில் பார்த்து வசனத்தைக் கொடுத்து விட்டுப் போய் விடுவார். செட்டுக்குள் நுழைவதே இல்லை. அப்போது அவர் சிங்காநல்லூர் பகுதியில் தங்கியிருந்தார். சென்ட்ரல் ஸ்டூடியோ, பிரிவ்யூ தியேட்டர் ஆபரேட்டர் சிவதாஸ்தான் இவரைச் சில சமயம் தன் சைக்கிளில் பின்புறத்தில் ஏற்றிக்கொண்டு போவார். கார் கிடையாது. எந்தவிதமான முக்கியத்துவமும் இல்லாத நிலையில், தன் காலத்திற்காகக் காத்திருந்தார் அவர்."

2. அபிமன்யு

அபிமன்யு என்கிற புராணப் படத்திற்கு புதுமையான வசனங்களை எழுதுகின்ற வாய்ப்பு கலைஞருக்கு கிட்டியது. 6.5.1948இல் ரிலிசானது அபிமன்யு

அந்தப் படம் வந்தபோது மனைவியையும் நண்பர்களையும் அழைத்துக் கொண்டு திரையரங்கம் போனார். ஆனால் திரையில் கலைஞர் பெயரே இல்லை. (முக்தா சீனிவாசன் குறிப்பிட்டதைப் போல் 'வசன உதவியாளர்' என்று கலைஞர் பெயர் அபிமன்யு படத்தில் காட்டப்படவில்லை)

மறுநாள் பட அதிபரிடம் சென்று "திரையில் என் பெயர் ஏன் போடப்படவில்லை" என்று கேட்ட கலைஞரிடம், "கொஞ்சம் பொறு உனக்கு விளம்பரம் கிடைத்தபிறகு போடுகிறேன்" என்று பதில் சொன்னார் அவர்.

பிறகு என்ன நடந்தது...? கலைஞரே சொல்கிறார்.

"அந்த பதில் எனக்கு வேடிக்கையாக இருந்தது. என் விழிகளைக் குளமாக்கிற்று. உடனே, வீட்டைக் காலி செய்துவிட்டு துணைவியுடன் திருவாரூர் திரும்ப முடிவுகட்டினேன்.

'அபிமன்யூ' படத்திற்கு நான் தான் வசனம் எழுதினேன் என்பது இந்த நாட்டிற்கு நன்றாகத் தெரியும். பல நண்பர்கள் 'அபிமன்யூ' படத்திற்கு நான் தான் வசனம் எழுதினேன் என்ற உண்மையைப் பத்திரிகைகளில் எழுதினார்கள். அவர்களில் ஒருவர் கவி.கா.மு.ஷெரீப் அவர்கள் ஆவார்கள்.


ஒரு பெரிய திரைப்பட நிறுவனத்தாரிடம் கோபித்துக்கொண்டு திரும்புகிறோமே என்ற கவலையோ, அவர்களுடைய வெறுப்பிற்கு ஆளாகிறோமே என்கின்ற சஞ்சலமோ இல்லாமல், இனி என்ன செய்வது என்பதைப் பற்றி கவலைப்படாமல் திருவாரூர் சென்றேன். படத்துக்கு எழுதுவது நின்று, பத்திரிகைகளுக்கு எழுதுவது, நாடகங்கள் எழுதுவது என்ற அளவில் என் பணி நடைபெற்றது.

திருவாரூரில் தேவி நாடக சபையார் முகாமிட்டிருந்தனர். அவர்கள் புகழ்பெற்ற நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியிலிருந்து பிரிந்து வந்த சக்தி நாடக சபையிலிருந்து பிரிந்து வந்தவர்கள். அவர்கள் என்னிடம் ஒரு நாடகம் கேட்டனர். குண்டலகேசியை அடிப்படையாக வைத்து, இலக்கியச் செறிவு சிறிதும் குறையாமல் 'மந்திரி குமாரி' என்ற நாடகத்தை எழுதினேன். அது திருவாரூரில் அரங்கேற்றப்பட்டது. அடுத்து அந்த நாடகம் குடந்தையில் நடைபெற்றது. மிக வெற்றிகரமாகக் குடந்தை மாநகரில் நடந்த அந்த நாடகம் மக்களால் விரும்பப்பட்டது.

திருவாரூரில் குடும்பம் நடத்திக்கொண்டிருந்த எனக்கு ஒருநாள் பொழுதுபோக்குவதே கஷ்டமாக இருந்தது. 'முரசொலி' வாரப் பத்திரிகையையும் வாரந்தோறும் தொடர்ந்து நடத்த முடியவில்லை. எழுதுவதும் கூட்டங்களுக்குப் போவதும் எனக்கு ஆறுதல் தரும் வழிகளாக இருந்தன.

3. மருத நாட்டு இளவரசி

திருவாரூரில் இருந்த கருணாநிதிக்கு சென்னைக்கு வரச்சொல்லி எம்.ஜி.ஆரிடமிருந்து தந்தி ஒன்று வந்தது கருணாநிதிக்கு.



எம்.ஜி.ஆர்

இதுபற்றி தனது "நினைவுகள்" நூலில் இப்படி எழுதுகிறார் திரைப்படத் தயாரிப்பாளரும் தி.மு.க. பிரமுகருமான இராம.அரங்கண்ணல்:

"டைரக்டர் காசிலிங்கம் முயற்சியில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கதா நாயகனாகப் போட்டுத் திருவில்லிபுத்தூர் கோவிந்தன் என்பவர் திரைப்படம் எடுக்க விரும்பினார். அதற்கு கதையும் வசனமும் எழுதக் கருணாநிதி அவர்களுக்குத் தந்தி கொடுத்து எம்.ஜி.ஆர். வரச் சொல்லியிருந்தார். 'வேலைக்காரி' படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்ததால் அதில் நடித்த திருமதி வி.என்.ஜானகி அவர்களைக் கதாநாயகியாக முடிவு செய்தார் காசிலிங்கம். இது 'மு.க.' அவர்களின் இரண்டாவது சென்னை விஜயம். கதாசிரியர் மு.க.வை எவரெஸ்டு ஓட்டலுக்கு எதிரிலிருந்த "நாடார் மேன்ஷன்" என்கிற விடுதியில் தங்க வைத்திருந்தார்கள்.

விடுதலை அலுவலகத்துக்கு அருகிலே என்பதால், என் வேலை முடிந்ததும், அங்குதான் கிடப்பேன். மாலை வேளைகளில் மு.க.வும் நானும் 'டிராம்' வண்டியேறி யானைகவுணி மூலையில் சுபாஷ் சந்திரபோஸ் ரோடிலிருந்து எம்.ஜி.ஆர். அவர்கள் வீட்டுக்குப் போவோம். சாதாரணமான சிறு வீடு. மறைந்த நண்பர் எம்.ஜி.சக்ரபாணி இருப்பார். அவருக்கே உரித்தான சிரிப்பை உதிர்ப்பார்.



வி.என். ஜானகி

எங்களைக் கண்டதும் அவர்களது அன்னையார் அருகிலிருந்த ஓட்டலுக்குப் போய் குலாப்ஜாமூனும் போண்டாவும் வாங்கி வந்து வழங்குவார்கள். எப்பொழுது போனாலும் இது கிடைக்கும். வெளுத்த கதராடை, கழுத்தில் துளசிமணிமாலை, பின் கழுத்தில் ஒரு கர்சீப் இவை சகிதம் எம்ஜி.ஆர். எங்களோடு கிளம்பி விடுவார்.

அப்போது கலைஞர் பட்டம் பெறாத கருணாநிதி அவர்களுக்கும் 'புரட்சி நடிகர்' பட்டம் பெறாத எம்.ஜி.ஆருக்கும் வீதிகளில் சூழ்வாரின்றி வரக்கூடிய



ராம அரங்கண்ணல்

வாய்ப்பிருந்த காலம்.

அடிக்கடி திருவாரூருக்குப் போய்விட்டுச் சென்னை வரவேண்டிய சூழ்நிலை 'மருதநாட்டு இளவரசி'யின் காரணமாகக் கலைஞருக்கு ஏற்பட்டது."

மருதநாட்டு இளவரசி பட வசனம் பற்றி தனது நினைவுகள் நூலில் இப்படிச் சொல்கிறார் இராம. அரங்கண்ணல்:-

"எம்.ஜி.ஆர். முதன்முதலாக கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமான படம் மருதநாட்டு இளவரசி. 1946 கடைசியிலேயே ஒப்பந்தம் செய்தார்கள்.

ஆனால் இப்படத் தயாரிப்பு தாமதமாக ராஜகுமாரி வெளிவந்து எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த முதற்படமானது.

மருதநாட்டு இளவரசி படத்திற்கு டி.வி.சாரிதான் வசனம் எழுதுவதாக இருந்தது. அவர் வசனம் எழுதுவதில் தாமதம் செய்ததால் புதிய வசனகர்த்தாவாக யாரைப் போடலாமென்று தயாரிப்பாளர்கள் யோசித்தனர்.



எம்.ஜி. சக்கரபாணி

பட அதிபர்களிடம் எம்.ஜி.ஆர். சென்று "எனக்கு தெரிந்த திறமையான கதை – வசனகர்த்தா மு.கருணாநிதி என்பவர் இருக்கிறார். சிறப்பாக இந்தப் படத்திற்கு வசனம் எழுதுவார். அவரை வசனம் எழுதச் செய்யலாம் என்று சிபாரிசு செய்தார்.

கலைஞரை அழைத்தனர். அப்போது கலைஞரின் வயது 22. 'சிறு பையனாக இருக்கிறாரே என்று பட அதிபர்கள் தயங்கினார்கள். ஆனால் கலைஞர் எழுதிய வசனத்தைப் பார்த்து வியந்து போனார்கள்".

மருத நாட்டு இளவரசி படத்திற்கு வசனம் எழுதியது பற்றி கலைஞர் ஒரு கட்டுரையில் இப்படி எழுதுகிறார்.

ராஜகுமாரி, மந்திரி குமாரி' இரண்டு படங்களுக்கும் இடையில் 'மருதநாட்டு இளவரசி' என்ற படத்தை ராஜபாளையத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் எடுத்துக்கொண்டிருந்தார். (மானிய மன்னர் மன்னன் என்ற பட்டப் பெயர் தாங்கிய கோ.கோவிந்தன் என்பவர் G,கோவிந்தன் & கம்பெனி என்றி நிறுவனத்தின் பெயரில் படமெடுத்தார்)

அந்தப் படம் ஒரு கால் பகுதிகூட எடுக்கப்படாமல் இருந்தது. அந்தப் படத்தை தொடர்ந்து எடுப்பது என்றும் அதில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்துக்கொண்டிருந்த காரணத்தினால், நான் வசனம் எழுதவேண்டும் என்றும் என்னிடத்தில் சொன்னார்கள். கதையைப் படித்துவிட்டு


முழுவதுமாக மாற்ற வேண்டும் என்று சொன்னதற்குச் சம்மதித்தார்கள்.

சென்னையில் எவரெஸ்ட் ஹோட்டலுக்கு எதிராக உள்ள நாடார் மேன்சனில் பதினைந்து நாட்கள் தங்கி திரைக் கதையையும், வசனத்தையும் எழுதிக் கொடுத்தேன்.

அந்தப் படத்தை ஏ.காசிலிங்கம் இயக்கினார். 'மருதநாட்டு இளவரசி' படத்தில் நடித்தபோதுதான் எம்.ஜி.ஆர்.-வி.என்.ஜானகி நட்பு நெருக்கமாயிற்று.

'மருதநாட்டு இளவரசி' வசனத்திற்காகவே ஓடுகின்ற படம் என்று பேசும் படம், குண்டூசி போன்ற பத்திரிகைகளில் விமர்சனம் எழுதியிருந்தது இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

4. மந்திரிகுமாரி



கவி கா.மு.ஷெரீப்

கலைஞர் மருதநாட்டு இளவரசி பட வசன வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போதே கலைஞரின் மந்திரி குமாரி நாடகத்தை திரு. ரத்தினம் என்பவரின் தேவி நாடக சபை தஞ்சை பகுதியில் ஆங்காங்கே நடத்திக்கொண்டிருந்தது. கா.மு.ஷெரீப் மூலம் மந்திரி குமாரி நாடகம் பற்றி கேள்விப்பட்ட மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரம் எல்லீஸ் ஆர்.டங்கன் கா.மு.ஷெரீப் மற்றும் அவரது உதவியாளர் சுந்தரேசன் என்பவருடன் மாயவரம் சென்று நாடகத்தைப் பார்த்து திருப்தி அடைந்தார்.

மருதநாட்டு இளவரசி வசன வேலை முடிந்ததும் என்ன நடந்தது என்று கலைஞரே சொல்கிறார் :

"அப்பொழுது என்னுடைய நண்பர் கவி கா.மு.ஷெரீப் சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் திரைப்பட நிறுவனத்தில் பாட்டு எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு நாள் என்னைப் பார்க்க திருவாரூர் வந்திருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி.ஆர்.சுந்தரம் அவர்கள் என்னுடைய எழுத்துக்களை விரும்புவதாகவும் என்னைக் கொண்டு படங்களுக்கு வசனம் எழுதவேண்டும் என்று கூறியதாகவும் குறிப்பிட்டு என்னுடைய சம்மதத்தைக் கேட்டார். நான் அது பற்றி யோசிப்பதற்கு முன்பே நண்பர் ஷெரீப் அவர்களே அதை நான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று உரிமையோடு வற்புறுத்தினார்.

டி.ஆர்.சுந்தரம்

சேலத்திற்குப் புறப்பட்டேன். மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் 1949-ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸில் எழுத்தாளனாக அமர்ந்தேன். கட்சிப் பணிகளில் தடையில்லாமல் ஈடுபடவும், கூட்டங்களுக்குச் செல்ல எந்தவிதமான இடையூறும் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையுடனும் அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டேன்

என்னுடைய 'மந்திரிகுமாரி' நாடகத்தைப் படமாக எடுக்கவேண்டுமென்ற விருப்பத்தை மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி.ஆர்.சுந்தரம் வெளியிட்டார்.

பிறகு நடந்ததை ரா.வேங்கடசாமி எழுதிய 'முதலாளி' புத்தகம் விவரிக்கிறது.

"கவி. கா.மு. ஷெரிப் அவர்களின் சிபாரிசின் படி தமது கதையை மாடர்ன் தியேட்டர்ஸுக்கு 1-12-1949 அன்று படமாக எடுக்க அனுமதி கொடுத்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வசனகர்த்தாவாக இங்கே அடி எடுத்து வைத்தார்.

பொன்முடியின் பின் பகுதிக் கதையையும் எழுதும்படி டி.ஆர்.எஸ். அவரிடம் கேட்டுக் கொள்ள அவரும் எழுதிக் கொடுத்தார்.

அதுதான் 'காபாலிகர்கள்' வரும் பகுதி! 'பொன்முடி! வெளியிடப்பட்டு மிகவும் நன்றாக ஓடியது.

கலைஞர் அங்கே மாத சம்பளத்தில் வசனம் எழுத நியமிக்கப்பட்டார். "மந்திரிகுமாரி" நாடகத்தைப் படமாக்க டி.ஆர்.எஸ். முடிவு செய்து விட்டார். டைரக்டர் எல்லிஸ்.ஆர்.டங்கன், வசனகர்த்தா கலைஞர் மு.கருணாநிதி.

சினிமா உலகின் சரித்திரத்திலேயே முதன்முதலாக போஸ்டரில் 'கதை வசனம் மு. கருணாநிதி' என்று விளம்பரப்படுத்தியதே மந்திரி குமாரி படத்தில் தான்!

கலைஞர் மாடர்ன் தியேட்டர்ஸுக்குள் வசனகர்த்தாவாக நுழைந்தவுடன் அங்கே எழுத்துப் புரட்சி நடைபெற்றது என்று தான் சொல்ல வேண்டும்.

மந்திரிகுமாரிக்கு யாரைக் கதாநாயகனாகப் போடுவது என்னும் சர்ச்சை திடீரெனத் தலையைத் தூக்கியது. அந்த சமயத்தில் எம்.ஜி.ஆர். ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த படங்களில் நடித்து வந்தார். அதே சமயத்தில் கலைஞரின் கைவண்ணத்தில் உருவான 'மருதநாட்டு இளவரசி' என்னும் படத்திலும் அவர் நடித்து இருந்தார். அந்தப் படத்தை எழுதி முடித்த பிறகு தான் கலைஞர் சேலம் வந்தார்.

டைரக்டர் எல்லிஸ்.ஆர்.டங்கனுக்கு எம்.ஜி.ஆரின் தாடையிலிருந்த சிறுகுழி கண்ணை உறுத்தியது. அதனால் அவர் கதாநாயகனாக நடிக்க வேண்டாம் என்றார். கலைஞரோ எம்.ஜி.ஆர். நடித்தால் தான் நன்றாக இருக்கும் என்று சொல்லிவிட்டார். இரண்டு பேரையும் சமாதானப்படுத்த தாடையில் சிறிய தாடி ஒட்டப்பட்டது. டங்கன் சமாதான மடைந்தார். எம்.ஜி.ஆர் கலைஞரின் விருப்பப்படி கதாநாயகன் ஆனார்! கலைஞர்

மாடர்ன் தியேட்டர்ஸில் பெற்ற முதல் வெற்றி அது!

கலைஞர் வீட்டில் அமர்ந்தும், ரிகர்சலில் அமர்ந்தும் தொடர்ந்து வசனங்கள் எழுதத் தொடங்கினார். அவரது வசனங்களை இடையில் ஒரு நபர் வாங்கி, அதில் சில திருத்தங்கள் செய்து பின்னால் டி.ஆர்.எஸ்ஸுக்கு அனுப்பும் வழக்கத்தை மேற்கொண்டு இருந்தார்.

தன் வசனத்தில் இன்னொருவர் கை வைப்பதா? மாறுதல் வேண்டின் டைரக்டர்தானே சொல்ல வேண்டும். அதனால் டி.ஆர்.எஸ்.ஸிடம் இதைப்பற்றிச் சொல்லி குறைப்பட்டுக் கொண்டார் கலைஞர். அப்போதே டைரக்டர் உத்தரவு போட்டு விட்டார், "கலைஞர் எழுதும் வசனம் நேராகத் தன் மேஜைக்கு வர வேண்டும்" என்று. இது எழுத்தாளராக அவருக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி!

கலைஞர் வசனங்களை எழுதுவதோடு நிற்காமல் நடிப்பைப் பற்றியும், கேமிராக் கோணங்களைப் பற்றியும் மார்ஜின் பகுதியில் குறித்து வைப்பார். இதை டி.ஆர்.எஸ். மிகவும் பாராட்டினார்.

'மந்திரிகுமாரி' படபிடிப்பு மிக வேகமாக நடந்தது. அப்போதெல்லாம் கலைஞரும் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கும் சென்றார்; டைரக்டரின் அனுமதியுடன்! சில நேரத்தில் வசனங்களைப் புதிதாகச் சேர்க்க வேண்டியோ – குறைக்க வேண்டியோ இருக்கும். அதைக் கதாசிரியரே செய்யட்டும் என்று டைரக்டர் அபிப்பிராயப்பட்டார். மாடர்ன் தியேட்டர்ஸுக்கு இதெல்லாம் புதிய பழக்கம். இதை ஏற்படுத்தியவர் கலைஞர், வசனகர்த்தாதான் ஒரு படத்தின் ஜீவநாடி என்பதைப் புரிய வைத்தவர். வசனத்தை ஏற்ற இறக்கத்தோடு பேசும்போது நடிப்பு தானாக வந்துவிடும் என்கிற எண்ணத்தை டி.ஆர்.எஸ். மனதில் கலைஞர் பதிய வைத்தார் என்றால் அது உண்மை.

மந்திரிகுமாரியின் மூலம் பிரபலமாக கதாநாயக அஸ்தஸ்துக்கு உயர்ந்தது எம்.ஜி.ஆர். மட்டுமல்ல! வில்லனாக நடித்த எம்.என். நம்பியாரும்தான்! ஏற்கெனவே கதாநாயக அந்தஸ்தைப் பெற்று இருந்த எம்.ஜி.ஆர். மிகவும் பிரபலமாகப் பேசப்பட்டது மந்திரிகுமாரியின் மூலம்தான். நம்பியாரும் அவ்வாறே... தலையை மொட்டை அடித்துக் கொண்டு அவர் இராஜகுருவாக நடித்ததை எப்படி மறக்க முடியும்?

ஆக மந்திரிகுமாரி மூலம் பலர் பிரமலமடைந்தார்கள் என்றால் அதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ரிலீஸ் செய்யப்பட்ட தேதியிலிருந்தே அந்தப்படம் வசூலில் சாதனை படைத்தது எனலாம்!

இப்படிச் சொல்கிறது முதலாளி புத்தகம்.

இந்தப் படத்தின் பல பகுதிகள் எடுக்கப்படாமல் இருக்கும் போதே, எல்லீஸ்.ஆர்.டங்கன் ஏதோ அவசர வேலையின் காரணமாக அயல்நாடு சென்றுவிட, பாக்கி எல்லா வேலைகளையும் டி.ஆர்.எஸ். தான் செய்தார்.

படம் சென்சாருக்குப் போன போது சிறு பிரச்சனைகள் தலைதூக்கின. அதையும் மிகவும் நன்றாக ஒழுங்குபடுத்திப் படத்தை ரிலீஸ் செய்தார் டி.ஆர்.எஸ்.



ஜுபிடர் சோமு

'அபூர்வ சிந்தாமணிக்கு'ப் பிறகு வசூலில் சாதனை ஏற்படுத்தியது இந்தப் படம்தான் - அதாவது மாடர்ன் தியேட்டர்ஸைப் பொறுத்தவரையில்!

இதுபற்றி கட்டுரை ஒன்றில் கலைஞர் இப்படி சொல்கிறார்.

"மந்திரிகுமாரிக்கு நான் உரையாடல் எழுதவேண்டுமென்றால் எம்.ஜி.ஆர். அவர்கள் முக்கியமானதொரு பாத்திரத்தை ஏற்கவேண்டும் என்று சொன்னேன். வீரமோகன் என்ற பாத்திரத்தில் எம்.ஜி.ஆர். அவர்களை நடிக்கவைக்கவேண்டும் என்று சொன்னதும், டி.ஆர்.சுந்தரம் அவர்கள் எம்.ஜி.ஆரை அழைத்து மேக்கப் டெஸ்ட் எடுத்துப் பார்த்தார்.




எல்லீஸ் ஆர்.டங்கன்

அவர் முகத்தில் இன்னும் ஆண்மை தேவை என்பதற்காக சிறிய தாடி வைத்துக்கொள்வாரா என்று கேட்டார். நானே எம்.ஜி.ஆரிடம் சொல்லி மறுத்ததற்குப் பிறகு வீரமோகன் என்ற பாத்திரத்தில் நடித்தார்.

நானும் ஒப்புதல் அளித்து அதற்கான திரைக்கதையையும், உரையாடல்கள் அனைத்தையும் படத்திற்கேற்றவாறு எழுதி முடித்தேன். அப்பொழுதுதான் அவர்கள் வெளியிட்ட 'மாயாவதி' என்ற ஒரு படம் பெரும் தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்தது. மிகுந்த செலவில் எடுக்கப்பட்ட அந்தப் படத்தின் நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக 'மந்திரி குமாரி' படத்தை சிறந்த முறையில் எடுக்க திரு. டி.ஆர்.சுந்தரம் முடிவு செய்தார்.

திறமை வாய்ந்த இயக்குநர் எல்லிஸ் ஆர்.டங்கன் அவர்களின் முழுப்பொறுப்பிலும் திரு.டி.ஆர்.சுந்தரம் அவர்களின் மேற்பார்வையிலும் வெளியான 'மந்திரிகுமாரி' படம் தமிழ்நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. சனாதனிகளின் எதிர்ப்பும் எதிர்க்கட்சிக்காரர்களின் மேடைத் தாக்குதலும் அந்தப் படத்தின் காரணமாக நிரம்ப ஏற்பட்டன.

5. மணமகள்



என்.எஸ். கிருஷ்ணன்

கலைவாணருடன் ஏற்பட்ட சந்திப்பு பற்றி இப்படிக் கூறுகிறார் கலைஞர்.

'மருதநாட்டு இளவரசி', 'மந்திரி குமாரி' ஆகிய இரண்டு படங்களும் வசனத்திற்காக ஓடியது என்ற காரணத்தினால் மாடர்ன் தியேட்டர்ஸில் தங்கி வசனம் எழுதவேண்டும் என்று டி.ஆர்.சுந்தரம் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். கவி.கா.மு. ஷெரீப் அவர்களும், மருதகாசி அவர்களும், முத்துகிருஷ்ணன் போன்றவர்களும் அதையே வலியுறுத்தினார்கள்.

நானும், எனது குடும்பத்தாரை சேலத்திற்கு அழைத்து வந்து தங்கினேன். கட்சிக் கூட்டங்களுக்கு நான் தொடர்ந்து செல்லவேண்டி இருந்ததால், அங்கேயே தங்கி வசனம் எழுத இயலாது என்பதைக் கூறினேன்.

மாதம் ஐயாயிரம் ரூபாய் சம்பளமாய்ப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். கட்சிப் பணிகள் இருப்பதால் மாதச் சம்பளத்திற்கு இருக்க இயலாது என்று கூறிவிட்டேன்.

சேலத்திற்கு வந்திருந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு தியேட்டரில் 'மந்திரிகுமாரி' படத்தைப் பார்த்துவிட்டு, மறுநாள் காலை என்னை வந்து சந்தித்து வாழ்த்தினார். தான் எடுக்கவிருக்கும் 'மணமகள்' படத்திற்கு நான்தான் திரைக்கதை, வசனம் எழுதவேண்டுமென்றும் வலியுறுத்தினார். நான் ஒப்புக்கொண் டேன். எனக்கும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுக்கும் கலையுலகில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த இந்தச் சந்திப்பு காரணமாக இருந்தது". என்று சொல்கிறார்.

மணமகள் படத்தின் மூலக்கதை முன்சி பரமுபிள்ளை எழுதிய சுப்ரபா என்ற மலையாளக் கதையாகும். டி.எஸ்.பாலையா மணமகளில் முக்கிய பாத்திரமொன்றில் நடித்திருந்தார்.

"பல திரைப்படங்களில் பாத்திரங்கள் எடுபடாமல் போனதற்குக் கதாசிரியர்களே காரணம். பாத்திரங்களை முழுமையாக உருவாக்கி வசனங்கள் அமைக்கும் கதாசிரியர்களால் தான் ஒரு நடிகனின் நடிப்புச் சிறப்பாக அமைய முடியும். கலைஞர் கருணாநிதியின் மணமகளில் என் நடிப்பு சிறப்பாக அமைந்ததற்கு நானல்ல காரணம்".

– இது மணமகள் படத்தில் நடித்த டி.எஸ்.பாலையாவின் பேட்டி.

சேலத்தில் இருந்த என்னை சென்னைக்கு குடிவந்துவிட வேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்தியதன் விளைவாக நான் சென்னையில் குடியேறினேன்... என்கிறார் கலைஞர்.

6. பராசக்தி

பராசக்தி பற்றி தனது 'வாழ்க்கை அனுபவங்கள்' நூலில் இப்படிச் சொல்கிறார் திரு.ஏவி.எம்.

கே.என்.ரத்தினம் என்ற ஒரு நடிகர் கடலூரில் ஒரு பாய்ஸ் கம்பெனி வைத்து நாடகம் நடத்திக் கொண்டிருந்தார். பாவலர் பி. பாலசுந்தரம் என்பவரின் கதையை நாடகமாக நடித்துக் கொண்டிருந்தார்கள்.

"அந்த டிராமாவைப் போய் பார்க்கலாம், வாருங்கள்" என்று பெருமாள் என்னைக் கடலூருக்குக் கூட்டிச் சென்றார். டிராமாவைப் பார்த்தோம். மிகவும் நன்றாக இருந்தது. அந்த நாடகம்தான் பராசக்தி. அந்தக் கதையையே வாங்கித் தரும்படி பெருமாள் கூறினார். பாவலர் பாலசுந்தரத்தை வரவழைத்துப் பேசி, பெருமாளுக்காக அந்தக் கதையை நானே வாங்கினேன்.

அந்தப் படத்தைப் பெருமாளுடன் கூட்டாகச் சேர்ந்து நாங்கள் எடுத்தோம். ஏறக்குறைய 'ஓர் இரவு' பாதிக்கு மேல் எடுத்துக் கொண்டிருக்கும்போதே துவங்கி விட்டோம். ஓர் இரவை நீலகண்டன் சொந்த டைரக்ஷனில் செய்து கொண்டிருந்தார். எம்.வி.ராமன் இந்தி பகார் டைரக்ட் செய்து வந்தார். அப்பொழுதெல்லாம் ஒரு டைரக்டர் இரண்டு படங்களை டைரக்ட் செய்வது என்பது பழக்கத்திற்கு வரவில்லை. ஆகவே, எங்களுடைய புதிய படத்திற்கு யாரை டைரக்டராகப் போடலாம் என்று யோசித்து வந்தோம். கிருஷ்ணன்-பஞ்சு என்பவர்கள் நியூட்டோனில் அப்போது படம் எடுத்து வந்தார்கள். திரு. அண்ணாதுரை அவர்களுடைய கதையான நல்லதம்பி என்ற படம் முடிந்த சமயம். அவர்களைக் கூப்பிட்டு எங்களுக்காக இந்தக் கதையை டைரக்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இருவரும் ஒப்புக் கொண்டார்கள். முதன் முதலாகக் கிருஷ்ணன்-பஞ்சு இருவரும் எங்கள் ஸ்டுடியோவிற்குள் நுழைந்தது இந்த சந்தர்ப்பத்தில் தான். அது முதல் ஏறக்குறைய எங்கள் ஸ்தாபனத்துடன் ஒன்றியிருக்கிறார்கள்.



பாவலரிடமிருந்து கதை கிடைத்து விட்டது. அதற்குரிய வசனங்களை நமது மதிப்பிற்குரிய, தற்போது முதல்வராக விளங்கும் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியை விட்டு எழுதச் சொல்லலாம் என்று பெருமாள் விருப்பம் தெரிவித்தார்.

கலைஞரிடம் கேட்டோம். அவரும் ஒப்புக் கொண்டார்.



பாவலர் பாலசுசுந்தரம்

ஏறக்குறைய ஓர் இரவு கதைக்கு அண்ணாதுரை இங்கே வந்து வசனம் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்த சில நாட்களுக்குள்ளேயே கலைஞரும் பராசக்திக்கு வசனம் எழுதித் தர எங்கள் ஸ்டுடியோவுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்.

அதோடு, படம் மிகவும் அருமையாக அமைந்துவிட்டது. டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் புதிய பாணியில் வசனங்களைத் தீட்டியிருந்தார். அவற்றைக் கணேசன் உச்சரித்த முறை நன்றாக இருந்தது. சொல்லப் போனால் முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா ஓர் இரவு படத்திற்கு எழுதியிருந்ததை விடக் கலைஞரின் வசனங்கள் சிறப்பாக இருந்தன என்று நாங்கள் நினைத்தோம். பொது மக்களும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டனர்.

கதையின் போக்கு, கலைஞரின் வசனம், கணேசனின் நடிப்பு மூன்றுமாகச் சேர்ந்து பராசக்தி படம் முன்பு நாங்கள் எடுத்த படங்களைக் கூட மிஞ்சும்படி-எங்களுக்கு மகத்தான வெற்றியை அளித்தது.

'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் இப்படிச் சொல்கிறார்

"நான் எழுதிய 'பராசக்தி' படம் தமிழ்நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி நூறு நாட்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருந்தபோது 'தினமணி கதிர்' இதழில் 'பராசக்தி' படத்தின் கருத்துக்களையும், வசனங்களையும் கடுமையாகத் தாக்கி மிக நீண்டதொரு விமர்சனம் எழுதப்பட்டிருந்தது. பத்துப் பக்கத்திற்குக் குறையாமல் எழுதப்பட்ட அந்த விமர்சனத்தில் வரிக்கு வரி நான் தாக்கப்பட்டிருந்தேன்.

என்னையும் 'பராசக்தி' படத்தையும் கண்டித்து, காங்கிரஸ் கட்சி கண்டனக் கூட்டங்கள் பலவற்றை நடத்தியது. கண்டன விமர்சனம் வந்திருந்த தினமணி கதிரின் அட்டையில் 'பராசக்தி'யைக் கிண்டல் செய்வது போல் ஒரு கேலிச் சித்திரமும் வரையப்பட்டிருந்தது. ஆடை குலைந்த நிலையில் ஒரு பெண்ணின் ஓவியம் வரைந்த விளம்பரம்! அந்த விளம்பரத்தின் தலைப்பு 'பரப்பிரம்மம்' என்பதாகும். அதன் கீழே 'கதை-வசவு தயாநிதி' என்றும் எழுதப்பட்டிருந்தது. இதுதான் அந்தப் பத்திரிகையின் அட்டைப் படக் கேலிச்சித்திரமாகும்.

அதைப் பார்த்து நான் ஆத்திரப்படவில்லை. என்னைக் கிண்டல் செய்து அவர்கள் போட்டிருந்த அதே 'பரப்பிரம்மம்' என்ற தலைப்பை வைத்து ஒரு நாடகம் எழுதினேன். முழுக்க முழுக்க கட்சிப் பிரச்சாரம் நிறைந்த இந்த

நாடகத்தைப் பல ஊர்களில் நடித்துக் காட்டினோம்.



சிவாஜி கணேசனுடன் கலைஞர்

பராசக்தி படம் எடுக்கப் பட்ட நேரத்தில் நடந்த இன்னொரு சம்பவம் பற்றி கலைஞர் இப்படிச் சொல்கிறார்:

"நானும், கருணானந்தமும், சிவாஜிகணேசனும் காஞ் சிபுரம் சென்று அண்ணாவைப் பார்த்துவிட்டுச் சென்னை திரும்பிக் கொண்டிருக்கிறோம். அப்பொழுதுதான் 'பராசக்தி' படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வரும் வழியில் நல்ல மழை பெய்யத் தொடங்கியது. காரின் வெளிச்சம் வேறு மங்கலாகி விட்டது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு அருகே வந்து கொண்டிருக்கும் பொழுது அந்தப் பகுதியில் ஒரு பாலம் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்ததால், மாற்று வழிக்குக் குறிப்புப் பலகை வைத்து சிவப்புத் துணி கட்டியிருந்தார்கள். விளக்கு வெளிச்சம் போதாததால் கார் டிரைவர் அதைக் கவனிக்காமல் மாற்று வழியில் செல்வதற்குப் பதிலாக நேராகச் சென்று விட்டார். உடனே நண்பர் கணேசன் கூச்சல் போடவே கார் டிரைவர் திடீரென்று பிரேக்கை அழுத்திவிட்டார். பிரேக் போடப்பட்ட வேகத்தில் மழைத் தண்ணீர் தேங்கியிருந்த சாலையில் காரின் சக்கரங்கள் வழுக்கி, ஒரு சுற்றுச் சுற்றி நின்றது.

கார் எப்படியிருக்கிறது என்பதைக் காருக்குள்ளிருந்த நாங்கள் கவனித்தோம். கார் சக்கரம் ஓர் அங்குலம் நகர்ந்தால், நாங்கள் ஒரு செங்குத்தான பள்ளத்தாக்கில் காரோடு விழுந்து நொறுங்கிப் போய்விடுவோம். அப்படிப்பட்ட ஆபத்தான விளிம்பில் கார் நின்று கொண்டிருந்தது. காரில் இருந்த மூவரும் மெதுவாகக் காரை விட்டு இறங்கினோம். நாங்கள் இறங்குகிற நேரத்தில் கொஞ்சம் கார் அசைந்திருந்தாலும் படுபாதாளத்தில் நாங்கள் விழுந்திருக்க நேரிடும். மிக மெதுவாகக் காரை முன்னுக்குத் தள்ளி மாற்றுப் பாதை வழியாகச் சென்னை நோக்கிப் புறப்பட்டோம்.

மழை பொழிந்து கொண்டேயிருந்தது. சென்னைக்கு அருகில் 4, 5 மைல் தொலைவில் நாங்கள் வந்ததும் காரும் பழுதாகிவிட்டது. அந்தக் கார் நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர் திரு பி.ஏ. பெருமாளுக்குச் சொந்தமானது. காரைத் தள்ளிக் கொண்டே போய் விடலாம் என்று என்னைக் காரிலேயே உட்கார வைத்துவிட்டு சிவாஜியும், கருணானந்தமும் காரைத் தள்ளத் தொடங்கினார்கள். நான் எவ்வளவோ சொல்லியும் என்னைக் கீழே இறங்க விடாமல் தடுத்து விட்டார்கள். 4, 5 மைல்கள் அந்த மழையில்

அந்தக் காரைத் தள்ளிக்கொண்டே அந்த நிகழ்ச்சியையும், அதுவும் என்னைக் காரில் உட்கார வைத்தே தள்ளிக்கொண்டு வந்த நிகழ்ச்சியையும், இப்போது கூட, நண்பர் கணேசன் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் வேடிக்கையாகச் சொல்லாமல் இருப்பதில்லை".

இயக்குநர் முக்தா சீனிவாசன் சொன்ன செய்தி இது:



முக்தா சீனிவாசன்

ஏவி.எம்.மில் நூல் வெளியீட்டு விழா. மேடையில் நான் வெளியாகவிருக்கும் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அதில் ஆசிரியர், "ஏவி.எம். அவர்கள் "பராசக்தி" படக்கதையை காளி என்.ரத்தினத்திடம் இருந்து வாங்கினார்'' என்று எழுதியிருந்தார்கள். உண்மையில் அந்தக் கதையைத் தேவி நாடக சபா உரிமையாளர் ஏ.எம்.ரத்தினம் அவர்களிடம் இருந்துதான் ஏவி.எம். அவர்கள் வாங்கியிருந்தார். இந்தத் தவறான செய்தியை கண்ட நான் கலைஞரிடம் இதைச் சொல்லி என் உரையில் இதைக் குறிப்பிடுவதாக இருந்தேன்,

அப்போது கலைஞர் என்ன சொன்னார் தெரியுமா?

"அப்படிச் செய்யாதீர்கள். கூட்டம் முடிந்ததும் ஏவி.எம் மகன்களில் ஒருவரிடம் அதைச் சுட்டிக் காட்டி அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளச் சொல்லுங்கள். நமக்கு மரியாதை காட்டி நம்மை அழைத்துப் பேசச் சொல்பவரை அவரது மேடையிலேயே குறை கூறிப் பேசுவது மேடை நாகரிகம் அல்ல" என்றார்.

எனக்கு வியப்பாக இருந்தது. எந்த விஷயத்திலும் நல்ல பண்பாட்டின் எல்லைக் கோட்டைக் கலைஞர் அவர்கள் எவ்வளவு துல்லியமாகத் தெரிந்து வைத்துள்ளார் என்பதையறிந்து மகிழ்ந்து போனேன். அவர் சொல்லியபடியே கூட்டம் முடிந்த பிறகு திரு.ஏவி. எம் முருகனைச் சந்தித்துப் பிழையைச் சுட்டிக் காட்டிக் சொல்லிவிட்டு மேடை நாகரிகத்தின் முதல் அத்தியாயத்தை எனக்கு உணர்த்திய கலைஞருக்கு நன்றி தெரிவித்து விட்டுப் புறப்பட்டேன்."

பராசக்தி இயக்குநர்களில் ஒருவரான கிருஷ்ணன் மறைந்தபோது கலைஞர் எழுதியது இது:

"15-7-1997 அன்று என்னுடைய அன்பிற்குரிய இரட்டையர்களில் ஒருவரான திரைப்பட இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) அவர்கள் இயற்கை எய்தினார். அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சு அவர்கள் மறைந்து விட்டார். நான் எழுதிய "பராசக்தி" படத்தை உயிரோட்டமுள்ள திரைக் காவியமாக இயக்கி, அனைவரின் உள்ளங்களிலும் என்றும் நிலைபெறச்

செய்தவர்கள், இறுதிவரை இணை பிரியாதிருந்த இந்த இரட்டையர்கள் கிருஷ்ணன் - பஞ்சு.

கிருஷ்ணன் மறைந்தபோது அவருடைய வயது 88. தஞ்சையில் 1909ஆம் ஆண்டு பிறந்தவர். 1935இல் இயக்குநர் கே.ராம்நாத் அவர்களிடம் பிலிம் லேபரட்டரியில் சீப் பிரிண்டராக வேலை செய்தார். அதன் பிறகு புகழ் பெற்ற இயக்குநர்கள் ராஜா சாண்டோ, எல்லிஸ் ஆர்.டங்கன் போன்றவர்களிடம் உதவியாளராகப் பணியாற்றியவர். அந்த நேரத்தில் பஞ்சு அவர்கள் எடிட்டிங் துறையில் பணி செய்து கொண்டிருந்தார்.



கிருஷ்ணன் (பஞ்சு)

இருவரும் இணைந்து முதன் முதலில் இயக்கிய படம் "பூம்பாவை".

என்னுடைய வசனத்தில் நடிகர் திலகம் முதன் முதலாக நடித்த "பராசக்தி" படம்தான் இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவை தமிழகத்திற்கு அடையாளம் காட்டியது. நான் எழுதிய நாடகங்களிலும், கதைகளிலும் இருந்த காட்சிகளை பராசக்தியில் இணைத்துக் சில கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறி, சிறப்பாகச் சேர்த்த பெருமை கிருஷ்ணன் அவர்களுக்கு உண்டு.

பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்கள் "பராசக்தி" திரைக் கதை வசனம் எழுதும் பொறுப்பை நான் ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தினார். இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு இருவரும் ஒருவராக இருந்து என்னிடம் அன்பு காட்டுகிறவர்கள். அவர்களும் என்னை வலியுறுத்தினர். முதலில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமிதான் நடிப்பதாக இருந்தது. அவருக்கு வேறு படங்கள் இருந்த காரணத்தால் "பராசக்தி" யில் "குணசேகரன்" வேடத்தில் நடிக்க சிவாஜியை ஒப்பந்தம் செய்தார்கள்.

அந்தப் படம் ஏவி.எம். நேஷனல் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு! சிவாஜி இரண்டொரு காட்சிகளில் நடித்ததைப் போட்டுப் பார்த்து விட்டு, ஏவி. மெய்யப்ப செட்டியார் அதிருப்தி தெரிவித்து, நடிகரை மாற்ற வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நேஷனல் பெருமாள் அவர்களும்,நானும், இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவும் - ஏ.வி.மெய்யப்ப செட்டியார் கருத்தை ஏற்கவில்லை. "ஒரு அற்புதமான நடிகரை அவசரப்பட்டு இழந்துவிடக் கூடாது!" என்று திட்டவட்டமாகக் கூறினோம்!

பராசக்தி' படம் தயாரிக்கப்பட்ட நேரத்தில் புரட்சிக்கவிஞர் எழுதிய "வாழ்க, வாழ்கவே, வளமான எமது திராவிட நாடு" என்ற பாடலை அந்தப் படத்திலே இடம் பெறச் செய்யவேண்டுமென்று விரும்பிய நான்

–படத்தயாரிப்பாளர்களிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து அவர்களும் ஒப்புக் கொண்ட பின்னர், புரட்சிக் கவிஞரை அணுகி அவரது அனுமதியைக் கேட்டேன். உடனடியாக மகிழ்ச்சியுடன் தனது சம்மதத்தைத் தெரிவித்தார். அதற்காக எவ்வளவு தொகை தர வேண்டுமென நான் கேட்டபோது அந்தப் பாடலை படத்திலே வைப்பதே தனக்குத் தருகின்ற பரிசுதான் என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

பராசக்தி படம் பற்றி தனது 'திராவிட இயக்கமும் திரைப்பட உலகமும்' எனும் நூலில் பிரபல திராவிட எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் இப்படி எழுதுகிறார்.

"படத்தில் சிறப்புக்குரிய நடிகர்கள் நடித்தனர். படத்தை தயாரித்த நிறுவனமோ புகழ்பெற்ற நிறுவனம். ஆனால் இவர்களுள் எவரையும் விட இப்படத்தின் திரைக்கதை, உரையாடல் ஆசிரியரே மக்களுக்குத் தெரிந்தார். இன்னும் சொல்வதானால்,

பராசக்தியின் தமிழை 'கடாமுடா தமிழ் என எழுதிய துமிலன் 1965இல் ஒரு பேட்டியில்,

"தி.மு.கழகத்தின் வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்றைப் பற்றி எண்ணி நான் எப்போதும் ஆச்சரியப்படுவதுண்டு. தாய் மொழியில் நன்றாகப் பேசியதாலும், எழுதியதாலும் வளர்ச்சியும், செல்வாக்கும் பெற்ற ஓர் அரசியல் கட்சி உலகத்தில் உண்டென்றால் அது தி.மு.கழகம்தான்!"

என்று கூறினார். காலம் அவருள் ஒரு மாறுதலை ஏற்படுத்தி உண்மையை ஒப்புக்கொள்ளச் செய்தது. பராசக்தி படம் மெதுவாக மக்களின் ஈர்ப்புக்கு ஆளான படமாக விளங்கிற்று. இப்படத்தின் அனைத்துச் சிறப்புகளும் காங்கிரஸ் ஆட்சியாளரை எரிச்சல் கொள்ளச் செய்தது. இதன் காரணமாக இப்படம் வெளிவந்து புகழ் பரப்பிய பின்னர் நீண்ட காலம் மீண்டும் திரையிடப்படாமலேயே முடக்கி வைக்கப்பட்டும் இருந்தது.

பராசக்தி படம் தணிக்கை குழுவின் முன் திரையிடப்பட்டபோது. அவர்களுள் பெரியதொரு விவாதம் நிகழ்ந்தது. பல காட்சிகளைப் படத்திலிருந்து அகற்ற நினைத்தபோது திராவிட இயக்கத் தலைவர்களுள் ஒருவரான 'சண்டே அப்சவர்' பி.பாலசுப்பிரமணியம் கடுமையாக வாதிட்டு சில காட்சிகளை அகற்றாமல் செய்தார்.

தமிழக திரைப்பட வரலாற்றில் கலைஞரின் பராசக்தி மாபெரும் புரட்சியைச் செய்ததோடு திரைப்படத் துறையைப் பராசக்திக்கு முன் பராசக்திக்குப் பின் என்று கூறுமளவுக்கு ஓர் இடத்தைப் பிடித்தது.

7. மனோகரா

மனோகரா பட அனுபவத்தை இப்படிக் கூறுகிறார் கலைஞர்.

ஜுபிடர் பிக்சர்ஸார் 'மனோகரா'விற்கு வசனம் எழுதித் தரச் சொன்னார்கள். அதில் பேய், பிசாசு என்றெல்லாம் வருகிறது. அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்தபோது என் விருப்பத்திற்கு மாற்றிக்கொள்ளச் சொன்னார்கள். அதன் பிறகு அதிசய மருந்து சாப்பிடுவதால் உருவம் மறைந்துகொண்டே வருவதுபோல் மாற்றி அமைத்து, வசனம் எழுதிக் கொடுத்தேன்.

'பராசக்தி' படம் வெளிவருவதற்கு முன்பே 'மனோகரா'வில் நடிப்பதற்காக வி.சி.கணேசன் என்று சொல்லப்படுகின்ற சிவாஜி கணேசனை நான் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றேன். அந்தப் படத்தில் மனோகரனா அல்லது ராஜப்ரியனா, எந்த வேடத்தைக் கொடுப்பது என்று முடிவு செய்யப்படாமலேயே ஒப்பந்தம் போடப்பட்டது. ராஜப்ரியன் வேடம் கொடுக்கலாம் என்ற அபிப்பிராயம் இருப்பதாகச் சொன்னார்கள்.

சிவாஜி என்னிடத்திலே 'மனோகரன் என்று எண்ணியிருந்தேன். ராஜப்ரியன் என்றாக்கிவிட்டார்களே' என்று சொன்னார். பொறுத்திருக்கலாம் என்று சொன்னேன். மனோகரனாக நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி நடிப்பதாக இருந்தது. அதேபோல், 'பராசக்தி' படத்தில் குணசேகரன் வேடத்திலும் அவரே நடிப்பதாக இருந்தது.

அந்த வேடங்களில் அவர் நடிப்பதற்கு அதிக தொகையை ஊதியமாகக் கேட்டதால், சற்று யோசிக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். பின் அவருக்குப் பதிலாக சிவாஜியை நடிக்க வைப்பது என்று முடிவாயிற்று.

அப்போதுதான் 'மனோகரா' படத்தில் சிவாஜிக்கு ஏதாவது ஒரு பாத்திரம் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

ஜுபிடர் பிக்சர்ஸ் உரிமையாளர் சோமு அவர்களை அழைத்துச் சென்று 'பராசக்தி' படத்தைப் பார்க்கச் செய்தேன். அசோக் தியேட்டரில் படம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. படத்தைப் பார்த்துவிட்டு மனோகரன் வேடத்திலேயே சிவாஜியை நடிக்க வைக்கலாம் என்று சொல்லிவிட்டார்.

பிரசாத் அவர்கள்தான் படத்தின் இயக்குநர். சிவாஜிக்கு வசனத்தைக் கொடுத்து உச்சரித்து நடித்துக் காட்டியபிறகு அவரை மனோகரனாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அந்த வசனம்கூட எனக்கு இன்னும் பாடமாக இருக்கிறது.

"பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே, முத்தே, தமிழ்ப் பெண்ணே என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே வீரனே என் விழி நிறைந்தவனே தீரர் வழி வந்தவனே என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ,

அவனை அந்த மனோகரனை, சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற உங்களது தணியாத ஆசைக்குப் பெயர்கட்டளையா தந்தையே!”

இந்த வசனத்தை சிவாஜி உச்சரித்துக் காட்டினார். ஜூபிடர் சோமுவும், டைரக்டர் பிரசாத்தும் அப்படியே மலைத்துப் போய்விட்டார்கள்.



கே.ஆர். ராமசாமி

நான் சரியான ஒரு நடிகரைத்தான் மனோகரன் வேடத்திற்கு அழைத்து வந்திருக்கிறேன் என்பதை ஏற்றுக்கொண்டு, மனோகரனாக ஒப்பந்தம் செய்தார்கள்.

நான் எத்தனையோ திரைப்படங்களுக்கு உரையாடல் தீட்டியிருக்கிறேன். அவற்றில் சம்பந்த முதலியாரின் 'மனோகரா' நாடகத்தைத் திரைக்கேற்ப மாற்றி நான் வரைந்திட்ட வசனம், என் நெஞ்சில் முழுமையாகப் பதிந்துவிட்டது என்றே கூறலாம்”. என்கிறார்.

மனோகராவின் வெற்றிக்கும் மூல முதற்காரணம் கலைஞர்தான். இப்படம் வெளியானபோது திமுகவினர் பலர் தன் பிள்ளைகளுக்கு மனோகரன் என்று பெயர் வைத்தனர்.

1937இல் முதலில் வந்தது மனோகரா. 1954இல்மீண்டும் தயாரிக்கப்பட்டது. அதில் சில மாற்றங்களை செய்திருந்தார் கலைஞர்.

பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகராவில் பேய் சம்பந்தப்பட்ட காட்சிகள் உண்டு. கலைஞர் பேயை எடுத்துவிட்டு கண்ணுக்குத் தெரியாத மனிதன் என்றாக்கி இருந்தார்.

“நாடகத்தில் காட்டப்படும் பேய்தான் பெரிதும் மாற்றி அரூபம் ஆக்கப்பட்டிருக்கிறது. தாமிரத்தை தங்கமாக்கும் மூலிகைகள் இருக்கும்போது சில வினாடிகள் உருவத்தைத் தோன்றாமல் செய்து கொள்ளக்கூடிய மூலிகையும் இணைந்திருக்கலாம் என்ற கற்பனைதான் அது”.

என்று ஒரு பேட்டியில் கலைஞரே தெரிவித்திருந்தார்.

நாட்டில் அவ்வப்போது நிகழும் அரசியல் நிகழ்வுகளையும் கலைஞர் சாமர்த்தியமாக தனது வசனத்தில் புகுத்தி விடுவார் என்பதற்கு இப்படத்தின் ஒரு வசனமே சாட்சி.

“1945ல் திருச்சியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் சி.பி.சிற்றரசு எழுதிய போர்வாள் நாடகத்தை நடிகவேள் எம்.ஆர்.ராதா அரங்கேற்றினார்.

இந்நாடகம் பின்னர் காங்கிரஸ் ஆட்சியில் தடை செய்யப்பட்டது.”

இந்தச் செய்தியை கலைஞர் எப்படி தன் வசனத்தில் கொண்டு வருகிறார் பாருங்கள்.



எம்.ஆர்.ராதா

“எங்கே கேசரிவர்மா அவசரமாகப் புறப்படுகின்றாய்?”

நாடகத்திற்கு! அதோ அவர்களைத் தான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

மறந்துவிட்டேன் இன்று மனோகரன் பிறந்த நாள் விழாவா? உம் நாடகத்திற்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்?

போர்வாள்

சபாஷ் தடையொன்றும் கிடையாதே நடத்துவதற்கு?

மனோகரா படத்திற்கான வசனங்களுக்கு திருத்தங்களை பிரசாத் கேட்க வெளியூர் கூட்டங்களுக்குப் பேசச் சென்றிருந்த கலைஞர் அவற்றிற்கு டிரங்க் டெலிபோனிலேயே பதில் சொல்ல படமாக்கப்பட்ட வித்தையை தான் பார்த்திருப்பதாக முக்தா சீனிவாசன் பதிவிடுகிறார்.

8. பணம்

பராசக்தி 1952-ன் தொடக்கத்தில் வெளியானது என்றால் பணம் அதே வருடத்தில் கடைசியில் வெளியானது. அந்தப் படத்தில் இடம் பெற்ற ஒரு பாடல் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியது.

படத்தில் ‘திருக்குறள் முன்னணிக் கழகம்’ என்று கீற்றுக் கொட்டகையில் இருக்கிற ஒரு அமைப்பு காட்டப்படும். அதைப் பற்றிப் பாடுவதைப் போல் தீனா... மூனா... கானா என்றொரு பாடலை கலைவாணர் பாடினார். கண்ணதாசனின் பாடல் அது.


அதற்குப் போட்டியாக ஒரு பாடலை தனது மாங்கல்யம் படத்தில் வைத்தார். (மா.பொ.சி.யின் தமிழரரசு கழகத்தைச் சார்ந்த) இயக்குநர் ஏ.பி.நாகராஜன், வா.மு.ஏழுமலை மற்றும் ஏ.கருணாநிதி ஆகிய நடிகர்களை அப்படத்தில் நடிக்க வைத்து டி.எம்.சௌந்தர்ராஜன் மற்றும் கே.ஆர். செல்லமுத்து ஆகியோர் குரல்களில் வானா... மூனா... கானா எனப் பாட வைத்தார்.

9. நாம்

‘நாம்’ படம் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டப் பின்னணியை இப்படிச் சொல்கிறார் இராம.அரங்கண்ணல் தனது நினைவுகள் நூலில்....

‘பராசக்தி’ படம் வெளியாவதற்குச் சில திங்களுக்கு முன்பு சிவாஜி கணேசனுக்குத் திருமணம் நடந்தது. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சுவாமிமலையில் ஒரு சின்ன சத்திரத்தில் தன்னுடைய சகோதரி மகளை மணந்தார். சீர்திருத்த முறையில்தான்! தமிழாசிரியர் ஒருவர் தலைமை தாங்க கலைஞரும் நானும் வாழ்த்துரைகள் வழங்க திருமணம் முடிந்தது. நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் ‘கிருஷ்ணன்-பஞ்சு’ சகஸ்ரநாமம் போன்றவர்கள் வந்திருந்தார்கள். உணவருந்தப் போகும்போது ‘லேட்டாக’ வந்து சேர்ந்தார் எம்.ஜி.ஆர்.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எம்.ஜி.ஆரைப் பார்த்து கணேசன், எந்தவித உள்ளுணர்வும் இல்லாமல் சொன்னார். “அண்ணே நீங்க இந்த சூட்டுகோட்டு போட்டுக்கிட்டு ஏண்ணே ஆக்ட் பண்ணப் போறீங்க? கத்தி எடுத்தீங்கன்னா கைகொட்டி மக்கள் ரசிக்கும்போது?” எம்.ஜி.ஆர். முகத்தில் மாறுதல் தெரிந்தது. விடை பெற்றுக் கொண்டு போகும் போது என்னிடம் எம்.ஜி.ஆர். சொன்னார். “கணேசு என்னைப் பார்த்து என்ன கேட்டது பார்த்தீங்களா?... ஊம்... பார்க்கிறேன்.” வீரசாகச படங்களில் கதாநாயகனாக வந்த எம்.ஜி.ஆர். ஒரு மாறுதலாக சூட்டுகோட்டு போட்டுக் கொண்டு கதாநாயகனாக வந்த “அந்தமான் கைதி” என்கிற படம் அவ்வளவு வெற்றியைப் பெறவில்லை. இதை மனதில் வைத்தே ‘சிவாஜி’



திருமணக் கோலத்தில் சிவாஜிகணேசன்



பி.எஸ்.வீரப்பா

சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இந்த ஒரு சொல் எம்.ஜி.ஆர். மனதில் 'ஆழமான சவாலுக்கு' அஸ்திவாரம் அமைத்திருக்க வேண்டும். இந்தப் படத்துக்குப் பிறகும் 'மௌன நாட்களாக' இருந்தன எம்.ஜி.ஆருக்குப் படத் துறையில்!

கழகம் வளர்ந்து கொண்டிருந்த இந்த நாட்களில் எம்.ஜி.ஆர். அவர்களும் நம்மோடு கலக்க ஆரம்பித்தார்கள். கலைஞர், எம்.ஜி.சக்கரபாணி, எம்.ஜி.ஆர்., ராசாராம் என்ற பத்திரிக்கையாளர், டைரக்டர் ஏ.காசிலிங்கம், வில்லன் நடிகர் பி.எஸ். வீரப்பா ஆகியோர் 'பார்ட்னர்களாக'க் கொண்ட மேகலா பிக்சர்ஸ் என்கிற நிறுவனமும் எம்.ஜி.ஆர். சகோதரர்களின் முயற்சியினாலே உருவாக்கப்பட்டது. கலைஞரின் கதை வசனம் கொண்ட 'நாம்' என்கிற படம் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டிருந்தது.

என்று சொல்கிறார் இராம.அரங்கண்ணல்.

தி.மு.கழகப் பிரச்சாரம் மிக வலுவாக இருக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் எண்ணத்திற்கு மாறாக அரசியல் வாடையே இல்லாத வசனங்களை எழுதியிருந்தார் கலைஞர்.

தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்குரலாக ஒலித்த 'நாம்' படத்தின் வசனங்கள் கலைஞருக்குள் இருந்த கம்யூனிஸ்ட்டை வெளிப்படுத்தியது.

படத்தின் ஒரு புகழ்பெற்ற வசனமிது:

ஜமீன்தார்: என்னடா ஆச்சரியக்குறி போடுகிறாய்?

குமரன் (எம்.ஜி.ஆர்.): ஆச்சரியக்குறிதான் ஜமீன்தார் அவர்களே கொஞ்சம் வளைந்தால் கேள்விக்குறியாக மாறிவிடும்! ஞாபகம் இருக்கட்டும். அரிவாளுக்கும் கேள்விக்குறிக்கும் அதிக வித்தியாசமில்லை.

பின்னணிப் பாடகரும் கலைஞரின் மைத்துனருமான சி.எஸ். ஜெயராமனின் இசையில் வெளிவந்த இப்படத்தின் அனைத்துப் பாடல்களையும் கலைஞரே எழுதியிருந்தார்.

நாம் திரைப்படம் வெளியானபோது வெளியிடப்பட்ட பெரிய அளவிலான வண்ண சுவரொட்டி மக்களைக் கவர்ந்தது.


மக்கள் பேரணிக்கு முன் எம்.ஜி.ஆர். நின்றிருப்பதை போன்ற படம் தான் சுவரொட்டி. நாம் திரைப்படம் வெற்றிப்பட வரிசையில் சேரவில்லை. ஆனால் திரைக்கதையும் உரையாடலும் கலைஞருக்கு பேர் வாங்கிக் கொடுத்தது.

10. அம்மையப்பன்

அம்மையப்பன் என்ற பெயரில் கலைஞரின் கதையை ஏ.பீம்சிங் இயக்கத்தில் நேசனல் புரொடெக்ஷன்ஸ் தயாரித்து வந்தது. அதே நேரம் சுகம் எங்கே என்ற பெயரில் கண்ணதாசன் கதையை கே.ராம்நாத் இயக்க மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து வந்தது. இரண்டும் ஒரே கதைதான்.

தான் மாடர்ன் தியேட்டர்ஸில் இருந்தபோது இந்தக் கதையை டி.ஆர்.சுந்தரத்திடம் தந்ததாகவும் பின்னர் படமாக ஆக்கலாம் என்று அவர் சொன்னதாகவும் கலைஞர் வாரப் பத்திரிகையில் எழுதினார். அந்தக் கதை தான் எழுதிய கதைதான் என்று கண்ணதாசன் பதில் கட்டுரைகள் எழுதினார். இந்தப் பிரச்சினையில் 'சுகம் எங்கே' படத்தில் நடிக்க சிவாஜி மறுத்துவிட்டார்.

ரெயினால்ட்ஸ் என்ற ஆங்கில எழுத்தாளரின் 'போர்வீரன் மனைவி' என்ற ஆங்கில நாவலின் தழுவல்தான் மேற்படி இரண்டு கதைகளும் என்கிறார் அறந்தை நாராயணன். 1954இல் வெளியான இரண்டு படங்களும் சரியாகப் போகவில்லை.



ஏ.பீம்சிங்

'அம்மையப்பன்' திரைப்படம் தயாரிக்கப்பட்டு வந்த காலத்தில் அந்த செட்டுக்கு சென்றிருந்த கலைஞரை படப்பிடிப்பு குழுவினர் அங்கு போடப்பட்ட சிம்மாசனத்திலே உட்கார வைத்து படம் எடுக்க ஆசைப்பட்டனர். கலைஞரும் அவர்கள் விருப்பத்தை ஈடேற்ற இசைந்து, சிம்மாசனத்தில் அமர்ந்து போஸ் தந்தார். பின்னாளில் தமிழகத்தை ஆளும் பொறுப்பேற்று மக்கள் இதய சிம்மாசனத்திலே இவர் அமருவார் என்பதை அப்போது யாரும் அறிந்திருந்தார்களோ என்னவோ?

11. ராஜாராணி

இன்ஷா தெஹ்ராணி என்கின்ற நண்பர் 'ராஜாராணி' படத்தைத் தயாரித்தார். அந்த சமூகக் கதையில் சிவாஜியினுடைய பல்வேறு விதமான நடிப்பாற்றலை மக்களுக்குக் காட்ட வேண்டுமென்பதற்காக நடிகவேள் எம்.ஆர்.ராதாவிற்காக கலைஞர் எழுதிய 'தூக்குமேடை என்ற நாடகத்திலே வருகின்ற 'அபிநயசுந்தரம்' பாத்திரமேற்ற படுக்கைப் புரட்சி என்ற ஒரு நாடகம் அந்தப் படத்தில் வைக்கப்பட்டது.

அதையொட்டி, அகல்யா' கதை, சேரன் செங்குட்டுவன் ஓரங்க நாடகமும் இடம்பெற்றது. அந்தப் படத்திலேயே வயது முதிர்ந்த சாக்ரட்டீஸாகவும் நடித்தார். இப்படிப் பல்வேறு விதமான நடிப்பாற்றலும் சிவாஜிக்கு உண்டு என்பது 'ராஜாராணி' மூலம்தான் முதன் முதலாக வெளிப்படுத்தப்பட்டது.

'ராஜா ராணி' திரைப்படத்தில் கலைஞரின் 'சேரன் செங்குட்டுவன்'




ராஜசுலோசனா

ஓரங்க நாடகம் இடம் பெற்றிருந்தது. சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளுடன் ஊஞ்சல் மண்டபத்தில் உரையாடிக் கொண்டிருக்கிறான். இந்த உரையாடலில் எழுச்சிமிக்க வீரக்கதையொன்றை செங்குட்டுவன் வேண்மாளுக்கு சொல்கிறான். இந்தக் கதைக்கான வசனத்தை வார்த்தெடுத்தவர் கலைஞராவார். அவரை அதை செங்குட்டுவன் வாயிலாக இப்படிச் சொல்கிறார். 'மகனை போர்க்களத்திற்கு அனுப்பி புறக்காட்சியை கேளேன். நானே எழுதியிருக்கிறது. யுதி நடையில்' என்று துவங்கி சொல்லி முடிக்கிறார்.

நீண்ட நெடிய வசனமிது. காட்டருவிபோலே கொட்டும் வசன வீச்சு அதில் மின்னலென பளிச்சிடும் வீரம், சோகம், தியாகம் முடிவில் பெற்றி என நடைபோடுகிறது. இந்தக் காட்சியில் செங்குட்டுவனாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், வேண்மாளாக நடிகை ராஜசுலோசனாவும் பங்கேற்றனர். இந்த மிடுக்கான வீரவசனத்தை நடிகர் திலகம் உள்வாங்கிக் கொண்டு தங்கு தடையின்றி பாவம் மிளிர பேசி ஒரே டேக்கில் முடித்துக் கொடுத்தார். காட்சியில் உடன் பங்கேற்ற ராஜசுலோசனா இந்த நிகழ்வை ஒரு அசாதரணமான அதிசயமாக வியந்தார்.

மேற்குறிப்பிட்ட காட்சி குறித்து இயக்குனர் ஆர்.சோமசுந்தரத்தின் கூற்று:


"கலைஞர்தான் நான் எழுதிய எழுத்துக்கு ஆசான் - மானசீக ஆசான் - அவர் எழுதியதென்ன சாதாரண எழுத்தா? "காவா நாவிற் கனகனும் விசயனும் விருந்தில் மன்னர் தம்முடன் கூடி அருந்தமிழ் ஆற்றல் அறிந்திரராகிச் செப்பிய மொழிகளைச் சேரனுக்குணர்த்துவேன்" என்று சேரன் செங்குட்டுவன் நாடகத்தில் (ராஜா ராணி திரைப்படத்தில் கண்டது) அந்தக் கவிதை வரிகளில் தமிழின் பெருமையை அவர் எழுதியிருக்க - அதை நினைத்து நினைத்து நெஞ்சினிக்க - நாவினிக்க - கோடி முறை கூறினாலும் எங்கள் குதூகலம் கறையாது. "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாவேந்தர் பாடினார் அன்று. அவர் மட்டும் இன்று உயிரோடிருந்திருந்தால் "தமிழுக்கும் கலைஞர் என்று பேர்...!" என்றுதான் பாடியிருப்பார்."







பானுமதி



எஸ்.சி.கிருஷ்ணன்



பாரதிதாசன்

12 ரங்கோன் ராதா

இப்படத்தில் பாரதிதாசன் அவர்கள் எழுதிய 'தலைவாரிப் பூச்சூட்டி உன்னை' என்ற பாடல் பானுமதி குரலில் இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் தயாரிப்பாளர் பாடலாசிரியர் இருவருக்குமான பிணக்கில் இப்பாடல் படத்தில் இடம் பெறாமல் போயிற்று. இசைத்தட்டில் மட்டுமே கேட்டு மகிழும் இப்பாடல் காட்சியில் காணக்கிடைக்காமற் போயிற்று.

இதுபோலவே கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மற்றும் எஸ்.சி.கிருஷ்ணன் சேர்ந்து பாடிய அரிய பாடலான 'உன் மேலே நான் மயங்கி (செத்தாலும் உனை நான் விடமாட்டேன்)' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடலும் படத்தில் இடம் பெறாமற் போனது.

கலைஞரின் வசனத்தை 'ரங்கோன் ராதா' படத்தில் தான் பேசிய சிறப்பைப் பாராட்டிய அறிஞர் அண்ணா அவர்கள் "நடிப்பிற்கு இலக்கணம் வகுத்தவர் பானுமதி" என்று தன்னைப் பாராட்டி வாழ்த்தியதாக நடிகை பானுமதி தெரிவித்தார்.

13 குறவஞ்சி

"குறவஞ்சி"யில் இப்படி ஒரு பாடல்:

"படி அளப்பேனென்று பாராள வந்தவன்
தடியெடுத்தானடி முத்தம்மா - அவன்
தடியெடுத்தும் அதைத் தாங்கிக் கொண்டோமென்று
குடிகெடுத்தானடி முத்தம்மா"

கதைப்படி கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து இளவரசன் நாடோடி வேடத்தில் நாட்டுப் பணியாற்றுகிறான். ஆட்சியின் தவறுகளை தன் பாடல்கள் மூலம் மக்களுக்கு சுட்டிக்காட்டி எழுச்சியுற முயலும் பாடலின் ஒரு பகுதியே மேலே குறிப்பிட்டது.

இத்திரைப்படக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்தது. கண்ணதாசனின் இந்தப் பாடலில் காங்கிரஸ் ஆட்சியைத் தாக்கும் வண்ணமாக அமைந்திருந்தது என்பது கவனிக்கத்தக்கது. பாடல் இசைச் சித்தர் சி.எஸ்.ஜெயராமன் குரலில் ஒலித்தது.

14 காஞ்சித் தலைவன்

"வெல்க நாடு வெல்க நாடு" என்று தொடங்கும் இப்பாடலின் பல்லவியை முதலில்,

"வெல்க காஞ்சி வெல்க காஞ்சி வெல்க வெல்கவே" என்று தான் கலைஞர் எழுதியிருந்தாராம்.

சென்சாரில் வெல்க காஞ்சி என்ற வார்த்தையை ஏற்றுக் கொள்ளவில்லை. அண்ணா பிறந்த ஊர் காஞ்சி. அதனால் இது கட்சிப் பிரசாரப் பாடல் போல உள்ளது என்று சொல்லப்பட்டதாம்.

அதனால் இப்பொழுதுள்ளது போல் மாற்றிக் கொடுத்தாராம் கலைஞர்.



தமிழ்வாணன்

1961 ஏப்ரல் மாதம் அண்ணா தலைமையில் ஜெமினி வாசன் இப்படத்தினை தொடங்கி வைத்தாலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் படம் திரைக்கு வந்தது. என்ன காரணம்? கலைஞருக்கும் எம்ஜிஆருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுதான் காரணமென்று கல்கண்டு இதழில் ஒரு பெரிய கட்டுரையையே வெளியிட்டிருந்தார் எம்ஜிஆரின் ஆதரவாளராயிருந்த தமிழ்வாணன்.

இப்படத்தில்கூட கலைஞர் அண்ணாவைப் பற்றி எழுதி அவரைச் சிறப்பித்திருக்கிறார்.

* அண்ணாவின் போக்கை யாரும் சுலபமாக புரிந்து கொள்ள முடியாதே
* மூன்று நண்பர்களும் ஒரே இதயத்தில் இடம் பெற்றுள்ளோம்.
* காஞ்சிபுரம் குறும்பு கண்ணியம் கெடாது.

15. பூம்புகார்

கலைஞர் நீண்ட நாட்களாக திட்டமிட்டு எடுத்த படம் பூம்புகார்.

1956ஆம் ஆணடு முரசொலியில் வெளிவந்த முதல் விளம்பரத்தில்

சிவாஜி கணேசன் - பத்மினி

கதை வசனம் மு.கருணாநிதி

இயக்கம் கிருஷ்ணன் - பஞ்சு

தயாரிப்பு ஏவிஎம்

என்றிருந்தது. ஆனால் படம் அடுத்த எட்டு ஆண்டுகள் கழித்துதான் வெளிவந்தது. அப்போது தயாரிப்பு நிறுவனம் - நடிகர் நடிகை - இயக்குநர் என எல்லோமே மாறிவிட்டனர். கல்லக்குடிப் போராட்டத்தில் கைதாகி சிறையிலிருந்த கலைஞரைப் பார்த்துவிட்டு வந்த இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) தன் சகா பஞ்சுவோடு போய் ஏவி.எம். செட்டியாரிடம் சொன்ன செய்தி, "கண்ணகி படம் வெளிவந்து நீண்ட நாட்களாகிவிட்டன. மு.க. சிலப்பதிகாரத்தை சிறையில் ஆழ்ந்து படித்து வருகிறார். அதனை நாம் மீண்டும் சினிமாவாக்கலாம்".

கலைஞர் விடுதலையாகி வந்ததும் ஒரு நாள் நள்ளிரவு முரசொலி அலுவலகத்திற்கு மெய்யப்பச் செட்டியார் கிருஷ்ணன்-பஞ்சுவுடன் வந்தார்.



கே.பி.சுந்தராம்பாள்

பேசினார். முன்பணம் கொடுத்தார். கலைஞர் படத்தின் தலைப்பைச் சொன்னார் "பூம்புகார்".

ஆனால் 1959இல் தங்கப்பதுமை படம் வந்ததும் பூம்புகார் படத்தைக் கைவிட்டார் செட்டியார். காரணம் தங்கப்பதுமை கதை கண்ணகி கதை மாதிரி இருப்பதாக எண்ணினார்.

சிலப்பதிகாரத்தின் சுவையில் சிறைப்பட்டிருந்த கலைஞர். 1964இல் சொந்த நிறுவனம் மூலமே பூம்புகார் படத்தைத் தந்தார்.



எஸ்.எஸ்.ராஜேந்திரன்

பூம்புகார் படத்தில் கவுந்தியடிகளாக நடிக்க கே.பி.சுந்தராம்பாள் தான் பொருத்தமானவர் என்று முடிவு செய்யப்பட்டதால் கொடுமுடியில் இருந்த கே.பி. சுந்தராம்பாளை பார்க்க கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் கொடுமுடி சென்றனர்.

ஔவையாருக்குப் பிறகு திரைப்படங்கள் எதிலும் நடிக்காமல் இசை நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே சென்று வருகிறேன் என்று சொன்ன கே.பி.எஸ். பூம்புகாரில் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை.

கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் வற்புறுத்த, பழனி சென்று முருகனிடம் கேட்கிறேன். அவன் உத்தரவு கிடைத்தால் நடிக்கிறேன் என்று சொன்னதும் கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் சென்னை திரும்பினர்.

சில நாட்களில் முருகன் உத்தரவு கொடுத்துவிட்டதாக கே.பி.எஸ். கலைஞருக்கு தகவல் அனுப்பினார். படத்திலும் கவுந்தி அடிகளாகவே வாழ்ந்து காட்டினார்.

வாழ்க்கைக்குப் பொருத்தமான தத்துவப் பாடல் இப்படத்தில் ஒன்று வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. வீட்டிலிருந்து புறப்பட்டு ஸ்டுடியோ வருவதற்குள் கலைஞர் இப்பாடலை எழுதி முடித்துவிட்டாராம்.

இந்தப் படத்திற்காக எழுதிய அந்தப் பாடல் ஒலிப்பதிவு கூடத்தில் பதிவானது.

'அன்று கொல்லும் அரசின் ஆணை வென்றுவிட்டது...

நின்று கொல்லும் தெய்வம் எங்கே சென்றுவிட்டது?'

என்று வந்த வரியைக் கேட்டதும் சுந்தராம்பாள் அருகிலிருந்து கலைஞரிடம், "மகனே... தெய்வம் எங்கே சென்று விட்டது என்று நான் பாடலாமா... நான் அப்படிப் பாடக்கூடாது. வரியை மாற்றிக் கொடுங்கள்" என்று சொன்னாராம்.

பாடல் வரியை மாற்ற பாடலை எழுதிய மாயவநாதனைத் தேடுகிறார்கள். அவர் ஊரில் இல்லை என்ற செய்திதான் வந்தது. என்ன செய்வது என்று யோசித்த கலைஞர். வரியை மாற்றிக் கொடுத்தாராம்.

“நின்று கொல்லும் தெய்வம்

இங்கே வந்து விட்டது” என்று அந்த வரியும் சரியானது, பாடலும் பதிவானது.

கலைஞரின் துரிதவேகம் கண்ட கே.பி.சுந்தராம்பாள் ஒலிப்பதிவுக் கூடத்தில் இருந்த அனைவரிடமும் கூறி கலைஞரை பாராட்டினாராம்.

பூம்புகார் படம் பற்றி கட்டுரை ஒன்றில் கீழ்க்கண்ட செய்திகளை கலைஞர் பகிர்ந்து கொண்டார்.

1964-ஆம் ஆண்டு மலர்ந்திட்ட அந்த நாளோ, என் சிந்தையிலே செந்தேனை நிரப்பிடும் சிறப்பு நிகழ்ச்சியொன்று நடைபெறும் நாளாகவும் அமைந்துவிட்டது.

அன்றுதான் நான் கதை, உரையாடல் தீட்டிய - மேகலா படநிறுவனத்தாரால் உருவாக்கப்பட்ட 'பூம்புகார்' திரைப்படம் சென்னை மிட்லண்ட் தியேட்டரில் பத்திரிகையாளர்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும், கலையுலக நண்பர்களுக்கும் போட்டுக் காட்டப்பட்டதாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தைத்தான் புதுவடிவம் கொடுக்க முயன்றிட்டேன், வெள்ளித்திரைக்கேற்ப.

மேலை நாடுகளில் பைபிள் கதைகளை வைத்து எத்தனையோ படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சிசில் - பி. டெமிலி ஏராளமான பொருட்செலவில் 'டென் கமாண்ட்மென்ட்ஸ்' என்னும் படத்தினை ஒரு முறையல்ல, இரு முறை தயாரித்து வெளியிட்டு உலகையே வியப்பில் ஆழ்த்தினார். இராமாயணம், மகாபாரதம் இதிகாசங்களும் ஏராளமான படங்களுக்குத் தாராளமாகக் கதைக் கரு தந்திருக்கின்றன, கடனாக.

தமிழ்க் காப்பியங்கள் வேறு எந்த மொழி இலக்கியங்களுக்கும் இளைத்தவையோ, சளைத்தவையோ அல்ல. அவை வற்றாத கற்பனைச் சுனைகளாக வளமான கதைப் புதையல்களாக - வண்ண வண்ண ஓவியங்களாக - வாழ்நெறி காட்டி வந்துள்ளன பன்னெடுங்காலமாக.

அவற்றிலிருந்து பல அருமையான கருப்பொருள்களைப் பின்னணியாக வைத்து நாமும் ஏன் படம் எடுக்கக்கூடாது என்கிற எண்ணம் நெடுநாட்களாகவே எனக்கு உண்டு. அந்த எண்ணத்தின் விளைவுதான் சிலப்பதிகாரத்தின் புதுப் பிறவியான 'பூம்புகார்".

முன்னொரு முறை சிலப்பதிகாரத்தை வைத்துக் 'கண்ணகி' படம்

வெளியிடப்பட்டது. இளங்கோவன் அவர்கள் எழில் கொஞ்சும் தமிழில் வசனம் எழுதியிருந்தார். ஆனால் அந்தப் படம் புராணப்படம் போலத்தான் வெளிவந்தது.

நான் 'பூம்புகாரை' உருவாக்க முற்பட்டபொழுது, அந்தப் பழைய படத்தைப் பற்றிய எண்ணங்களும் என் மனத்தில் மின்னலிட்டன.

சிறைப் பறவையாக அடைபட்டிருந்தபோதுதான், என் சிந்தையில் கருக்கொள்ளத் தொடங்கிற்று 'பூம்புகாரு'க்குரிய திரைக்கதை.


கலைஞர் சொன்ன இன்னொரு செய்தி :

நகைத் தொழிலாளர் மாநாடு ஒன்று சென்னையில் 26.12.66 அன்று நடைபெற்றது. அம்மாநாட்டில் வெள்ளிக் கேடயம் ஒன்றை எனக்கு வழங்கினார்கள். 'பூம்புகார்' படத்தில், நகைத் தொழிலாளிகள் மீதுள்ள பழியைத் துடைத்திடும் வகையில் உரையாடல் தீட்டியதற்காகவே அந்தப் பரிசு எனக்கு அளிக்கப்பட்டது.

16. பூமாலை


பூமாலை படத்திற்காக மைசூரில் ஏழு நாட்கள் தங்கி வசனத்தை முழுமையாக எழுதிக் கொண்டு வந்தார் கலைஞர். இயக்குநர் ப.நீலகண்டன் அவர்களிடம் வசனங்களைப் படித்துக் காட்டினார். அப்போது இயக்குநர் நீலகண்டன் இன்னும் நான்கைந்து நாட்கள் தங்கி எழுதிக் கொண்டு வந்திருந்தால் இன்னும் கொஞ்சம் மெருகேறியிருக்கும் என்றார். இதைக் கேட்டவுடன் கலைஞர் கொஞ்சம் கோபப்பட்டு வசன ஃபைலை மேஜையில் வேகமாக வைத்து விட்டு எதுவும் சொல்லாமல் வெளியேறிவிட்டார்.

இரண்டு நாட்கள் கழித்துக் கலைஞர் அலுவலகத்திற்கு வந்தபோது, நீலகண்டன் வருத்தம் தெரிவிக்கும் வகையில், "முழுவதும் படித்துப் பார்த்தேன். ஒரு வாரத்தில் இவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கிறீர்கள். அதுவும் உதவியாளர் கூட வைத்துக் கொள்ளாமல் உங்கள் கைப்படவே எழுதியிருக்கிறீர்கள். உண்மையில் வியந்து போனேன்.." என்றார்.



ப.நீலகண்டன்

மேலும், "நான் வசனம் எழுதி முடிக்க இரண்டு மாதங்களாகும். அதுவும் நான்கைந்து பேரிடம் காட்சிகளை விளக்கி எழுதச் சொல்லி வாங்கி நான் எழுதியுள்ள வசனங்களோடு இணைத்துக் கொள்வேன். என்னை மனதில் கொண்டு தான் இன்னும் நான்கைந்து நாட்கள் தங்கி எழுதியிருக்கக்



குடும்பத்தினருடன் அண்ணா

கூடாதா என்று உங்கள் திறமை அறியாது கேட்டு விட்டேன்.." என்று நீலகண்டன் தன் நிலையை விளக்கினார்.

அதற்கு கலைஞர் "நான் ஏழு நாட்கள் மைசூரில் தங்கியிருந்தேன். நான்கு நாட்களிலேயே வசனம் எழுதி முடித்து விட்டேன். மூன்று நாட்கள் அரசியல் சம்பந்தப்பட்ட வேறு வேலை பார்த்தேன்." என்றார். உடனே நீலகண்டன், "நீங்கள் அளவிட முடியாத திறமையாளர். கலையுலகிற்குக் கிடைத்த பொக்கிஷம்" என்று சொல்லி கலைஞரின் கரங்களைப் பற்றிக் கொண்டு பாராட்டினார்.

'பூமாலை' படத்தில் தணிக்கைக் குழுவினரால் பெரும் பகுதி வெட்டப்பட்டு உள்ளது என்ற தகவல் கலைஞருக்கு கிடைத்தது. 'அந்தப் படத்தில் வெட்டும் அளவுக்கு எந்தக் காட்சியிலும் ஆபாசமோ அரசியலோ இல்லையே' என்று வருந்திய கலைஞர் உடனடியாக தணிக்கைக்குழு அலுவலகத்திற்குப் போனார். நேரில் சென்ற கலைஞரை தணிக்கைக் குழு தலைவர் மாடியிலிருந்து கீழே வந்து வரவேற்று மாடிக்கு அழைத்துப்போனார்.

கலைஞர் "என்ன சார் எங்களை யெல்லாம் மாடிக்கு ஏறி, இறங்க வைச்சு வேடிக்கை பார்க்கிறீர்கள்?" என்று வேடிக்கையாகக் கேட்டாராம்.

தணிக்கைக்குழுத் தலைவர் சற்று கிண்டலான தொனியில் "நீங்களெல்லாம் நாஸ்தீகவாதி! பழனி, திருப்பதி என்று மலைக்குப் போய் ஏறி, இறங்க மாட்டீர்கள். அதனால தான் இந்த ஏற்பாடு" என்று சொன்னாராம். உடனே அங்கெல்லாம் மொட்டையடிக்கிறார்கள் என்றுதான் நாங்கள் போவதில்லை. அதுபோல நீங்களும் மொட்டையடிக்க ஆரம்பித்தால் எப்படி? என்று படத்தில் பல காட்சிகள் வெட்டபட்டதை கலைஞர் பதிலடியாக சொல்லவும், தணிக்கைக் குழு தலைவர் உட்பட அனைவரும் சிரித்தனராம்.

நான் எழுதிய 'பூமாலை' என்னும் கதை திரைப்படமாக எடுக்கப் பெற்றது. மேகலா பட நிறுவனம் சார்பில் உருவான அதற்கு நானே திரைக்கதை அமைத்து, உரையாடலும் தீட்டியிருந்தேன். 1965-அக்டோபர் இறுதி வாரத்தில் தமிழகம் எங்கும் 'பூமாலை' திரையிடப்பட்டது. அதனுடைய

துவக்க விழாக் காட்சி கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் நடைபெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் தம் குடும்பத்தினருடன் வருகை புரிந்து சிறப்பித்தார்.

இப்படி ஒரு கட்டுரையில் பூமாலை நினைவுகளை சுழலவிட்டார் கலைஞர்.



அமிர்தம்

17. மறக்கமுடியுமா?

இந்தப் படத்தைப் பற்றிக் கலைஞர் எழுதிய குறிப்பு இது...


அவன் பித்தனா படத்துக்கு அடுத்தபடியாக நான் திரைக்கதை உரையாடல் தீட்டி வெளியிட்ட படம் 'மறக்க முடியுமா?' எனது அக்கா மகன் முரசாலி மாறன் முதன் முதலாக இயக்குநராக அறிமுகமானது அந்தப் படத்தின் மூலம்தான். இன்னொரு அக்கா மகன் அமிர்தம் அந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர்.

இதில் குறிப்பிடத்தக்க இன்னொரு சிறப்புச் செய்தியும் உண்டு. மெல்லிசை மன்னர் இராமமூர்த்தி அவர்களின் இசை அமைப்பில் நான் ஒரு பாடலையும் அந்தப் படத்திற்கென்றே தீட்டியிருந்தேன்.

"காகித ஓடம் கடலலை மேலே போவது போலே மூவரும் போவோம்."

அந்தப் படத்தில் வரும் உள்ளத்தை உருக்கிடும் ஒரு காட்சிக்கேற்பவே இந்தப் பாடலை நான் உருவாக்கியிருந்தேன். பின்னால், பல ஆண்டுகள் கடந்த பிறகும்கூட எல்லாருடைய இதயத்தையும் தொட்டிடும் அளவுக்கு அது செல்வாக்குப் பெற்றிடும் என்று அப்போது நான் எண்ணவே இல்லை.

ஒருவருடைய உள்ளத்தில் பீறிடும் உணர்ச்சி வெள்ளத்திற்கு உண்மையான வடிவம் மட்டும் கிடைத்துவிட்டால் அது மற்றவர் மனத்திலும் நிலையான இடத்தைப் பெற்றுவிடும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகவே எனக்குக் காட்சி தருகிறது இந்தக் 'காகித ஓடம் பாட்டு.



முரசொலி மாறன்

18. நெஞ்சுக்கு நீதி

1967 முதல் 1977 வரை திரையுலகில் நேரடியாகப் பங்கு பெறாமல் இருந்த என்னை 1978 ஆம் ஆண்டு பிப்ரவரியில் பல ஆண்டு காலமாக என்னுடன் பழகி வந்த இயக்குநர் பஞ்சு அவர்கள் சிவசுப்பிரமணியம் என்ற கோவை மாவட்ட நண்பர் தயாரிக்கவிருக்கும் ஒரு படத்திற்குக் கதையும் உரையாடலும் எழுதித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். "நெஞ்சுக்கு நீதி" என்ற இந்தத் தொடரின் பெயர்தான் அந்தப் படத்திற்கும் சூட்டப்பட்டது.

இது பற்றிய விளம்பரங்கள் வெளிவரத் தொடங்கியதும், 11.2.1978 அன்று பாளையங்கோட்டையிலே நடைபெற்ற ஒரு அரசு விழாவில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான் மீண்டும் சினிமாவிலே நடிக்கப் போவதாகவும், சில படங்களில் தான் நடித்துப் பாதியிலே இருப்பதாகவும், அவைகளை முடித்துக் கொடுப்பதோடு, புதிய படங்களிலும் நடிப்பேன் என்றும் அறிவித்தார்.

20.2.1978 அன்று சென்னையிலே "நெஞ்சுக்கு நீதி" படத்தின் துவக்க விழாவினை அந்த நிறுவனத்தினர் மிகவும் சிறப்போடு செய்தனர். திரைப்பட உலகினைச் சேர்ந்த பல நண்பர்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்தனர்....

என்று எழுதுகிறார் கலைஞர்.

19. தூக்குமேடை

'தூக்குமேடை' திரைப்படத்திற்கு பின்புலமாக ஒரு சுவையான, தலையாய செய்தியொன்று உண்டு.அதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

தஞ்சையில் நடைபெற்ற நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள் நாடகத்திற்கு விளம்பரப்படுத்திய விளம்பரங்களில் அறிஞர் கருணாநிதி நடிக்கும் "தூக்குமேடை" நாடகம் நடைபெறும் என்று எழுதி விளம்பரப்படுத்தினர். நாடக அரங்கேற்றத்திற்கு முன்தினம் கலைஞர் அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டார்.

உடனே எம்.ஆர்.ராதாவிடம் நேரில் சென்று நாடகத்தில் நடிக்க மாட்டேன் என்று கூறினார். ராதா அதிர்ந்து போனார். காரணம் என்னவென்று கலைஞரிடம் கேட்க, "அறிஞர்" என்ற பட்டம் எனது பாசத்திற்குரிய குடும்பத் தலைவன் அண்ணாவிற்கே பொருத்தமானது. அதை என்னால் ஏற்க முடியாது என்று தீர்க்கமாகக் கூறினார்.

அறிஞர் கருணாநிதியென்று விளம்பரபடுத்திய தட்டியை அகற்றி கருணாநிதி நடிக்கும் "தூக்குமேடை" என்று திரும்பவும் விளம்பரப்படுத்தினர். கொட்டகையில் மக்கள் நிரம்பி வழிந்தது. கரவொலி வானைப் பிளந்தது.

நாடக முடிவில் பேசிய நடிகவேள் ராதா "நான் கருணாநிதியின் அறிவுத் திறனைப் பாராட்டி அறிஞர் கருணாநிதி என்று பட்டம் சூட்டினேன். அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். அதனால் அவருக்கு "கலைஞர்" என்ற பட்டம் சூட்டுகிறேன்" என்று மக்களின் பலத்த கரவொலிக்கிடையே கூறினார்.

அண்ணனின் அன்பிற்குரிய தம்பி வாழ்நாளில் பல்வேறு பட்டங்கள் பெற்று புகழடைந்திருந்தாலும், "கலைஞர்" என்ற இந்தப் பட்டமே என்றும் மேலோங்கி நிற்கிறது.



எம்.ஆர். ராதா

இன்றைய தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின்தலைவர் திரு.வாகை சந்திரசேகர் "தூக்குமேடை" திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது கலைஞருடன் தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை இப்படி பதிவு செய்கிறார்.

"2 ஆண்டுகளுக்கு முன் தலைவர் கலைஞர் கைவண்ணத்தில் "தூக்குமேடை" திரைப்படத்தின் படிப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. கலைஞரின் நீண்ட வசனத்தை நான் பேசி நடிக்கும் காட்சியை இயக்குநர் அமிர்தம் இயக்கத்தில் ஓர் அரங்கத்தில் எடுத்துக் கொண்டிருந்தோம். தலைவரின் வசனத்தை 15 பக்கங்களுக்கும் மேல் மனப்பாடம் செய்து நடித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று அரங்கத்தில் பரபரப்பு, தலைவர் கலைஞர் வந்துவிட்டார். நான் தலைவரிடம் "நான் ஏற்கனவே உங்கள் வசனத்தைப் பயத்தோடும், பதட்டத்தோடும் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வேறு வந்துவிட்டீர்கள். இனி அவ்வளவுதான்" என்றேன்.

"சரி, நீ சுதந்திரமாய் நடி. நான் போகிறேன்" என்று தலைவர் சொல்லிவிட்டு அரங்கத்திலிருந்து வெளியேறிவிட்டார். பிறகு அந்தக் காட்சியில் நடித்துவிட்டு வெளியே வந்தேன். நேரடியாக வசனத்தை பதிவு செய்வதால் சவுண்ட் என்ஜினியர் அரங்கத்திற்கு வெளியிலிருந்து நான் பேசும் வசனத்தைப் பதிவு செய்து கொண்டிருந்தார். தலைவர் கலைஞர் அந்த இடத்திலிருந்து ஹியர்போனை தன் காதில் வைத்துக் கொண்டு நான் எப்படிப் பேசுகிறேன் என்பதை முழுமையாகக் கேட்டிருக்கிறார். நான் வெளியில் வந்ததும் வசனத்தை எப்படிப் பேச வேண்டும் என்பதை என்னிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றார். எந்த ஒரு செயலிலும் இருக்கும் இந்த ஈடுபாடே தலைவர் கலைஞரின் வெற்றிக்குக் காரணம்.

20. ஒரே ரத்தம்



பாண்டியன்

நடிகர் பாண்டியன் 'ஒரே ரத்தம்' திரைப்படத்தில் நடித்தபோது ஏற்பட்ட அனுபவத்தை விளக்குகிறார்.

"கலைஞரின் கதை வசனத்தில் பேசி நடிக்கவும் அவரது அரவணைப்பில் இடம் பெறவும் முடியுமென்று கனவில் கூட எண்ணியதில்லை. அந்த சந்தர்ப்பம் கலைஞர் அவர்களின் கதை வசனத்தில் சொர்ணம் இயக்கத்தில் 'ஒரே ரத்தம்' என்ற படத்தில் நடித்த எனக்கு கிடைத்தது.

கலைஞர் வசனத்தில் நடிக்கப் போகிறோம் என்று ஒரு பக்கம் பயம்! மறுபக்கம் சந்தோஷம். பயம் வந்ததற்கு காரணம் கலைஞர் கதை-வசனமென்றால் நீண்ட வசனத் தொடர்களாகவும் செந்தமிழ் நடையிலுமிருக்குமே என்பதுதான்.

படத்தில் அவர் எழுதிய வசனங்களைப் பார்த்தேன். அந்தக் கதாபாத்திரத்திற்கேற்ப எனக்கு பேசுவதற்கு சுலபமான எளிய தமிழ் நடையில் சிறு சிறு வசனங்களாக எழுதியிருந்தார். அதே நேரம் அந்த கதாபாத்திரத்தின் மூலம் அவர் சொல்லவிரும்பிய கருத்துக்களையும் விட்டு வைக்கவில்லை.


கலைஞரைப் பொறுத்தவரையில் தனது கதாபாத்திரத்தை ஏற்கவிருக்கும் நடிகர் நடிகைகள் யாராக இருக்கவேண்டுமென்பதெல்லாம் பார்ப்பதில்லை. நடிப்பவர்களின் நிலைமைக்கேற்ப தனது பேனாவின் கூர்மையைப் பதப்படுத்தி வசனங்களைத் தொடுப்பதுடன் தான் என்ன சொல்ல விரும்புகிறாரோ அந்தக் கருத்தை கொஞ்சமும் குறையாமல் நிறைவாகவே சொல்லிவிடுகிற தனித்துவம் பெற்றவர்.

இதை எனக்காக எழுதப்பட்ட 'ஒரே ரத்தம்' படவசனங்களிலிருந்தே உணர்ந்தேன்."


21. வீரன் வேலுத்தம்பி

இயக்குனர் இராம.நாராயணன் அவர்கள் இயக்கத்தில் ராதாரவியை முழுக்க கதாநாயகனாக அறிமுகப்படுத்திய படம் 'வீரன் வேலுத்தம்பி'.

"இந்த திரைக்காவியத்திற்கு வசனம் எழுதியவர் தானைத் தலைவர் கலைஞர். தமிழ் இனத்திற்காக அவர்கள் சிறை சென்றிருந்த நேரம். அந்த நேரத்திலும் எனக்காக சிரமம் பாராமல் வசனத்தை எழுதித் தந்தவர் கலைஞரென்றும் இப்படிப்பட்ட அவரது பரந்த எண்ணம்தான் இன்று நல்ல



ராதாரவி



இராம. நராயணன்

முறையில் என்னை அவரிடம் இழுத்து வரச் செய்திருக்கிறது" என்று ராதா ரவி முன்பு ஒருமுறை கூறினார்.

இசையமைப்பாளர் திரு.எஸ்.ஏ.ராஜ்குமார் திரை ஆய்வாளர் பொன். செல்லமுத்து அவர்களிடம் சொன்னது:-

'வீரன் வேலுத்தம்பி' படத்திற்கு இசையமைத்து, நான்கு பாடல்களை நான் எழுதியிருந்தேன். படம் முடியும் தருணத்தில் வீரன் வேலுத்தம்பி பற்றிய ஒரு எழுச்சிமிகு பாடலை இப்படத்தில் சேர்க்க இயக்குநர் ராம.நாராயணன் விரும்பினார். அப்பாடலானது இப்படத்தின் கதை வசனகர்த்தாவாகிய கலைஞர் கை வண்ணத்தில் உருவானால் சிறப்பாக இருக்கும் என்று இயக்குநர் எண்ணினார். எனது எண்ணமும் அதுவே. அப்பொழுது கலைஞர் சிறையிலிருந்தார்.

நானும் இயக்குநரும் அங்கு சென்று கலைஞரிடம் எங்கள் விருப்பத்தைச் சொன்னோம். அப்பொழுதே 'சுருளு மீசைக் காரனடி வேலுத் தம்பி' என்ற பல்லவியையும், பின்பு சரணத்தையும் எழுதி இயக்குநர் மூலம் அனுப்பினார். பாடலின் முடிவில் 'தங்களுக்கு திருப்தியாக இருந்தால் இப்பாடலை சேர்த்துக் கொள்ளலாம்' என்று குறிப்பு எழுதியிருந்தார் கலைஞர் அவர்கள்.

'சின்னப்பூவே மெல்லப் பேசு' படத்திற்கு பின்பு இந்த வீரன் வேலுத்தம்பி படம்தான் எனது (எஸ்.ஏ.ராஜ்குமார்) இரண்டாவது திரைப்படம். அப்படி இரு படங்களுக்கு இசையமைத்துள்ள ஒரு புது இசையமைப்பாளராகிய எனக்கு அவர் அளித்த சுதந்திரத்தைக் கண்டு எனது மனம் நெகிழ்ந்து போனது."

22. மக்கள் ஆணையிட்டால்

'வீரன் வேலுத்தம்பி', 'மக்கள் ஆணையிட்டால்', 'மண்ணின் மைந்தன்' போன்ற படங்களின் காட்சிகள் விறுவிறுப்பாக அமைய கலைஞர் அவர்கள் காட்சிகளை கனகச்சிதமாகக் குறைத்து மெருகூட்டியதால் எனக்கும் பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சிகளிலும் விறுவிறுப்பான படத் தொகுப்பாளர் என்ற நற்பெயர் கிடைத்து என்கிறார் எடிட்டர் ராஜமூர்த்தி

23. காவலுக்கு கெட்டிக்காரன்

கவிஞர் இளையபாரதி 'காவலுக்கு கெட்டிக்காரன்' திரைப்படத் தயாரிப்பில் கலைஞருடன் பழகி பெற்ற அனுபவத்தை விளக்குகிறார்.

"காவலுக்கு கெட்டிக்காரன்" படப்பிடிப்பு நாட்களில் கலைஞர் சென்னையில் இருக்கும் நாட்களில் எப்போது அவரை பார்த்தாலும் தன்னை பார்க்க எத்தனை பிரமுகர்கள் காத்திருந்த போதும் உடனே எங்களை வரச்சொல்லி பேசுவார். கலைஞரின் முதல் காதலே கலைத்துறைதான் என்பதை இந்த நிகழ்வு பறை சாற்றுகின்றது.

படத்தின் முழுத் திரைக்கதை வசனத்தை கலைஞர் எழுதித் தந்த பிறகு கூடுதலாக ஒரு காட்சியையும் எழுதியிருந்தார்.

அது "கிளியோபாட்ராவும் ஆண்டெனியும் என்ற ஓரங்க நாடகம். படத்தின் கதாநாயகன் பிரபு என்பதாக கலைஞர் இந்த சிறப்புக் காட்சியை எழுதினார். பின் கலைஞர் பிரபுவை அழைத்து "நான் உன் அப்பாவுக்கு அந்தக் காலத்தில் சாக்ரடீஸ் நாடகம் எழுதித் தந்திருக்கிறேன்.

அதுபோல் இப்போது உனக்காக இந்தப் படத்தில் ஒரு சரித்திர ஓரங்க நாடக காட்சியை எழுதியிருக்கிறேன். இதை எப்படி பேச வேண்டும், எப்படி நடிக்க வேண்டுமென்பதை உன் அப்பாவிடமே கேட்டுக் கொள்" என்று நகைச்சுவையுடன் கலைஞர் சொல்ல பிரபு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

24. மதுரை மீனாட்சி

கவிஞர் வைரமுத்து இந்தப் படத்துக்கு, தான் எழுதிய பாட்டு வரிகளைக் கொண்டு போய்க் கலைஞரிடம் காட்டுகிறார். அந்த பாடல் வரிகள் கீழே:

ஆண் : கண்ணுக்குள்ளே சொக்கிவிட்டேன்
கைகளுக்குள் சிக்கிவிட்டேன்

பெண் : ஒரு மீனாட்சி நானில்லையா
இனிமேல் ஆட்சி நீயில்லையா?

இந்த வரிகளை படிக்க கலைஞரின் இதழோரம் புன்னகை இழையோடுகிறது.

சரிதான் இனி Male (ஆண்) ஆட்சிதான்
இப்போது Female (பெண்) ஆட்சி
என்று சொல்லிச் சிரித்தார்.
ஏனென்றால் அது ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்த நேரம்.
கலைஞரின் மதிநுட்பத்தைக் கவிப்பேரரசு ரசித்து ரசித்து வியந்தார்.

25. மண்ணின் மைந்தன்

தமது திரைச்சுவைகள் புத்தகத்தில் மறைந்த பத்திரிகையாளர் மேஜர் தாசன் தந்திருக்கும் தகவல்கள் இவை:

2004-2005ஆம் ஆண்டில் "மண்ணின்மைந்தன்" படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியதற்காக முதல்வருக்கு கிடைத்த 11 லட்சம் ரூபாய் ஊதியத்தையும், 'கண்ணம்மா' படத்தின் மூலம் கிடைத்த 10 லட்சம் ரூபாய் ஊதியத்தையும் சேர்த்து 21 லட்ச ரூபாயை சுனாமி நிவாரணத்திற்காக அன்றைய முதல்வர் ஜெயலலிதாவிடம் மு.க.ஸ்டாலினை விட்டு கலைஞர் வழங்கினார்.

9-7-2008 அன்று 'உளியின் ஓசை' படத்தின் மூலம் கிடைத்த ஊதியத்தில் 25 லட்ச ரூபாயில் வருமானவரி போக மீதி 18 லட்ச ரூபாயை திரைத்துறையில் பல்வேறு தளங்களிலும் பணியாற்றும் மத்த கலைஞர்களுக்கு வழங்கினார். 'பெண் சிங்கம்' திரைப்படத்திற்காக கிடைத்த 50 லட்சம் ரூபாயை 14-9-2009 அன்று தமிழக அரசின் முதல் - அமைச்சர் நிவாரணநிதியில் சேர்த்தார். அந்தத் தொகை தூய்மைப் பணிபுரிவோர் (அருந்ததியர்) நலவாரியத்தின் மூலமாக அருந்ததிய மாணவர்களின் உயர் கல்விக்காக வழங்கப்பட்டது.



மேஜர் தாசன்

'இளைஞன்' திரைப்படத்திற்காக 24-4-2010 அன்று வழங்கப்பட்ட 45 லட்சம் ரூபாயை தமிழக அரசின் முதல்-அமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்தார். இந்தத் தொகையினை தமிழகத்திலே உள்ள மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக செலவிட வேண்டும் என்று கூறிவிட்டார்.

மாபெரும் இயக்குநர் திரு.எல்.வி.பிரசாத். கலைஞரின் கதை, வசனத்தில் இருவர் உள்ளம் என்றொரு படத்தைத் தயாரித்தார்.

சிவாஜிகணேசன், சரோஜாதேவி நடித்தனர். படம் முடிந்து ரேவதி ஸ்டுடியோவில் முக்கியமானவர்களுக்காகத் தனிக் காட்சி காண்பிக்கப்பட்டது.



சரோஜா தேவி

படம் முடிந்ததும் இயக்குநர் பிரசாத், படம்எனக்கு நிறைவாக இல்லாதது போன்று தோன்றுகிறது. உங்கள் கருத்து என்ன? என்று கலைஞரிடம் கேட்டார். அதற்குக் கலைஞர் இந்தப் படம் நிச்சயமாக 100 நாட்கள் ஓடும். மக்கள் பேசக்கூடிய படமாகவும் இது அமையும் என்றார்.

உறுதியாகத்தான் சொல்கிறீர் களா? என்று கேட்டார் பிரசாத். 100 நாட்களையும் தாண்டும் இது உறுதி என்றார் கலைஞர். அதற்கு பிரசாத் இந்தப் படம் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றால் உங்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் சன்மானமாக வழங்குகிறேன் என்றார்.


படம் சென்னை வெலிங்டன் தியேட்டரில் வெளியாகி வெற்றிகரமாக 100 நாட்களைத் தொட்டது. நூறாவது நாள் முடிந்த மறுநாள் இயக்குநர் பிரசாத் தன் மகனோடு கோபாலபுரம் இல்லம் வந்தார். கலைஞரைச் சந்தித்தார். நீங்கள் சொன்னபடி படம் நூறு நாட்களையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

என் கணக்குத் தவறி விட்டது. உங்கள் கணிப்பு எதிலும் சரியாக இருப்பது போல, இருவர் உள்ளமும் வெற்றி பெற்றுள்ளது. என் வாக்குறுதிப்படி இந்தாருங்கள். ரூபாய் பத்தாயிரம்... என்று சொல்லி பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்தார்.

கலைஞர் அந்தத் தொகையை வாங்கித் திருவாரூரில் தன் தாயார் அஞ்சுகம் அம்மையார் பெயரில் உருவாகிக் கொண்டிருந்த மருத்துவமனையின் கட்டிட வளர்ச்சிக்கு நிதியுதவியாக வழங்கினார்.

ஆக கலைஞரின் எழுத்து துள்ளலாக இருக்கிறது; இதயம் வள்ளலாக இருக்கிறது.

26. கண்ணம்மா



பாபா விக்ரம்

'கண்ணம்மா' பட இயக்குநர் பாபா விக்ரமின் பதிவு இது:

"கண்ணம்மா படத்தைத் தொடங்கினோம். இதற்கு கலைஞர் வசனம் எழுதினார். பெரிய நடிகர்களைத் தேடிப் போகாமல் இந்த முறை சின்ன நடிகர்களை வைத்து படமெடுத்தேன்.

கண்ணம்மா படத்தின் உருவாக்கத்தின்போது தினமும் அதிகாலை 4 மணிக்கு கலைஞரிடமிருந்து எனக்கு போன் வரும். பட வளர்ச்சியைப் பற்றி அக்கறையோடு விசாரிப்பார். பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவார். அவர் கண்ணம்மா மீது காட்டிய கனிவும் அக்கறையும் பலரையும் பொறாமைப்பட வைத்தது."

"இந்த ஆள் எப்படி தலைவரை அசத்தினான்...!" என்று பலரும் ஆச்சரியப்பட்டனர்.

கண்ணம்மா படத்தின் முதல்நாள் படப்பிடிப்பு. பார்க்க வந்தார் கலைஞர். சந்திரசேகரைப் பார்த்துக் கேட்ட கேள்வி "உன்னையப் பார்த்தா கண்ணம்மாவுக்கு அப்பா மாதிரி இல்லையே காதலன் மாதிரில்ல இருக்கிற..."

27. பாசக்கிளிகள்

பாசக்கிளிகள் படம் பற்றி அந்தப் படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய கவிஞர் இளையபாரதி இப்படி எழுதுகிறார். (நன்றி: அந்திமழை மாத இதழ்).

"தென்பாண்டி சிங்கம்" கதையை கொஞ்சம் சமூக அக்கறை கொண்ட கதையாக மாற்றி பாசக்கிளிகள் திரைப்படம் வெளிவந்தது. கலைஞர் கதை வசனம் எழுத அமிர்தம் இயக்கினார்.

ஒருமுறை பாடல் எழுதுவதற்கு அவரிடம் டியூன் கொடுத்துவிட்டு பேசிக் கொண்டிருந்தேன். உனக்கு லேட்டாயிடுச்சு, வீட்டுக்கு கிளம்பு என்றார். அவரின் வீட்டுக்குப் பின்புறமுள்ள ஹோட்டலில் ஆர்டர் பண்ணிட்டு சாப்பிட உட்காருகிறேன். கலைஞரிடமிருந்து அழைப்பு. "ஒரு இருபது நிமிடத்தில் திரும்பி வர முடியுமா டியூனுக்கு ரெண்டு லைன் எழுதியிருக்கேன். அப்படியே சொல்கிறேன். எழுதிக்கிறியா" என்றார். கல்லாவிலிருந்து டிஷ்யூ பேப்பரை எடுத்து அவர் சொன்ன ரெண்டு வரிகளையும் எழுதிக் கொண்டேன். ஆர்டர் பண்ணிய சாப்பாட்டை அப்படியே விட்டுவிட்டு அவரின் வீட்டுக்கு சென்றேன்.

குழந்தை மாதிரி, "நீ சொன்ன டியூனுக்கு நான்கு வரி எழுதிட்டேன்யா... இது டியூனுக்கு வருகிறதா பாடிக்காட்டு" என்றார். பாடினேன்.

கலைஞருக்கு எடிட்டர் ராஜ்கீர்த்தியின் மற்றுமொரு பாராட்டு இது-

"தன்னோடு பணிபுரியும் சக கலைஞர்களின் கருத்துக்களை ஏற்கும் உன்னத குணம் படைத்தவர் கலைஞர் அவர்கள். உடல் நிலை சரியில்லாத நேரங்களில்கூட "பாசக்கிளிகள்" படத்தின் காட்சித் தொகுப்புப் பிரதியை அன்றாடம் பார்த்து காட்சிகளில் ஒரு ஷாட் அதிகமாகவோ, குறைவாகவோ இல்லாத வண்ணம் திருத்தங்களை உடனுக்குடன் நடு இரவிலும், உற்சாகத்தோடும், முழு ஈடுபாட்டோடும் சரி செய்தார்.

அவர் புகழ் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

பாசக்கிளிகள் படத்தின் இசையமைப்பாளர் 'மெலடிகிங்' வித்யாசாகர் சொன்ன செய்தி இது:



வித்யா சாகர்

இந்தப் படத்திற்கு இசையமைத்தபோது கலைஞரின் ஈடுபாட்டை நேரிலே பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. பாடலை அனுப்பிவிட்டு உடனே தொலைபேசியிலே அழைத்து மெட்டுக்கு சரியாக வந்திருக்கிறதா? இல்லை மாற்றித் தரவேண்டுமா என்று கேட்பார். அவ்வளவு உயரத்தில் இருந்தாலும் தன்னை ஒரு பாடலாசிரியனாகவே அந்த இடத்தில் தக்கவைத்துக் கொள்வார்.

ஒருமுறை தென்றல் என்னும் தேரேறி என்ற பாடலுக்கான சரணங்களை அவர் எழுதிய அனுப்பியிருந்தார்.

நான் அவரைத் தொலைபேசியில் அழைத்து ஐயா இந்தப் பாடல் இதுவரையிலும் பெரும்பாலும் பயன்படுத்தாத ஒரு ராகத்தில் இசையமைத்திருக்கிறேன். அந்த ராகத்தின் பெயர் சரணத்தில் வந்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன்.

ராகத்தின் பெயரைக் கேட்டார். அடுத்த பதினைந்து நிமிடங்களில் அந்த ராகத்தின் பெயரோடு புதிய சரணங்களை எழுதி அனுப்பிவிட்டார். அவர் ஒரு திறமையான வசனகர்த்தா மட்டுமல்ல, தேர்ந்த பாடலாசிரியர் என்பதுவும் புரிந்தது எனக்கு.

29. பெண்சிங்கம்

இப்படத்தின் நோக்கத்தை கலைஞர் அவர்களே கூறுகிறார்:

“சிங்கங்களின் பெண்ணினம் உண்டு, பெண் இனத்திலும் சிங்கங்கள் உண்டு என்பதை நிரூபிக்கவும் அவர்களை ஏமாற்ற நினைக்கிற எத்தர்களுக்கு பாடம் கற்பிக்கவும், மயக்குமொழி பேசி மாது ஒருத்தியின் வாழ்வையே பாழக்க முனைந்தவர்கள் கதையை எச்சரிக்கையாகக் கொண்டு என் அரும் தமிழ்நாட்டு மகளிர் குலம் விழிப்புணர்வு பெறவேண்டுமென்ற குறிக்கோளுடன் இத்திரை ஓவியத்தை வழங்குகிறேன்.

பெண் சிங்கம் படத்தில் கப்பல் அதிபராக, அதாவது ஒரு கோடிஸ்வரராக நடித்தார் வாகை சந்திரசேகர்.

ஒருநாள் படப்பிடிப்புத் தளத்திற்குப் போனார் கலைஞர். கலைஞர் வந்ததை அறிந்த சந்திரசேகர் ஓடோடி வந்தார். குறுந்தாடியோடிருந்த சந்திரசேகரைப் பார்த்ததும் "என்னப்பா கதைப்படி கோடிஸ்வரனா இருக்கிற நீ எப்படி தாடி வச்சிக்கிற" என்று கேட்டார்.


“என்ன அப்பா நீங்க... மல்லய்யாட்ட இல்லாத பணமா? அவரு தாடியோடதான் இருக்கிறாரு. பார் மகளே பார் படத்துல சிவாஜி கோடிஸ்வரர்தான். அவரும் தாடி வச்சுட்டத்தான் வருவார்” என்றார்.

புன்னகைத்தார் கலைஞர்.

* * *

கலைஞருக்குக்
கலை உலகக் கதவைத் திறந்தவர்கள்

இசைச் சித்தர்
சிதம்பரம் ஜெயராமன்



சி.எஸ்.ஜெயராமன்

தனித்துவம் கொண்ட தனது குரல் வளத்தால் தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகர்களில் தனி இடம் பிடித்தவர் சிதம்பரம் ஜெயராமன்.

கலைஞரின் முதல் மனைவி பத்மா அம்மையார் சிதம்பரம் ஜெயராமனின் தங்கை. கலைஞருக்குத் திரை உலக வாசலைத் திறந்து விட்ட இயக்குநர் ஏஎஸ்ஏ சாமியிடம் கலைஞரைப் பற்றிச் சொல்லி பரிந்துரைத்தவர் சிதம்பரம் ஜெயராமன்தான்.

சிதம்பரத்துச் சிங்கக்குட்டி

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் முக்கியமானவர் முத்துஸ்வாமி தீட்சிதர். வடமொழியில் அமைந்த தீட்சிதரின் உருப்படிகளை, தீட்சிதரின் சீடப் பரம்பரையில் வந்தவரிடமே கற்றவர் சுந்தரம் பிள்ளை. தெலுங்கு கீர்த்தனைகளும் அவருக்கு அத்துப்படி. சுந்தரம் பிள்ளையின் மூன்று ஆண் மக்களில் கடைக்குட்டி ஜெயராமன். சங்கீதத்தில், சிதம்பரத்துச் சிங்கக்குட்டி என்பார்கள்.

அன்றைய நாடக மேடையில் இசைக்கே முதலிடம் என்பதால் ஜெயராமனை அது தத்தெடுத்துக் கொண்டது. "அது ஒண்ணுமில்லை அப்பா. எங்க அப்பா-அம்மா நாடக கம்பெனிக்கு என்ன வித்துட்டாங்க," என்று சிறு வயதிலேயே பாய்ஸ கம்பெனியில் சேர்க்கப்பட்டதை ஜெயராமன் வேடிக்கையாக குறிப்பிடுவாராம்.

பாய்ஸ் கம்பெனிகளில் நட்சத்திர நடிகரானார் ஜெயராமன். முதலில் ஜகந்நாத அய்யரின் 'பால மீனரஞ்சனி சங்கீத சபா. பிறகு பக்கிரிராஜாவின் 'மதுரை பால வினோத சங்கீத சபா'. அடுத்து நவாப் ராஜமாணிக்கம் நடத்திய 'மதுரை தேவி பாலவினோத சங்கீத சபா'.

இப்படி ஒவ்வொரு கம்பெனியிலும் ஜெயராமனுக்கு முக்கிய வேடங்கள். ராஜபார்ட் என்கிற அந்தஸ்து இருந்ததால், குடும்பத்தாருடன் தனியாகத் தங்கும் வசதி ஜெயராமனுக்கு அளிக்கப்பட்டது. இதனால், பையன் ஊர் ஊராகச் சென்றாலும், சுந்தரம் பிள்ளை உடன் செல்வார். ஜெயராமனுக்கு இடைவிடாமல் இசைப் பயிற்சி அளிப்பார்.

ஜெயராமன் நடித்த படங்கள்

1. கிருஷ்ண லீலா (1934)-- பால கண்ணன்
2. பக்த துருவன் (1935) --துருவன் (ஏஞ்சல் பிலிம் கம்பெனி)
3. நல்லதங்காள் (1935)
4. லீலாவதி சுலோசனா (1936)
5. இழந்த காதல் (1941)
6. பூம்பாவை (1944)
7. கிருஷ்ண பக்தி (1948)


இசை அமைப்பாளர் ஜெயராமன்:

1. உதயணன் வாசவதத்தை (1946) (சி.ஆர்.சுப்பராமனுடன் இணைந்து)
2. விஜயகுமாரி (1950) (சி.ஆர்.சுப்பராமனுடன் இணைந்து)
3. கிருஷ்ண விஜயம் (1950) (எஸ்.எம்.சுப்பையா நாயுடுவுடன் இணைந்து)
4. நாம் (1953)
5. ரத்தக் கண்ணீர் (1954)

ஏ.எஸ்.ஏ. சாமி

கலைஞரின் கலைப் பயணத்தை தொடங்கி வைத்தவரே ஏ.எஸ்.ஏ.சாமிதான். ஆம் கலைஞர் முதன்முதலாக வசன உதவியாளராக சேர்ந்தது ஏ.எஸ்.ஏ.சாமியிடம்தான்.

திருநெல்வேலி மாவட்டம் (இன்று தூத்துக்குடி மாவட்டம்) கோவில்பட்டி அருகிலுள்ள குருவிகுளம் என்ற கிராமத்தை பூர்வீகமாக கொண்ட அருள் சூசை அந்தோணி சாமி 1915இல் இலங்கை நாட்டில் கொழும்புவில் பிறந்தார்.



ஏ.எஸ்.ஏ. சாமி

சாமியின் குடும்பம் வணிகத் தொழிலுக்காக இலங்கையில் இருந்ததால் அங்கேயே பள்ளி கல்லூரி படிப்பை முடித்து, கல்லூரி ஒன்றில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். இலங்கையிலிருந்தே லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்.

தானெழுதிய பில்ஹணன் நாடகத்தை திருச்சி வானொலி நிலையத்திற்கு அனுப்பினார். அந்தக் கால சூப்பர் ஸ்டார் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த அந்நாடகம் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருச்சி வானொலியில் ஒலிபரப்பாகியது. அதைக் கேட்ட டி.கே.சண்முகம் அதை மேடை நாடகமாக நடத்த விரும்பி சாமியைத் தொடர்பு கொண்டார்.

இலங்கையிலிருந்து தமிழகம் வந்து அப்போது ஈரோட்டில் முகாமிட்டிருந்த டி.கே.சண்முகத்தை சந்தித்த சாமி வானொலி நாடகத்தை முழு நீள மேடை நாடகமாக்கினார். நகைச்சுவைப் பகுதிகளை டி.கே. முத்துச்சாமியும், பாடல்களை மதுரகவி பாஸ்கரதாசும் எழுதினர்.

டி.கே.சண்முகத்தின் அழைப்பின்பேரில் ஜுபிடர் அதிபர் சோமு ஈரோடு வந்து நாடகத்தைப் பார்த்தார். சாமியின் வசனங்களால் ஈர்க்கப்பட்ட சோமு, அடுத்து ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிக்க இருந்த ஆறு படங்களுக்கும் ஏ.எஸ்.ஏ. சாமியையே ஒப்பந்தம் செய்து கொண்டார்.

தான் நடிக்கும் உதயணன் - வாசவதத்தா படத்திற்கு வசனம் எழுத ஏ.எஸ்.ஏ.சாமிக்கு வாய்ப்பு வாங்கித் தந்தார் தியாகராஜ பாகவதர். ஆனால் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பாகவதர் கைது செய்யப்பட்டதால்

உதயணன் - வாசவதத்தா படத்தில் அவருக்குப் பதில் ஜி.என். பாலசுப்பிரமணியம் தான் உதயணனாக நடித்தார்.

சிதம்பரம் ஜெயராமன் இசையில் - ஏ.எஸ்.ஏ.சாமி வசனத்தில் - டி.ஆர். ரகுநாத் இயக்கத்தில் உருவான உதயணன் - வாசவதத்தா படம். 21.6.1947 அன்று திரைக்கு வந்தது.

இப்படத்தின் படப்பிடிப்பின்போதுதான் படத்தில் இசையமைப்பாளர் சி.எஸ்.ஜெயராமன் படத்தின் வசனகர்த்தா ஏ.எஸ்.ஏ.சாமியிடம் "என் மைத்துனர் ஒருவர் நன்றாக எழுதுவார். வாய்ப்பிருந்தால் உங்களுக்கு உதவியாளராக அவரை வைத்துக் கொள்ளுங்கள். சந்தர்ப்பம் வரும் போது சொல்லுங்கள்" என்று கலைஞரைப் பற்றி சொன்னார்.

அடுத்து ஜுபிடர் தயாரித்த வால்மீகி, ஸ்ரீமுருகன் ஆகிய படங்களுக்கு ஏ.எஸ்.ஏ.சாமி வசனம் எழுதினார். ஸ்ரீமுருகன் பட இயக்குநர் ராஜா சந்திரசேகரருக்கும் ஜுபிடர் சோமுவிற்கும் ஏதோ பிரச்சினை வர, இயக்குநர் ராஜா சந்திரசேகர் படத்திலிருந்து நீக்கப்பட்டார்.

ஸ்ரீமுருகன் படப்பிடிப்பில் நடிப்பையும் - வசனத்தையும் நடிகருக்கு சொல்லிக் கொடுத்து படப்பிடிப்பை கவனித்துக் கொள்ளுங்கள் என்று சாமியிடம் சொன்னார் சோமு. அப்படியே நடந்தது. ஏறத்தாழ பாதி இயக்குநர் ஆனார் ஏ.எஸ்.ஏ.சாமி.

அதன்பிறகு ஏ.எஸ்.ஏ.சாமிக்கு புதிய படமொன்று இயக்கும் வாய்ப்பினைத் தந்தார் ஜுபிடர் சோமு. அந்தப்படம்தான் ராஜகுமாரி.

தனது முந்தைய படத்தில் (ஸ்ரீமுருகன்) பரமசிவன் - பார்வதியாக நடித்த எம்.ஜி.ராமச்சந்திரனையும் மாலதியையுமே ராஜகுமாரி படத்தில் கதாநாயகன் - நாயகியாகப் போடலாம் என்று முடிவு செய்து ஜுபிடர் சோமுவிடம் ஒப்புதல் பெற்றார் ஏ.எஸ்.ஏ.சாமி. எம்.ஜி.ஆரே அந்த வாய்ப்பை எதிர்பார்க்கவில்லையாம்.

படப்பிடிப்பு வேலைகள் துவங்கின. சிதம்பரம் ஜெயராமன் கேட்டபடி அவர் மைத்துனரை வசனம் எழுத வரவழைத்தார் சாமி. வந்து சேர்ந்தார் மு.கருணாநிதி.

1947 ஏப்ரல் மாதம் வெளியான ராஜகுமாரியிலும், 1948 மே மாதம் வெளியான அபிமன்யூ படத்திலும் ஏ.எஸ்.ஏ.சாமியின் வசன உதவியாளராக இருந்தார் 24 வயது இளைஞரான மு.கருணாநிதி. ராஜகுமாரி பட டைட்டிலில் வசன உதவி என்று கலைஞரின் பெயர் இடம் பெற்றது. அபிமன்யூ படத்தின் டைட்டிலில் கலைஞர் பெயர் காட்டப்படவே இல்லை. ஆனால் முழு வசனத்தையும் கலைஞர் எழுதினார் என்றே பேசப்பட்டதாம்.

தன் பெயர் டைட்டிலில் காட்டப்படாததால் ஜுபிடரை விட்டு வெளியேறினார் கருணாநிதி.

1947 இல் வெளியான ராஜகுமாரி

1971 இல் வெளியான திருமகள் முடிய 20 படங்களை இயக்கியிருந்தார் சாமி.

அபிமன்யூ-விற்குப் பிறகு கலைஞர் வசனம் எழுத ஏ.எஸ்.ஏ.சாமி இயக்கிய படம் அரசிளங்குமரி (உடன் இயக்கியவர் ஏ.காசிலிங்கம்) 1961இல் வெளியான இப்படத்தை ஜுபிடர் பிக்சர்ஸ்தான் தயாரித்தது.


தான் முதல்வரானபின் தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரியின் தலைவராக பணியாற்றும் வாய்ப்பை ஏ.எஸ்.ஏ.சாமிக்கு வழங்கினார் கலைஞர்.

எம்.ஜி.ஆரை கடைசிவரை பெயர் சொல்லியே அழைப்பாராம் சாமி. எம்.ஜி.ஆர். சாமியை அண்ணா என்றே அழைப்பாராம்.

வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் தன் இறுதி நாட்களை கழித்து 1998இல் தன் 82வது வயதில் காற்றில் கரைந்தார்.

கலைஞர் மு.கருணாநிதிக்கு வசன உதவியாளராகவும், மக்கள் திலகம் எம்ஜிஆருக்கு கதாநாயகனாகவும் முதல் பட வாய்ப்பை வழங்கி அவர்கள் இருவருக்கும் திரை உலகத்தின் கதவுகளை திறந்த பெருமைக்குரிய ஏ.எஸ்.ஏ.சாமியின் பெயர் தமிழ் திரைப்பட வரலாற்றில் உச்சத்தில் இருக்கும் என்பது உண்மை.

கா.மு.ஷெரீப்



கவி கா.மு.ஷெரீப்

கலைஞரின் வசனம் எழுதும் ஆற்றலை மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரத்திடம் சொல்லி, கலைஞர் மாடர்ன் தியேட்டர்சில் சேரக் காரணமாக இருந்தவர் கா.மு.ஷெரீப்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குழந்தை விநாயகர் கோட்டை என்ற ஊரை பூர்வீகமான ஊராகக் கொண்டாலும், தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி அருகில் அபிவிருத்தீஸ்வரம் என்ற ஊரில் காதர்ஷா ராவுத்தர்-முகமது இபுராகிப் பாத்தம்மாள் தம்பதியருக்கு 11.8.1914 அன்று பிறந்தவர் காயல் முஸ்தபா ஷெரீப் என்ற கா.மு.ஷெரீப்

பள்ளிக்கூடமே சென்றறியாத ஷெரீப் சுயமாகவே தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றார். இவர் தந்தை தந்த ஊக்கத்தில் இளம் வயதிலேயே பாடல் எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டார். இவரின் முதல் கவிதை பெரியாரின் குடிஅரசு இதழில் 1933இல் பிரசுரமானது.

சிவாஜி என்ற இதழின் துணை ஆசிரியராக இருந்த ஷெரீப் 1948இல் ஒளி என்ற மாத இதழையும் 1950, 1970களில் சாட்டை, தமிழ் முழக்கம் ஆகிய இதழ்களையும் நடத்தினார். மா.பொ.சி. நடத்திய செங்கோல் வார இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ் முழக்கம், சீதக்காதி பதிப்பகம் எனும் இரு பதிப்பகங்களையும் நடத்தியுள்ளார். "ஷெரீப் அவர்கள் பல நற்பண்புகளின் உறைவிடமாக இருந்தார். சினிமா உலகத்தில் இருந்தும் அந்த சினிமா உலகின் சீரழிவுகளில் சிக்கிக் கொள்ளாத உயர்பண்பு கவிஞர் கா.மு.ஷெரீப்பிடமே இருந்தது" என்று பாராட்டுகிறார் எழுத்தாளர் ஜெயகாந்தன்.

இன்றைய சமுதாயம், இறையருள் கேட்டல், நபியே எங்கள் நாயகம், பல்கீஸ் நாச்சியார் காவியம், களப்பாட்டு, நீங்களும் பாடலாம், இசைப்பாட்டு, ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழ், அமுதக் கலசம், ஆன்ம கீதம், மச்சகந்தி போன்ற கவிதை நூல்களையும் காதல் வேண்டாம், காதலும் கடமையும், கனகாம்பரம், விதியை வெல்வோம், தஞ்சை இளவரசி போன்ற நாவல்களையும், வள்ளல் சீதக்காதி வரலாறு, சீறாப்புராணச் சொற்பொழிவு, இறைவனுக்காக வாழ்வது எப்படி, இஸ்லாமும் ஜீவகாருண்யமும், இஸ்லாம் இந்துமதத்திற்கு விரோதமானதா, கிழக்கிலுள்ள பிறைகொடி நாடுகள், மகளே கேள், கண்ணகி, விபீஷணன் வெளியேற்றம் போன்ற நூல்களையும் படைத்தார் ஷெரீப்.

1949ஆவது வருடம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து ஜி.ராமநாதன் இசையிலும், டி.ஆர்.சுந்தரத்தின் இயக்கத்திலும் வெளிவந்த மாயாவதி படத்தில்

"அல்லி மலராயிருந்தேன் - என்னிடத்தே
அம்புலியாய் வந்துதித்தான்"

என்ற பாடலோடு தொடங்கிய இவரது பாட்டு பயணம்

1963ஆவது வருடம் கே.வி.மகாதேவன் இசையிலும், கே.பி.சீனிவாசன் இயக்கத்திலும் வெளிவந்த துளசிமாடம் படத்தில் இடம்பெற்ற

"சித்திரைமாத நிலவினிலே - அம்மாடியோ அத்தானுக்கு கோபத்தை பாரு - ஆடும் மயிலே ஆட்டம் எங்கே"

ஆகிய பாடல்களோடு நிறைவுற்றது என்கிறார் கவி கா.மு.ஷெரீப் திரை இசைப் பாடல்களை அற்புதமாக தொகுத்தளித்திருக்கும் கவிஞர் பொன். செல்லமுத்து. மொத்தத்தில் 30 படங்களில் சுமார் 90 பாடல்கள் கவிஞர் எழுதியிருப்பதாக தெரிவிக்கிறார்.

கே.வி.மகாதேவனுக்கு முதல் வெற்றிப்படமாக அமைந்த 'டவுன் பஸ்' படத்தின் அனைத்துப் பாடல்களையும் கா.மு.ஷெரீப் தான் எழுதியிருந்தார். அந்தப் படத்தில் வரும் "சிட்டுக்குருவி சிட்டுக்குருவி தேதி தெரியுமா" பாடல் இன்றும் விரும்பிக் கேட்கப்படும் பாடல்களில் ஒன்று.

கா.மு.ஷெரீப்பின் பாட்டுப் பயணத்தில் முக்கியமான படம் ஜி.ராமநாதன் இசையில் வந்த நான் பெற்ற செல்வம். இன்பம் வந்து சேருமா - பூவாமரமும் பூத்ததே - நான் பெற்ற செல்வம் - மாதா பிதா குரு தெய்வம் - இப்படி இதன் பாடல்களெல்லாம் வெற்றி பெற்றாலும் இப்படத்தில் இடம் பெற்ற வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் பாடல் திசைகளெங்கும் தெறித்தது.

பொன்னான வாழ்வு மண்ணாகிப் போமா (டவுன்பஸ் - 1955), ஏரிக்கரையின் மேலே (முதலாளி - 1957), ஒன்று சேர்ந்த அன்புமாறுமா (மக்களைப் பெற்ற மகராசி - 1957), அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை (அன்னையின் ஆணை - 1958), பணம் பந்தியிலே (பணம் பந்தியிலே - 1960). போன்ற புகழ்பெற்ற பாடல்களைத் தந்தார்.

"கவிஞன் என்பவன் தாய் மாதிரி. ரசிகன் என்பவன் பிள்ளை மாதிரி. தாய் மாதிரி புள்ளைக்காக பத்தியம் இருக்கணும். எதக் கொடுக்கணும் எதக் கொடுக்கக்கூடாதுன்னு ஒரு பொறுப்போட எழுதனும்" என்று சொன்னவர் கவி கா.மு.ஷெரீப்.

மூன்று மனைவி, எட்டு ஆண்கள், 1 பெண் என்று பெரிய குடும்பஸ்தராக இருந்த கவி கா.மு.ஷெரீப் 7.7.1994இல் இயற்கை எய்தினார்.

படைப்பாளிகளுக்கும் - பதிப்பகங்களுக்கும் நன்றி

1. நெஞ்சுக்கு நீதி - கலைஞர் மு.கருணாநிதி - திருமகள் நிலையம்

2. தமிழ் சினிமாவின் கதை - அறந்தை நாராயணன் - நியூ செஞ்சரி புக் ஹவுஸ்

3. திராவிட இயக்கமும் திரைப்பட உலகமும் - க.திருநாவுக்கரசு - நக்கீரன் பதிப்பகம்.

4. முதலாளி - ரா.வேங்கடசாமி - வானதி

5. கவி கா.மு.ஷெரீப் திரை இசைப் பாடல்கள் - கவிஞர் பொன். செல்லமுத்து - மணிவாசகர் பதிப்பகம்.

6. கலைஞர் காவியம் - கவிஞர் வாலி - வாலி பதிப்பகம்.

7. 100/100 திரைக்கவிஞர்கள் - எழுபது வருட திரைப்பாடல் பயணம் - வாமனன் - மணிவாசகர் பதிப்பகம்.

8. தமிழ்த்திரைப்பட வரலாறு - முக்தா வி.சீனிவாசன் - கங்கை புத்தக நிலையம்.

9. எனது வாழ்க்கை அனுபவங்கள் - ஏவி.எம். - ஏவி.எம்.அறநிலையம்

10. பம்மல் முதல் கோமல் வரை - அறந்தை மணியன் - விகடன் பிரசுரம்.

11. திரை வளர்த்த தமிழ் - டி.வி.ராம்நாத் - டி.எ.டி.பப்ளிஷர்ஸ்


12. திரைக் களஞ்சியம் (3 தொகுதிகள்) - கோ.நீலமேகம், மணிவாசகர் பதிப்பகம்.

13. திரை இசை அலைகள், வாமனன், மணிவாசகர் பதிப்பகம்.

குறிப்புகளுக்காக...

குறிப்புகளுக்காக...

குறிப்புகளுக்காக...



நெல்லை ஜெயந்தா

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித் துறையில் உதவி
செயற்பொறியாளராகப்
பணியாற்றி ஓய்வு பெற்று மீண்டும்
தமிழ் வளர்ச்சித் துறையில்
ஒழுங்கிணைப்பு அலுவலராக
நியமிக்கப்பட்டிருப்பவர்.

ஆழமான உணர்வோடு
தஞ்சையைப் பற்றி எழுதிய
கவிதைக்காகவும்
அமுதமான தமிழோடு
தன்னைப் பற்றி எழுதிய
கடிதத்திற்காகவும்
இருமுறை 'முரசொலி'யில்
கலைஞரால் பாராட்டப்பெற்றவர்.

காவியக்கவிஞர் வாலி விருது,
கவிப்பேரரசு வைரமுத்து
கவிஞர் திருநாள் விருது,
ஆனந்தவிகடன் முத்திரை
கவிதைப் பரிசு, பாரத மாநில வங்கி
கவிதைப் பரிசு போன்ற பரிசுகளோடு
மதுரை ஆதினம் அவர்களால் கவிதைச்
சித்தர் என்று பாராட்டப்பெற்றவர்.

பிரிவோம் சந்திப்போம் படத்தில்
பாடலாசிரியராகப் பயணத்தைத்
தொடங்கிய இவர் அரவிந்த் சித்தார்த்தா
இசையில் எழுதிய 'முத்தமிழே நீ வாழ்க'
என்ற பாடல்தான் கலைஞரின்
வரவேற்புப் பாடலாக அமைந்தது.



கலைஞர்
100
1924 - 2023

கலைஞருடைய எழுத்தில், அவருடைய தமிழ்ப் பற்றும் தமிழைக் கையாள்வதில் அவர் பெற்றுள்ள லாவகமும், வரிக்கு வரி காணக் கிடைக்கும். அவருடைய இயல்பான நகைச்சுவை உணர்வு, அவர் பெற்றுள்ள வாதத் திறமை, அவருடைய தமிழ் நடையிலுள்ள வேகம், எல்லாமாகச் சேர்ந்து திரைக்கதை வசனகர்த்தாக்களில் முதன்மை இடத்தை அவருக்குப் பெற்றுத் தந்தது.

திரு. சோ.இராமசாமி
பத்திரிகையாளர்

திரைப்பட ரசிகர்கள், இவரது எழுத்தில் பெரும் ஈடுபாட்டையும், லயிப்பையும் கொண்டிருந்தனர். தயாரிப்பாளர் - டைரக்டர் பெயர்களுக்கு இணையாக, சுவரொட்டிகளில் வசனகர்த்தாவின் பெயரும் இடம்பெற முன்னோடியாக இருந்தவர் கருணாநிதி. கதை வசனம் மு.கருணாநிதி என்று ஒரு படத்தின் விளம்பரம் வந்தாலே அதன் வெற்றிக்கு உத்திரவாத முத்திரை குத்தப்பட்டது.

திரு. டி.வி.ராம்நாத்
ஆசிரியர், பேசும்படம்

மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் ரிகார்சல் ஹாலில் உள்ள பரந்த வெளியில் தனியாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பார். மாலை வேளையில் அவர் இராஜாங்கம் நடத்தும் இடமும் அதுதான். யார் வந்தாலும் அவர் எதிரில் நின்று கொண்டுதான் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும். இதில் விலவிலக்குப் பெற்றவர் கலைஞர் ஒருவர் மட்டுமே.

திரு. ரா.வேங்கடசாமி
எழுத்தாளர்

ISBN 819612052-4

வெளியீடு :
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைஞர் நூற்றாண்டு சிறப்பு வெளியீடு)